# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 11 Issue - 9

செப்டம்பர் 2018 - துல்ஹஜ் - முஹர்ரம் 1439




## நம்முடன்
# கலைஞர்!



## பாதிக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம்

- வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் ஆய்வு



## போலி வாக்காளர் அட்டைகள் பா.ஜ.க வின் புதிய உத்தி

- சையத் அஹ்மத் ஷஹீத்
- RSS.ம் பிரணாப் முகர்ஜியும்
- இஸ்லாமிய வங்கி முறை
- சிலுவை யுத்தம் 2.0



இஸ்லாத்தில் முக்கியம்

# தரமா, எண்ணிக்கையா?

- ஆய்வுக் கட்டுரை

بسم الله الرحمن الرحيم

எனவே, (நபியே! நேர்வழியின் பக்கம் அவர்களை) நீர் அழைத்துக் கொண்டே இருப்பீராக; மேலும், நீர் ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக! அவர்களுடைய (இழிவான) மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்; இன்னும், “அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களை நான் நம்புகிறேன்; அன்றியும் உங்களிடையே நீதி வழங்கும்படியும் நான் ஏவப்பட்டுள்ளேன். அல்லாஹ்வே எங்கள் இறைவனாவான்; அவனே உங்களுடைய இறைவனும் ஆவான். எங்கள் செயல்கள் எங்களுக்கு; உங்கள் செயல்கள் உங்களுக்கு; எங்களுக்கும் உங்களுக்குமிடையே தர்க்கம் வேண்டாம் - அல்லாஹ் நம்மிடையே (மறுமையில்) ஒன்று சேர்ப்பான், அவன் பாலே நாம் மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது” என்றும் கூறுவீராக.(42:15)


நம்முடன் கலைஞர் 1924 - 2018 -04

கலைஞருடன் இக்கட்டான சூழல்களில் சந்திப்பு -08

மனித நீதிப் பாசறையும் கலைஞரும் -10

துக்ளக் -13

துப்பாக்கிக் கேட்ட இந்துத்துவ தலைவர்களுக்கு கலைஞரின் பதில் -15

கலைஞருக்கு இஸ்லாமிய அழைப்பு -16

மீனாட்சிபுரம் மதமாற்றம். யாரால் யாரால்? -19

மதமும் மதச் சார்பின்மையும். பாதிக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம் -22

சிலுவை யுத்தம் 2.0 -30

போலி வாக்காளர் அட்டை. பா.ஜ.க. வின் புதிய உத்தி -33

RSS ம் - பிரணாப் முகர்ஜியும் -38

தரம் தான் முக்கியம் எண்ணிக்கையல்ல! -41

இஸ்லாம், அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி -47

செங்காரை கிராமத்தில் இஸ்லாமிய அழைப்புப் பணி -49

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? -52

சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) -58

இஸ்லாமிய வங்கி முறை - இஸ்திஸ்னா -61

பர்தா எனும் இஸ்லாமிய ஆடை -63

கஷ்மீரில் காணாமல் போனவர்களின் தினம் -64



# வைகறை வெளிச்சம்

ஆகஸ்டு 2018 துல்ஹஜ் - முஹர்ரம் 1439

ஆசிரியர்
**மு.குலாம் முஹம்மது,M.A.,**
Journalism & Communication

துணை ஆசிரியர்
**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**

தனி இதழ்: ரூ.20.
ஆண்டுச் சந்தா
உள் நாடு: ரூ.240.
வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விபரங்களுக்கு;+91 8148129887



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in



கவர் ஸ்டோரி

# நம்முடன் கலைஞர்
# 1924 - 2018

இளம் வயதில், கலைஞர் வருணாசிரமத்திற்கு எதிராக சாதிய அடுக்குமுறைகளுக்கு எதிராக தீவிரமாகச் செயலாற்றினார். இதனால் ஆத்திரமுற்ற சிலர் அவரை அடித்துத் துவைத்தனர். கலைஞர் மூர்ச்சையாகி கீழே விழுந்து விட்டார். அவர் இறந்து விட்டார் என எண்ணி அப்படியே போட்டு விட்டுச் சென்று விட்டார்கள்.

கலைஞரை ஒரு முஸ்லிமே காப்பாற்றி, அவருக்கு லுங்கியும், தொப்பியும் அணிவித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார். ஒய்யாரமான முஸ்லிம் தோற்றம். இதனை சுவை பட பல மேடைகளில் பேசிட காது குளிரக் கேட்டிருக்கிறோம்.

தொடக்கக் காலத்தில், "ஆறுமாத கடுங்காவல்" என்றொரு நூல் கலைஞரின் கைகளிலிருந்து பிரவாகமெடுத்து ஓடியது. அதில், "திராவிட இயக்கத்தை எப்படி வளர்த்தோம்" என்பதைக் கலைஞர் சொல்லியிருப்பார்.

நானும், நாகூர் இ.எம். ஹனிஃபா அவர்களும், கூட்டத்திற்கு அழைப்புகளை கைகளால் எழுதுவோம். நான் ஏணியைப் பிடிப்பேன். நாகூர் இ.எம். ஹனிஃபா

**|| பெரியார், அண்ணா ஆகியவர்கள்
கலைஞரை வளர்த்து
ஆளாக்கியவர்கள்
நாத்திகத்தின்பால் செல்வதற்கு
இவையே காரணம்.
இவற்றிற்கெல்லாம்
பக்கபலமாக தமிழகத்தில்
ஆண்டவன் பெயரால்
இழைக்கப்பட்ட ஆயிரமாயிரம்
கொடுமைகள்-அண்ட
முடியாதவர்கள் தண்டிக்கப்பட
வேண்டியவர்கள் என்று
ஒரு கூட்டம் மக்களை ஒதுக்கியதும்
கலைஞரை, பெரியாரை, அண்ணாவை
நாத்திகத்தில் பிடித்துத் தள்ளிற்று. ||**

அவர்கள் சுவரொட்டியை ஒட்டுவார்கள். சில இடங்களின் அவர் ஏணியைப் பிடிப்பார், நான் சுவரொட்டியை ஒட்டுவேன். பின்னர் கூட்டத்தைக் கூட்டிட சிம்மக் குரலெடுத்து நாகூர் இ.எம். ஹனீஃபா அவர்கள் பாடுவார்கள். கூட்டம் கூடும். நான் பேசுவேன் என அந்த வரலாற்றை நினைவு கூறுவார்.

அதன் பின் இ. எம். நாகூர் ஹனீஃபா அவர்கள் கலைஞருடன் கடைசி வரை இருந்தார். நாகூர் ஹனீஃபா அவர்கள் தாம், தி.மு.க. வின் அத்தனை மாநாடுகளையும் துவக்கி வைப்பார். கருத்தைக் கவரும் பாடல்களைப் பாடி. அவர் உயிரோடிருந்து அவருடைய பாடல் ஒலிக்காமல் ஒரேயொரு மாநாடுதான் நடந்தது. அந்நிலையில் அவர் தம் ஒலியின் வலுவை இழந்திருந்தார்.

அவருடைய இளமைக் காலத்தை வடிவமைத்ததில் தஞ்சையிலிருந்து வெளிவந்த, தாருல் இஸ்லாம் பத்திரிக்கைக்கும் பங்குண்டு என்கிறார், ஆய்வாளர் கோம்பை அன்வர். (Frontline Aug 31, 2018)

அறிஞர் அண்ணா அவர்கள், எனது தொடக்க உரைகளுக்குத் தளம் அமைத்துத் தந்தது, மதரஸாக்களின் பட்டமளிப்பு விழாக்களும், மிலாது நபி விழாக்களும் தான் என்பார். இப்படியொரு மேடையில் தான் திருவாரூரில் கலைஞரும், அண்ணாவும் முதன் முதலில் சேர்ந்தார்கள். (Frontline Aug 31, 2018)

என்னை வளர்த்து ஆளாக்கியது அண்ணா தான் எனக் கலைஞர் சொல்லும் போதெல்லாம், இந்த மேடை மனதில் நிழலாடும் கலைஞருக்கு.

இன்று முரசொலி சரித்திரச் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. தொடக்க நாட்களில் அது முடங்கி விடும் என்றொரு நிலை இருந்த போது கருணை ஜமால் என்ற முஸ்லிம் தான், அவருக்கு முரசொலியை அச்சடித்துக் கொடுத்தார். - கோம்பை அன்வர்; (Frontline; Aug 31 2018)

கலைஞர், நாடெல்லாம், தமிழர் மனக்காடெல்லாம் புகழ்பரப்ப திரை உலகம் மிகப்பெரிய அளவில் உதவி செய்தது. அவரை காலம் சென்ற கவி. க. மு. ஷெரிஃப் அவர்கள் தாம் தியேட்டருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட போது, கலைஞர் தான் சூளைமேட்டில் கடலெனத் திரண்டிருந்த மக்களிடையே பாபரி மஸ்ஜித் பற்றி உரை நிகழ்த்தி, முஸ்லிம்களின் நொந்தப் புண்ணுக்கு மருந்து தந்தார்.

அதேப்போல மறைந்த முதல்வர் ஜெயலலிதா, "மதமாற்றத் தடைச் சட்டம்" என்றொன்றைக் கொண்டு வந்த போது, சென்னை எழும்பூர் மைதானத்தில் உரை நிகழ்த்தி, சிறுபான்மை, கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், உள்ள மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்தார்.

சென்னை தி. நகரில் திடீர் பிள்ளையார் தோன்றி பள்ளிவாசல் கட்டத் தந்த இடத்தை ஆக்கிரமித்த போது, அதனை அகற்றி அங்கே பள்ளிவாசல் கட்டிட ஆவண செய்தார்.

வாழ்ந்த கடைசி காலத்தில் அவரை தி.மு.க. வின் தலைவராக அறிவிக்கும் தேர்தல் குழுவின், தலைவராக குமரி மாவட்ட ஜி.எம்.ஷா அவர்கள் தாம் இருந்தார்கள்.

இப்படி தொடக்கம் முதல் முடிப்பு வரை கலைஞருடன் நாமும், நம்முடன் கலைஞருமிருந்தார். அதனால் இட ஒதுக்கீடு அவர் நமக்குச் செய்த நன்றிக் கடன்.

**கவிக்கோ அப்துல் ரஹ்மான்**

கவிக்கோ அப்துல் ரஹ்மானின் கவிதைகளின் முதல் ரசிகர் கலைஞர்.

"வீழ்ந்தாலும் விதை போல் வீழ்வேன்" என்றச் சொற்றொடரால், பெரிதும் கவரப்பட்டவர் கலைஞர். அதனால் அவர் காலமெல்லாம் கவிக்கோவைத் தன்னோடு வைத்திருந்தார்.

இறைவன் என்னை அழைத்து உனக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டால்,

"கவிக்கோ அப்துல் ரஹ்மானைத் தா" எனக் கேட்பேன் என்ற அளவுக்கு அன்பு பாராட்டியவர்.

இப்படி எப்போதும் கலைஞர் நம்மோடு இருந்தார்.

கலைஞரின் கருத்துக் களம் பெரியார். அவர் இங்கே தொகுத்த ஜாதியத்திற்கு எதிரான பெரும் போரில், ஜாதியத்திற்கு தீர்வு,

"இன அழிவு ஒழிய, இஸ்லாமே நன்மருந்து" என்றார்.

இதில் திராவிட இயக்கத்தவர்கள் அனைவருக்கும் ஓர் அரிய, அழகியச் செய்தி இருக்கின்றது. அதை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**MGM**



# கலைஞர்

நல்ல தமிழ் எழுதவும் பேசவும், தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கற்றுத் தந்தார்.

தெளிவு, வீரம், பொங்கிப் பிரவாகமெடுக்கும் உணர்ச்சிப் பெறுகும் எழுச்சி! இவருடைய தமிழின் தனித் தன்மைகள். மட்டுமில்லாமல் தொடக்கக் காலத்திலிருந்தே தனது கலை உலகப் படைப்பால், தனது இயக்கக் கருத்துக்களைப் பதிய வைத்தார்.

*1969* நாகர்கோவில் நாடாளுமன்ற தேர்தலில், தேர்தல் பொறுப்புகளைக் கவனித்திட கலைஞர் வந்திருந்தார். காங்கிரஸ் வேட்பாளாராக காமராஜர் போட்டியிட்டார். அவரை எதிர்த்து தி.மு.க. வேட்பாளாராக எம்.சி. பாலன்.

தேர்தல் களத்தில் காமராஜரை எதிர்ப்பது ஒரு ஜனநாயகக் கடமை, எனக் கருதியது தி.மு.க. அல்லாமல் காமராஜரை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்குமில்லை. நிச்சயமாக அண்ணா விரும்பவில்லை.

ஆனால், உண்மையான தேர்தல் களத்தில் கலைஞர் உயிருக்கே பல அச்சுறுத்தல்கள். எந்த நேரமும் தாக்கப்படலாம் என்ற நிலை.

இந்தப் பதட்டமான நிலையிலும், கலைஞர் மீது யாரும் தாக்குதலை நடத்திடாமல் தடுக்க எங்கள் ஊர் சூரங்குடியிலிருந்து வாலிபர்கள் திரண்டு செல்வார்கள். அவர்களை காலமெல்லாம் தி.மு.க. வுக்கு உழைத்த ஜி.எம்.ஷா அவர்கள் தாம் தலைமை ஏற்று அழைத்துச் செல்வார்.

பயங்கர பதற்றத்தோடு தேர்தல் முடிந்தது. தி.மு.க. தோற்றுப் போகும் என்பது முடிவான ஒன்று. ஆனாலும் தி.மு.க. வுக்கு வாக்களித்த மக்களுக்கு சென்னை செல்லும் முன் நன்றி சொல்லிட வந்தார் கலைஞர்.

எங்கள் ஊரை அவர் வந்தடைந்த போது இரவு ஒரு மணி இருக்கும். அக்கிராமத்தை இருள் கவ்வியிருந்தது. ஒரே ஒருத் தெரு விளக்குத்தான் ஒளிர்ந்துக் கொண்டிருந்தது. எந்த அச்சமுமில்லாமல் காரை விட்டு இறங்கி குழுமியிருந்த எங்களுக்குப் பக்கத்தில் வந்து நன்றி சொன்னார்.

சற்றுத் தொலைவில், ஒரு வீட்டுத் திண்ணையில் சில பெண்களும், ஆண்களும் தங்கள் வீட்டு வெளிச்சத்தில், கலைஞரை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

கூடி நின்ற மக்களுக்கு நன்றி சொல்லிவிட்டு, தூரத்தில் திண்ணையில், நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து விட்டார் கலைஞர்.

அந்த இருளிலும் அந்த திண்ணையில், குழுமி நின்ற மக்களை நோக்கி நடந்தார். சிலர் அவரை தடுக்க முயன்றனர். சூழ்ந்திருந்த இருளைக் காட்டி!

கலைஞர் சற்றும் கவலைப் படாமல் நடந்தார். அந்த மக்களுக்கும் நன்றி சொல்லி விட்டு திரும்பினார். பின்னர் புறப்பட்டார்.

எங்கள் ஊரிலிருந்து நகர்புறமான நாகர் கோவில் வரை அவருக்கு ஆபத்துக்கள் நிறைந்த இடங்கள் அதிகம். அஞ்சாமல் சென்றார்.

திராவிடக் கொள்கைகளைத் தூக்கிப் பிடித்ததால் அவர் வாங்கிட வேண்டிய அடியையும் உதைகளையும் இளமையிலேயே வாங்கியிருந்தார்.

அந்த நிகழ்வுகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த எங்களைப் போன்ற இளைஞர்களின் மனதில் இவை ஆழமாகப் பதிந்திருந்தன.

இன்றும் (46 ஆண்டுகளுக்குப் பின்பும்) நினைவை விட்டு நீங்கிடவில்லை. கலைஞரின் அந்த இளமையும், இனிய நினைவுகளும் இதயத்தை இன்னும், இன்றும் வருடி நிற்கின்றது.

# என் வாழ்வில் எதிர்ப்பட்ட அவருடைய Quick win என்ற சமயோஜித புத்தி

அப்போது கலைஞர் எதிர் கட்சித் தலைவர். சென்னை புல்லாரெட்டி அவென்யூவில் உரையாற்றினார். கலைஞர் விலைவாசிகள் உயர்வைப் பற்றி விரித்துரைத்தார்.

அரிசி விலை கிலோ பத்து ரூபாய் ஆகிவிட்டது என்றார். கூட்டத்திலிருந்து எழுந்து வந்த பல குரல்கள், பதினோரு ரூபாய் என்றன.

கலைஞருக்கு உண்மையான அரிசி விலை தெரிந்திட வில்லையா? என்று நாம் நினைக்கத் தலைபடும் முன் இப்படிக் கூறினார் கலைஞர்,

"பார்த்தீர்களா! அதற்குள் ஒரு ரூபாய் ஏறி விட்டது".

கலைஞரின் சமயோஜித அறிவு, அனைவரையும், அனைத்தையும் மறந்து விட்டு கரவொலி எழுப்பி வியந்து பாராட்டிடச் செய்தது.



## சரியான தகவல்களைத் தருவதற்கு கலைஞர் எடுத்த முயற்சி

கலைஞர் தன் உரைகளைக் கேட்க வருபவர்களுக்கு மிகவும் துல்லியமான தகவல்களைத் தந்திட வேண்டும் என்பதில் மிகவும் துல்லியமாக இருப்பார். இதற்காக தன் உரைகளில் சிலப் பகுதிகளை எழுதி வாசிப்பதற்கும் சற்றும் தயங்கிட மாட்டார்.

எல்லாப் பேச்சாளர்களும் கலைஞரிடம் பாடம் பயின்றிட வேண்டும். இதை நான் அவருடைய உரை ஒன்றை நேரில் கேட்ட போது உணர்ந்தேன்.

இலங்கையில் தமிழ் ஈழத்திற்கான போர் முழு வீச்சில் நடந்து கொண்டிருந்த நேரம் அது! அங்கே எல்.டி.டி.இ. லிபரேசன் டைகர்ஸ் ஆஃப் தமிழ் ஈழம் மட்டும் போர்க்களத்தில் நிற்கவில்லை. டெலோ டெஸோ போன்ற அமைப்புகளும், இன்னும் சில அமைப்புகளும் தமிழ் ஈழத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தன. இந்த அமைப்புகளின் தலைவர்களின் பெயர்களை மனதில் வைத்துக் கொள்வது சற்றுக் கடினம். ஓர் அமைப்பின் தலைவர் பெயரை இன்னொரு அமைப்பின் பெயரோடு இணைத்துச் சொல்வது தமிழகத்தில் சாதாரணமாக நடந்து கொண்டிருந்தது.

கலைஞர், பெரியார் திடலில் பேச வந்தார். உரையின் ஊடே எல்லா அமைப்புகளின் பெயர்களையும், தலைவர்களின் பெயர்களையும் எழுதிக் கொண்டு வாசித்தார். அனைவரும் குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

தனது பேச்சுக்களை மக்கள் மட்டு மில்லாமல் ஊடகங்களும் கவனிக்கின்றார்கள். நம்புகின்றார்கள். ஆகவே தருகின்ற தகவல்கள் துல்லியமாக இருந்திட வேண்டும் என்பதில் கலைஞர் மிகவும் கவனமாக இருந்தார்.

நாம் தாம் கீர்த்திமிக்கப் பேச்சாளராயிற்றே, நாம் குறிப்பு வைத்துக் கொண்டு பேசினால் அது சற்றுக் கவுரவக் குறைவாகுமே என்றெல்லாம் கலைஞர் எண்ணியதில்லை.

இப்படி எத்தனையோ மேடைகளில் அவர் குறிப்புகளை வைத்துக் கொண்டு படித்துக் காட்டியதை பார்த்திருக்கின்றேன்.

MGM

# கலைஞருடன் இக்கட்டான சூழல்களில் சந்திப்பு

அன்றைய நாட்களில் தி.மு.க. தேர்தல்களில் வென்று ஆட்சியில் அமர்ந்தால், உடனேயே முஸ்லிம்கள் தங்களுடைய ஆட்சி வந்து விட்டதாகவே எண்ணிக் கொள்வார்கள். ஆனால் 1998 இல், பிப்ரவரி 14இல் அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி நடைபெற்றது. கோவை மாநகரில் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. இது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முந்தைய நாள் நடந்தது. இதனால் பெரும் பாதிப்பிற்கு உள்ளானார் கலைஞர்.

இந்தக் குண்டு வெடிப்புகள் பாரதீய ஜனதா கட்சிக்கு அகில இந்திய அளவில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்தது. கோவையில் சமூக நல்லிணக்கம் பெரிய அளவில் பாதிக்கப் பட்டது. கலைஞருக்கு நிர்வாகத் துறையில் அவப்பெயர். ஆனால் அதற்கு பின்னால் தெஹல்காவின் தாருண் தேஜ்பால் அவர்கள், இந்தக் குண்டு வெடிப்புகளின் மூளையாகச் செயல்பட்டது அதிகார வர்க்கம் தான் என்பதை ஓர் ஆய்வின் மூலம் சுட்டிக் காட்டினார்.

அவருடைய முழு ஆய்வையும், நாம் வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம். விரிவான தகவல் களுக்குப் பார்க்க வைகறை வெளிச்சம் பிப்ரவரி 2017. பின்னர் இந்த முழு உண்மையையும் ஒன்றாய்க் கோர்த்து, "கோவை கலவரத்தில் எனது சாட்சியம்" என அன்றைய சட்டமன்ற உறுப்பினர், பாசத்திற்குறிய சமுதாயத் தொண்டன் A.V. நாசர் அவர்கள் ஒரு நூலை வெளியிட்டார்கள்.அதில் கோவை குண்டு வெடிப்புகளில், காவல்துறை உளவுத்துறை ஆகியவற்றின் பங்களிப்பை தத்ரூபமாக விளக்கி யிருந்தார். எத்தனையோ மிரட்டல்கள் காவல் துறையிலிருந்து அவருக்கு வந்தது.

நூலை வெளியிட்ட நாட்களில் அத்தனையையும் துணிவுடன் எதிர் கொண்டார். நூலை புழக்கத்தில் விட்டார். விட்டுக் கொண்டிருக்கின்றார். அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளையும் நல்ல வாழ்க்கையையும் தந்தருள் புரிவானாக. அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி. நாசர் அவர்களின் சீரிய சேவை இப்போது ஒரு நூலை வெளியிட்டதோடு நிற்கவில்லை. கோவையில் நடந்த குண்டு வெடிப்பு களுக்கான பழியை முஸ்லிம்களே சுமந்தார்கள். இந்தப் பின்னணியில் முஸ்லிம் இளைஞர்கள் கொத்துக் கொத்தாக கைது செய்யப்பட்டார்கள். அதில் பல இளைஞர்கள் குண்டு வெடிப்போடு கிஞ்சிற்றும் சம்மந்தப் படாதவர்கள். அவர்களும் கைது செய்யப் பட்டனர்.

கோவை குண்டு வெடிப்பு நடந்தது 1998 பிப்ரவரி 14ஆம் நாள். 1997ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடந்த கலவரத்தின் போது சிறைபிடிக்கப்பட்டவர்களும் 1998 பிப்ரவரி 14ஆம் நாள் சிறையிலிருந்தார்கள் . இவர்களும் குண்டு வெடிப்புகளில் இணைக்கப் பட்டார்கள். இந்த உண்மைகளைக் கலைஞர் பார்வைக்கு கொண்டு வந்திடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிடவும், சகோதரர் நாசர் அவர்கள் தலைமையில் ஓர் அமைப்பை நிறுவினோம். அதன் பெயர் தான் (PLEA) PANEL FOR LEGAL AND EDUCATIONAL AID - கல்வி மற்றும் சட்ட உதவிகளுக்கான மையம் என்பது அதன் விரிவாக்கம்.

இதில் ஏ.வி. நாசர் MLA அவர்கள் தலைவர். நான் (MGM) அதன் செயலாளர். வழக்கறிஞர் ஜாவித் அவர்கள் பொருளாளர். காலஞ்சென்ற ஹாஜி PSM. அப்துல் காதர் அவர்கள் இந்த அமைப்பில் பெரிய உதவிகளைச் செய்தார்கள்.இந்த உதவிகள், எடுத்துக் கொண்ட சிரமங்கள் இவைகளை சொல்லி மாளாது. அதேப்போல காலஞ்சென்ற S.M. பாஷா அவர்கள் காட்டிய ஆர்வம் அலாதியானது. ஹாஜி S.M. பாஷா அவர்கள் உற்சாகம் பொங்கும் ஒரு மனிதர். (PLEA) பணியின் சார்பில் அப்பாவிகள் கைதுச் செய்யப் படுவதை நிறுத்தவும், கை செய்த அப்பாவிகளை விடுதலைச் செய்யவும், பல முயற்சிகளை மேற்கொண்டோம்.

### சிறைவாசிகள் பற்றிய கணக்கெடுப்பு

அதில் முத்தாய்ப்பான முயற்சி, தமிழகத்தின் சிறைச்சாலைகளில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்கள். எப்போது கைதானார்கள். எத்தனை நாட்களாக சிறையில் இருக்கின்றார்கள். கோவை குண்டு வெடிப்பின் போது அவர்கள் எந்த சிறையில் இருந்தார்கள் என்ற தகவல் களைச் சேகரிப்பதாகும். இதில் சட்டமன்ற உறுப்பினர் தலைமையிலான "பிளீ" அமைப்பு எடுத்துக் கொண்ட முயற்சி அலாதியானது. மொத்தம் 260 சிறைக் கைதிகள், முஸ்லிம் கைதிகளின்

தகவல்களை சேகரித்துத் தந்தோம்.

இந்தத் தகவல்களை ஒன்று திரட்டிய பின் அவற்றை அறிக்கையாகத் தயாரித்தோம். ஒவ்வொரு பெயருக்கு ஒரு தனி (Column) கட்டம். பார்த்தவுடன் புரியும். படிப்பதற்கு நேரம் பிடிக்காது என்ற அளவில் அந்த அறிக்கையை எளிதாக்கினோம். அறிக்கையை கலைஞர் அவர்களிடம் தந்திட வேண்டும். கோவை குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளை விடுதலை செய்ய இசைவு கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் அறிக்கையைத் தயார் செய்தோம்.

**கலைஞர் அவர்களிடம் நேரம்**

அதன் பின் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நேரம் வாங்கிட வேண்டும். இதற்காக பல முயற்சிகளை சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்கள் மேற் கொண்டார்கள். கோவை குண்டு வெடிப்புகள் சம்பந்தமாக கலைஞர் யாரையும் சந்திக்க விரும்பவில்லை என்ற செய்திகள் வந்தன. இந்த முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கும் போது சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்களின் புவனகிரி தொகுதியில் சிலர் சாராயம் குடித்து விட்டு இறந்து போனார்கள். இதனை முன் நிறுத்தினார் சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்கள். தொகுதி குறித்து பேசிட முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நேரம் வாங்கி விட்டார்கள்.

முதலமைச்சரை சந்திக்க திரண்ட அணி மிகவும் பெரிதாகவே இருந்தது. எல்லா அமைப்பைச் சார்ந்தவர்களும் அணி திரண்டு விட்டார்கள். சென்றோம் கோபாலபுரத்திற்கு. மாடியில் கலைஞர் இருந்தார்கள். சென்ற எல்லோருக்கும் இருக்கைகள் இல்லை. பலர் நின்றிட வேண்டிய நிலை. முதலில் அமர்ந்திருந்து மனுவைப் படித்த கலைஞர், நாங்கள் நின்று கொண்டிருந்ததைக் கண்டதும் கலைஞர் அவர்களும் இருக்கை யிலிருந்து எழுந்து நின்றுக் கொண்டார். எஞ்சியப் பக்கங்களை நின்றுக் கொண்டே படித்தார். கலைஞரின் இங்கிதம் எல்லோரையும் நெகிழ வைத்தது.

முதலில் சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்களின் தொகுதி பிரச்சினையைச் சொல்லவில்லை. கோவைக் குண்டு வெடிப்பில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். பல அப்பாவிகள் ஏற்கனவே சிறை பிடிக்கப்பட்டுள்ளார்கள் என்றது அறிக்கை. அறிக்கையைப் படித்த கலைஞர் “அப்படியொன்றும் அப்பாவிகள் சிறை பிடிக்கப்பட வில்லை என்றார். கலைஞர் தொனியில் சற்றே சினம் தோய்ந்திருந்தது. ஆதாரங்களை உங்கள் கைகளில் தந்திருக் கின்றோம் என்றோம். நின்றுக் கொண்டே வேகமாக மீள் பார்வை ஒன்றை விட்டார். இஃது எல்லோரையும் மலைக்கச் செய்தது. “அப்படியொன்றும் அப்பாவிகள் சிறை பிடிக்கப்படவில்லை.” என்பதில் தொனித்த சினம் சற்றே குறைந்திருந்தது பட்டியலை மறுமுறை பார்த்த பின் சொன்ன பதிலில்.

பின்னர் தன்னுடைய தனிச் செயலாளர் ஷன்முக நாதனிடம் தந்து விட்டு “இதை மாலதியிடம் கொடுத்து என்ன வென்று பார்க்க சொல்லுங்கள்” என்றார். சகோதரி மாலதி அவர்கள் அப்போது உள்துறை செயலாளர். குண்டு வெடித்த சில நாட்களுக்குள்ளாலேயே கலைஞரை சந்தித்து அப்பாவிகளும் கைதுச் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்ல முடிந்தது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

பின்னர் தான் சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்கள் தந்த “குடித்து விட்டு இறந்தவர்களின் நிவாரணம்” பற்றிய மனு பரிசீலனைக்கு வந்தது. குடித்து விட்டு இறந்தவர்களுக் கெல்லாமா? பணம் கொடுப்பார்கள் என்றார் கலைஞர். சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்கள் தன் தொகுதி மக்களுக்காக உரிமையோடு வாதாடிக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் கோவையில் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள் விவகாரத்தில் ஏதாவது நடக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வந்து விட்டோம்.

கலைஞருக்கு நாடாளுமன்ற சீட்கள் முக்கியம். அதில் கோவை குண்டு வெடிப்பால் நஷ்டம். எனினும் நாங்கள் கொடுத்த மனுவை ஏற்றுக் கொண்டார். அப்போதோ, அதன் பின்னரோ நாங்கள் அப்பாவிகள் கைது செய்யப் பட்டிருக்கின்றார்கள் எனச் சொன்னதை, பொய் என்றோ அப்படி ஏதும் நடக்கவில்லை என்றோ சொன்னதில்லை. ஆனால் உளவுத் துறையினர் கோவை சிறைவாசிகளை வெளியே விடுவது அவருடைய, கலைஞருடைய உயிருக்கே ஆபத்து என்பதாக தகவல் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

அதனால் நாங்கள் கொடுத்த மனுவில் எதுவும் நடக்கவில்லை என்பதை அறிந்தோம். இது தொடர்பாக அப்போது கலைஞரிடன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்களையும் பல முறை சந்தித்தோம். அவரும் அரசுக்குக் கிடைக்கும் தகவல்கள் வேறு வகையாக இருக்கின்றன எனக் கூறிவிட்டார்.

**MGM**

# மனித நீதிப் பாசறையும் கலைஞரும்

வேகமாக தமிழகத்தில் வளர்ந்து கொண்டிருந்த ஒரு போராளிகளின் பாசறை மனித நீதி பாசறை. இந்தப் பாசறையை ஒழிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு செயல் பட்டார்கள் உளவுத்துறையினர்.

பல பொய்களையும் புணைந்துரைகளையும் பத்திரிக்கைகளுக்குத் தந்து கொண்டே இருந்தார்கள்.

அது மட்டுமல்ல பல கட்டுரைகளை ஆங்கில நாளிதழ்கள், தமிழ் நாளிதழ்கள், வார பத்திரிகைகள், வாரம் இருமுறை பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் இவற்றில் இடம் பெறச் செய்தார்கள்.

அதாவது சில கட்டுரைகளை காவல் துறையே தயார் செய்து பத்திரிகைகளில் இடம் பெறச் செய்தார்கள்.

இதனை நான் அப்போது POLICE JOURNALISM - காவல் துறையின் இதழியல் என அழைத்தேன். மனித நீதிப் பாசறையைத் தொடங்கி அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த எனக்கு பெரிய நெருக்கடிகளைத் தந்தார்கள். அவற்றையெல்லாம் எதிர் கொண்டு வென்று வந்தோம்.

இடை விடாமல் பத்திரிக்கைகளில் வந்து கொண்டிருந்த தவறான செய்திகளுக்கு விளக்கம், மான நஷ்ட வழக்கு என எங்கள் போர் பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தோம்.

### மான நஷ்ட வழக்கு

இந்த வகையில் தினமலருக்கு எதிராக ஒரு வழக்கை நடத்தி ஒரு இலட்ச ரூபாய் நஷ்ட ஈடுக்கான தீர்ப்பை பெற்றோம். (சுற்றியிருந்த துரோகிகள் அந்த பணத்தைப் பெற முடியாமல் தீர்ப்பைத் திருடி சென்று விட்டார்கள். அதனால் அந்தப் பணத்தை இன்றளவும் வாங்கிட இயலவில்லை.)

### அதிர்ச்சியால் ஒரு செய்தி

ஆனால் திடுதிப்பென 2006 ஜூலை திங்கள் 22ஆம் நாள் ஒரு பெரும் செய்தியை அனைத்து ஊடகங்களும் "Flash News" உடனடி செய்தியாக வெளியிட்டன. இதில் NDTV (என்.டி.டி.வி) மிக முக்கியமான பங்கு வகித்தது. அந்த செய்தி மனித நீதி பாசறையைச் சார்ந்தவர்கள் ஐந்து பேர் கைது. இவர்கள் கோவை மாவட்டத்தின் முக்கிய எட்டு இடங்களில் குண்டு வைத்திட சதித்திட்டம் தீட்டி நிறைவேற்றிட இருந்தவர்கள் என்பதாகும்.

இந்தச் செய்தியைப் பார்த்த மனித நீதிப் பாசறையைச் சார்ந்தவர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் உடனே NDTV - என்.டி.டி.வி. அலுவலகத்தைத் தொடர்பு கொண்டேன்.

இதற்கு NDTV - என்.டி.டீ.வி இன் சாம் டேனியல் (இவர் சென்னை செய்தி பீரோ வின் தலைவர்). கோவை உளவுத்துறை நடத்திய பிரஸ் மீட்டில் தான் இதைச் சொன்னார்கள் என்றார்.

நான் "செய்தி உண்மையல்ல நிறுத்துங்கள்" என்றேன். உளவுத்துறை எங்கேயும் பிரஸ் மீட் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை நடத்த மாட்டார்கள். அதற்கு சட்டத்தில் இடமில்லை.

அவர் சாம் டேனியல் "இதைச் சொல்ல நீங்கள் யார்?" எனக் கேட்டார்.

"நான் தான் மனித நீதி பாசறையின் தலைவர்" என்றேன்.

"அப்படியானால் நான் உங்களை நேரில் சந்திக்க வேண்டும் என்றார். நேரில் வந்தார். அது ஒரு பேட்டி.

### NDTV பேட்டி

அதில் கோவை காவல் துறையில் கொட்டை போட்டு காவல் துறையிலிருந்து கொண்டே கோவையில் ஒரு பெரும் தொழிலதிபராகவும், உளவுத் துறை அதிகாரி யாகவும் கோலோச்சும் ரத்தினசபாபதிக்கும், மனித நீதி பாசறைக்கும் உள்ள பகையை தெளிவுப்படுத்தினேன்.

அந்தப் பகை கோவை உளவுத்துறையில் மட்டுமல்லாமல் காவல் துறையிலேயே ஒரு சர்வதிகாரியாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் ரெத்தின சபாபதி மீது மனித நீதி பாசறை பதிவு செய்த மனித உரிமை மீறல் புகார். இந்தப் புகாரின் மீது மனித உரிமைகள் ஆணையம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அவரது கொட்டம் ஆட்டம் கண்டது. உடனேயே அவர் மனித நீதி



கோவையில் *21.07.2006* அன்று கைது செய்யப் பட்டவர்களுக்கும் மனித நீதிப் பாசறைக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை. மனித நீதிப் பாசறைக்கும் கோவை காவல் துறையினர் சொல்வது போன்ற ஈனச் செயல்களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை.

இது போன்ற செயல்களில் மனித நீதி பாசறை எப்போதும் ஈடுபட்டதில்லை. ஈடுபடவும் செய்யாது.

**- மனித நீதிப் பாசறை தலைவர் மு.குலாம் முஹம்மது**

பாசறையை ஒரு தீவிரவாத அமைப்பாகக் காட்டிட முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவே கோவையில் நடக்கும் வெடிகுண்டு நாடகம். அவரே முன்நின்று சில வெடிக்காத குண்டுகளை மனித நீதி பாசறையின் உறுப்பினர்களிடமிருந்து கைப்பற்றியதாகப் பொய் சொன்னார். எனது பேட்டியை என்.டி.டி.வி. ஏழுமுறை ஒளிபரப்பியது.

## கலைஞருடன் சந்திப்பு

ஊடகங்கள் அனைத்தும், தினப் பத்திரிக்கைகள் அனைத்தும், வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக பலப்பல கட்டுக் கதைகளை கட்டவிழ்த்து விட்டன. இந்நிலையில் தாம் நாம் முதல்வர் கலைஞர் அவர்களை சந்தித்து உண்மையை எடுத்துரைத் திடுவது என முடிவு செய்தோம்.

உடனேயே தி.மு.க. அலுவலகச் செயலாளர் T.K.S. இளங்கோவன் வழியாக நேரம் வாங்கினார்கள் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள். உண்மையை உரக்கச் சொன்னோம். ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பையும் நடத்தினோம்.

## சுவரொட்டி

இதனிடையே தமிழகமெங்கும் சுவரொட்டி களை ஒட்டி, “மனித நீதி பாசறையின் மீது வீண் பழி போடும், கோவை காவல்துறையின் மீது தமிழக அரசே நடவடிக்கை எடு.”

எனக் கோரினோம். (முதல்வர் கலைஞர் சந்திப்பு பற்றி பேராசிரியர் இஸ்யாஸ் ரியாஜி அவர்களின் பதிவைப் பார்க்கவும்.) எங்கள் சந்திப்பிற்கு பின் தன் சொந்த முயற்சியில் உண்மையைக் கண்டறிந்த கலைஞர் அவர்கள் ரெத்தினசபாபதியை இட மாற்றமும், பணிமாற்றமும் செய்தார்கள்.

கோவை காவல்துறை ஆணையர் அவர்களை எந்த பணியையும் தராமல் விடுப்பில் விட்டு விட்டார். நெடியதொரு காலம் அவர் Compulsory Leave - கட்டாய விடுமுறையில் இருந்தார்.

## நீதியின் பக்கம் கலைஞர்

கலைஞர் அன்று நீதியின் பக்கம் நிற்கவில்லை என்றால் எல்லோரும் தூற்றுகின்ற ஓர் இயக்கமாக மனித நீதி பாசறை ஆகியிருக்கும். இதனை இன்றளவும் நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

அப்போதும் நாங்கள் கலைஞர் அரசுக்கு நன்றி சொல்லி சுவரொட்டிகளைப் போட்டோம். கலைஞரை மீண்டும் நேரில் சந்தித்து நன்றி சொல்லிட விழைந்தோம். நேரம் வாங்கிடும் பொறுப்பை மீண்டும் பேரா. இல்யாஸ் ரியாஜி அவர்களிடம் ஒப்படைத்தோம்.

பேரா. இல்யாஸ் ரியாஜி அவர்கள் தி.மு.க. தலைமை கழகச் செயலாளர் T.K.S. இளங்கோவன் அவர்களிடம் பேசினார். அவர்கள் டெல்லியில் தமிழ் நாடு ஹவுஸ் - தமிழ் நாடு இல்லத்தில் முழுமையாக உங்களைப் பற்றித்தான் பேச்சு நடை பெறுகின்றது.

இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் இன்றைய தினம் முகப்புக் கட்டுரையே உங்களைப் பற்றியதும், உங்கள் அறிவகத்தைப் பற்றியதும் தான் எனக் கூறினார்கள்.

அதன் பிறகு டெல்லி இந்தியன் எக்ஸ்பிரஸூடன் ஒரு நீண்ட சண்டை நடந்தது. இறுதியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் மன்னிப்புக் கேட்டது. ஆனால் இப்போதும் கலைஞர் நேரம் தந்தார். நாங்கள் கலைஞருக்கு அதாவது அன்றைய தமிழக அரசுக்கு நன்றி சொல்லும் சுவரொட்டியுடன் சென்றோம். T.K.S. அவர்கள் இதனை கலைஞர் ஏற்கனவே பார்த்து விட்டாராம். உங்கள் நன்றிக்கு நன்றி எனக் கூறி தேனீர் தந்து அனுப்பி வைத்தார்.



**நீங்கள் செய்யாவிட்டால் என்ன? நாங்கள் செய்து வைத்து உங்கள் மீது பழி போடுவோம். (சொல்லாமல் செய்யும்)**

**கோவை நுண்ணறிவுப் பிரிவு உதவி ஆணையர் ரத்னசபாபதி**

**MGM**

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

# நாசவேலைக்கு சதித்திட்டம்
# தீவிரவாதிகள் சேலத்தில் பதுங்கல்
## சிறப்பு புலனாய்வு படை முற்றுகை



---

# We are not fundamentalists: MNP

Express News Service

Chennai, Oct 29: Manitha Neethi Pasarai (MNP) today denied that they were a fundamentalist group and said that they would approach Chief Minister Jayalalithaa to urge her to drop the cases, framed under the National Security Act, against the 15 persons including three women who were arrested at Nellikuppam in Cuddalore District.

Addressing a press conference on Friday, M Gulam Muhammed, president, MNP and managing trustee of Tamil Nadu Development Foundation (TNDF), an NGO, claimed that the organisation (MNP), worked for Human Rights and the police allegation that they were a fundamentalist gang was a mere concoction. TNDF had actually floated the MNP, four years ago.

MNP had been organising a series of public and street corner meetings over the years and the police had not restrained them from holding their meetings.

"We want an independent body to investigate into the issue. The police arrested the three women, Pashira, Fatima Beevi and Chitra Rahina, on October 26, but failed to mention their names in the FIR. When we were about to move a habeas corpus petition in the HC, the police recorded the arrests and came out with this shocking story on Thursday." He also said, "The recent arrest was most likely instigated by the BJP, because the MNP worked against BJP candidates during the Lok Sabha elections in May."

NEW EXPRESS 30/10/04

---

# Top cop shifted

Express News Service

Coimbatore, Aug 1: Assistant Commissioner of Police (Intelligence) Rathinasabapathy has been transferred to Ooty from Coimbatore city.

He will assume charge as DSP (Crime Branch) in Ooty.

The transfer comes in the wake of the arrest of five suspects on charges of conspiring to trigger blasts in the city. Rathinasabapathy had been instrumental in effecting the arrests.

On July 21, the intelligence cell of the police had unearthed the conspiracy and arrested Haroon Basha, his brother Malik Basha, Athikur Rehman, Samsudheen and Ravi alias Tipu Sultan. Police also seized some explosives from them.

Soon after the arrests, Muslim organisations, including the Tamil Nadu Muslim Munnetra Kazhagam (TMMK), came out in the open alleging that the case was foisted and demanded a CBI inquiry into the arrests.

---

30/10/04

# நெல்லிக்குப்பம் சம்பவத்திற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை
# முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து நாங்கள் விளக்கம் அளிப்போம்
## மனிதநீதி பாசறை தலைவர் குலாம் முகம்மது பேட்டி

---



# சிமிக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை: எம்.என்.பி.,

---

CHENNAI

WEDNESDAY, AUGUST 2, 2006

# Explosives haul case may go to SIT

V.S. Palaniappan

**COIMBATORE:** The case relating to the arrest of five persons carrying explosives and documents on July 21 at three different places here is likely to be transferred to the Special Investigation Team (SIT) of the State Crime Branch CID (CB-CID).

**The police, after seizing 400 gm of potassium chlorate mixture and components for making improvised explosive devices (IEDs), had said that the group planned to trigger low intensity explosions at a number of places targeting Hindu leaders. Soon after their arrest, the Madurai-based Vaigai Advocates Group, the Tamilnadu Muslim Munnetra Kazahagam and the Jamaath had charged the police with fabricating a case with the help of an informant. They demanded an investigation by the Central Bureau of Investigation. They had accused also an officer of trying to be vindictive. The officer, who led the intelligence wing in the operations, was transferred out of Coimbatore on Monday night. Following reports about affiliation of the accused to a forum of a minority outfit, president of the Manitha Neethi Pasarai, M. Ghulam Mohammed, had clarified that it had no links with them.**

Police sources said prima facie they were convinced of the unlawful activities and intentions of the accused, which stood vindicated by the material seized.

---

to mark the golden jubilee of … dairy products, vegetables, fruits and poultry through intensive … achieve its goals by 2010.

# Arrests, arms seizure bring group under police scanner

By Our Special Correspondent

CHENNAI, NOV. 1. The State intelligence and local police are investigating the activities of the Manitha Neethi Pasarai (MNP) at Nellikuppam in Cuddalore district, following the arrest of 15 persons and seizure of weapons from them last week.

The police stumbled on a unit of the group at Nellikuppam while investigating a case of attempted murder and religious conversion, said a senior officer.

The officer said Osaimani of Nellikuppam had fallen in love with the daughter of a person working in the Maldives. The boy and the girl subsequently eloped. But her father, on his return to India on leave, forcibly brought the girl back.

Osaimani approached some persons for help in getting the girl back. He was asked to convert himself, which he did changing his name to Mohammed Sultan.

### Kidnap attempt

On October 26, a group descended on the house of the girland tried to take her away. Three persons, including one of her relatives, were assaulted and inflicted and cut injuries were inflicted when they tried to prevent the group kidnapping the girl. One of the injured, Arokiaraj, filed a complaint with the Nellikuppam police.

Investigation led to the detection of the Manitha Neethi Pasarai unit at Nellikuppam, the authorities claimed.

### 'Not fundementalist'

However, in a statement here, its president, M. Gulam Mohamed, denied the group had anything to do with the Nellikuppam assault.

He said the group had been working for the past 10 years and was formally registered in 2001. The organisation had held hundreds of public meetings all over the State including one at Nellikuppam last year.

On the reported seizure of arms and arrest of 15 persons at Nellikuppam, he said that episode had nothing to do with the MNP, which ran no office there.

"One of the accused is only a distributor of our monthly, *Vidiyal Velli*. Other than that he has no connection with us." The arrested women were poor and innocent, he claimed.

Mr. Mohamed clarified that the MNP was neither a fundamentalist nor violent group. The Pasarai had been actively participating in organisations such as the All-India Muslim Personal Law Board.

"It would be an injustice to detain the poor women under the National Security Act," Mr. Mohamed said, adding that the MNP had requested the Chief Minister to intervene.

# துக்ளக்

துக்ளக் சோ. இராமசாமி அவர்கள் பிற்றை நாட்களில் சங்கபரிவாரத்திற்கு தான் முழு ஒத்துழைப்பைத் தருபவர் என்பதை வெளிக் காட்டிட தயங்கிடவில்லை. MNP - எம்.என்.பி. எட்டு இடங்களில் குண்டு வைத்திட சதி என்ற கோவை உளவுத் துறை அதிகாரி ஏற்படுத்திய பரபரப்பையும், அதற்குப் பின்னால் நாங்கள் மேற்கொண்ட உறுதியான விறுவிறுப்பான எதிர் நடவடிக்கை களையும் அதனால் ரெத்தின சபாபதி இட மாற்றமும், பணிமாற்றமும் செய்யப் பட்டதையும் துக்ளக் ஆசிரியர் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

எனவே அவர் துக்ளக் இதழில் தீவிரவாதத்திற்கு முதல்வர் கருணாநிதி துணை போய் விட்டார் என்ற பாங்கில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

அப்போது அவர் பாரதீய ஜனதா கட்சியால் நாடாளு மன்ற மேல் சபையில் உறுப்பினராகவும் இருந்தார். அவருடைய கட்டுரைக்கு நான் ஒரு பதிலை எழுதினேன். அந்த பதிலை ஒரு “கமா” கூட மாற்றிடாமல் அப்படியே வெளியிட்டி ருந்தார். அதனை இங்கே தருகின்றோம்.



## உண்மை வெல்லும்; பொய்கள் அழியும்!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

'துக்ளக்' 23.08.2006 தேதியிட்ட இதழில் இடம்பெற்ற கட்டுரை என்னைப் பற்றியும், மனித நீதிப் பாசறையைப் பற்றியும் பல தவறான செய்திகளை வெளியிட்டிருக்கிறது.

அறிவகத்தில் மதமாற்றம் நடடப்பதில்லை. இஸ்லாத்தை தாங்களாகவே ஏற்றுக் கொள்பவர்களுக்கு, இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளாகிய தொழுகை, நோன்பு போன்றவற்றை எப்படி நிறைவேற்றுவது என்பதுதான் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அங்கே நரப்படுவது கல்விதான், பயிற்சியல்ல.

மனித நீதிப் பாசறை வெளிப்படையாக இயங்கும் ஓர் இயக்கம். கோவையில் சொல்லப்பட்டதைப் போல், எந்த ஈனச் செயல்களிலும் மனித நீதிப் பாசறை ஈடுபட்டதில்லை. இனி ஈடுபடவும் செய்யாது. மனித நீதிப் பாசறைக்கு எல்லா மாவட்டங்களிலும் அலுவலகம் இருக்கிறது. கோவையைச் சுற்றி மட்டும் அவர்கள் இருப்பதாகச் சொல்வது பொய். கோவையிலும் மனித நீதிப் பாசறைக்கு அலுவலகம் உள்ளது. கோவையில் நடந்தது ஓர் அதிகாரியின் நாடகம். அதை கண்டுபிடித்த உயர் அதிகாரிகள்தாம், அந்த அதிகாரியை இடம் மாற்றம் செய்திருக்கின்றார்கள்.

கலைஞர் சிறுபான்மையினரின் நலன் மீது அக்கறை உள்ளவர் என்பது உண்மை. இதையே அவருடைய பலவீனமாகக் காட்டி, அவரை சிறுபான்மையினருக்கு எதிராகத் திருப்பிட நீங்கள் முயற்சி செய்திருக்கின்றீர்கள். உங்கள் சதியில் கலைஞர் சிக்க மாட்டார்.

அடுத்து, 'நெல்லிக்குப்பம்...' என்று சொல்லி பாதியிலே விட்டுவிட்டீர்கள். நெல்லிக்குப்பம் பற்றி அப்போது (2004) வந்த செய்திகள் மனித நீதிப் பாசறையைக் குறிவைத்து வந்தன. ஒரு சாதாரண சண்டையை, உள்நாட்டுப் போர் போல் காட்டினார்கள். ஒரு புதிய தீவிரவாத இயக்கத்தை, அகழ்ந்தெடுத்து விட்டதாகக் கூறினார்கள். இரண்டாண்டுகள் ஓடிவிட்டன. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. ஆயுதங்கள் கண்டெடுத்ததாகக் கூறப்பட்ட வீட்டை விற்று விட்டார்கள்.

மூன்று பெண்களின் வாழ்க்கையைப் பாழாக்கினார்கள். இரண்டு முஸ்லிம் இளைஞர்களை NSA - தேசிய பாதுகாப்பு சட்டத்தில் போட்டார்கள். இன்னும் பன்னிரெண்டு இளைஞர்களின் வாழ்க்கையைப் பாழாக்கினார்கள். இதைத் தவிர உளவுத்துறையினர் சாதித்தது எதுவுமில்லை.

நெல்லிக்குப்பம் நிகழ்வுகளுக்கும், மனித நீதிப் பாசறைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்றாலும், எங்கள் பத்திரிகை 'விடியல் வெள்ளி'யின் விநியோகஸ்தர் ஒருவரை அதில் இணைத்து, எங்கள் பத்திரிகையின் பெயரையே ஒரு தீவிரவாத இயக்கம் எனக் காட்டினார்கள். மனித நீதிப் பாசறையின் மனித நேயச் செயல்கள் 'துக்ளக்'கிற்கு புதிதான ஒன்றல்ல. ஏற்கெனவே அறிமுகமானதுதான். ஒன்றை இங்கே சுட்டிக் காட்டுகின்றோம்.

கடந்த 2004-ஆம் ஆண்டு தீபாவளியை முன்னிட்டு மதுரையில் இந்து முன்னணியினர் அடித்திருந்த மத வெறிப் போஸ்டருக்கு பதிலாக, மத நல்லிணக்கப் போஸ்டரை மனித நீதிப் பாசறை அடித்திருந்தது.

அந்த மதவெறிப் போஸ்டர் இதோ...

“இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
இந்துக் கடைகளில் பொருள்களை வாங்கி
இனிதே கொண்டாடுவீர்
இந்துப் பண்டிகைகளை...”

— இந்து முன்னணி - மதுரை மாநகர்

அந்த மத நல்லிணக்கப் போஸ்டர் இதோ...

“இனிய ரமலான் நல்வாழ்த்துக்கள்...
முஸ்லிம்களே!
தரமான பொருட்கள் எங்கு கிடைக்கின்றதோ அங்கு வாங்குங்கள்!
ஏனெனில் அனைத்து மதக் கடைக்காரர்களும் நமது சகோதரர்களே!...”

— மனித நீதிப் பாசறை (MNP)
- மதுரை மாவட்டம்

இதுகுறித்து 5.1.2005 தேதியிட்ட 'துக்ளக்' இதழில் இந்தப் போஸ்டருடைய ஃபோட்டோவைப் போட்டு 'படம் சொல்லும் கதை...' என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடப் பட்டிருந்தது.

### பகை ஏது, வன்முறை ஏது?

தீபாவளி நேரங்களில் சில ஹிந்து அமைப்புக்கள் 'ஹிந்துக்களே... ஹிந்துக் கடைகளிலேயே பொருட்களை வாங்குவீர்' என்று போஸ்டர் போடுவது வாடிக்கை! அதற்கு பதிலடியாக ஒரு முஸ்லிம் அமைப்பு, ரம்ஜான் நேரத்தில் மதுரையில் ஒட்டிய போஸ்டர் இது. பதிலடிகள் இப்படி இனிமையாய் அமைந்தால் பகை ஏது, வன்முறை, ஏது?

இப்போது கோவை நிகழ்வுகளின் உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உண்மை வெல்லும்; பொய்கள் அழியும்.

உங்கள் அன்புள்ள,
மு. குலாம் முஹம்மது,
மாநில தலைவர் -
மனித நீதிப் பாசறை,
ஆசிரியர் -
விடியல் வெள்ளி மாத இதழ்,
சென்னை-3

35 துக்ளக் - 6.9.2006

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

*துக்ளக் 23.08.2006 தேதியிட்ட இதழில் இடம்பெற்ற கட்டுரை என்னைப் பற்றியும், மனித நீதி பாசறைப் பற்றியும் பல தவறான செய்திகளை வெளியிட்டிருக்கிறது.*

*அறிவகத்தில் மதமாற்றம் நடடப்பதில்லை. இஸ்லாத்தை தாங்களாகவே ஏற்றுக் கொள்பவர்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளாகிய, தொழுகை நோன்பு போன்றவற்றை எப்படி நிறைவேற்றுவது என்பது தான் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. அங்கே*

தரப்படுவது கல்வி தான் பயிற்சி அல்ல.

மனித நீதி பாசறை வெளிப்படையாக இயங்கும் ஓர் இயக்கம். கோவையில் சொல்லப்பட்டதைப் போல், எந்த ஈனச் செயல்களிலும் மனித நீதி பாசறை ஈடுபட்டதில்லை. இனி ஈடுபடவும் செய்யாது. மனித நீதி பாசறைக்கு எல்லா மாவட்டங்களிலும் அலுவலகங்கள் இருக்கிறது. கோவையை சுற்றி மட்டும் அவர்கள் இருப்பதாக சொல்வது பொய். கோவையிலும் மனித நீதி பாசறைக்கு அலுவலகம் உள்ளது. கோவையில் நடந்தது ஓர் அதிகாரியின் நாடகம். அதை கண்டுபிடித்த உயர் அதிகாரிகள் தாம், அந்த அதிகாரியை இடமாற்றம் செய்திருக்கின்றனர்.

கலைஞர் சிறுபான்மையினரின் நலன் மீது அக்கறை உள்ளவர் என்பது உண்மை. இதையே அவருடைய பலவீனமாகக் காட்டி, அவரை சிறுபான்மையினருக்கு எதிராகத் திருப்பிட நீங்கள் முயற்சி செய்திருக்கின்றீர்கள். உங்கள் சதியில் கலைஞர் சிக்கமாட்டார்.

அடுத்து, "நெல்லிக்குப்பம்" என்று சொல்லி பாதியிலேயே விட்டுவிட்டீர்கள். நெல்லிக்குப்பம் பற்றி அப்போது (2004) வந்த செய்திகள் மனித நீதி பாசறையைக் குறிவைத்து வந்தன. ஒரு சாதாரண சண்டையை, உள் நாட்டுப் போர் போல் காட்டினார்கள். ஒரு புதிய தீவிரவாத இயக்கத்தை அகழ்ந்தெடுத்து விட்டதாக கூறினார்கள். இரண்டாண்டுகள் ஓடிவிட்டன. குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்யப் படவில்லை. ஆயுதங்கள் கண்டெடுத் . மூன்று பெண்களின் வாழ்க்கையை பாழாக்கினார்கள். இரண்டு முஸ்லிம் இளைஞர் களை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் போட்டார்கள். இன்னும் பன்னிரெண்டு இளைஞர்களின் வாழ்க்கையைப் பாழாக் கினார்கள். இதைத்தவிர உளவுத்துறையினர் சாதித்தது எதுவுமில்லை.

நெல்லிக்குப்பம் நிகழ்வுகளுக்கும், மனித நீதிப் பாசறைக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றாலும், எங்கள் பத்திரிக்கை "விடியல் வெள்ளி" யின் விநியோகஸ்தர் ஒருவரை அதில் இணைத்து, எங்கள் பத்திரிக்கையின் பெயரையே ஒரு தீவிரவாத இயக்கம் எனக் காட்டினார்கள். மனித நீதி பாசறையின் மனித நேயச் செயல்கள் 'துக்ளக்'கிற்கு புதிதான ஒன்றல்ல. ஏற்கனவே அறிமுகமானதுதான். ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுகின்றோம். கடந்த 2004ஆம் ஆண்டு தீபாவளியை முன்னிட்டு மதுரையில் இந்து முன்னணியினர் அடித்திருந்த மத வெறிப் போஸ்டருக்கு பதிலாக, மத நல்லிணக்கப் போஸ்டரை மனித நீதிப் பாசறை அடித்திருந்தது.

அந்த மதவெறிப் போஸ்டர் இதோ..

**"இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். இந்துக் கடைகளில் பொருள்களை வாங்கி இனிதே கொண்டாடுவீர் இந்துப் பண்டிகைகளை" - இந்து முன்னணி. மதுரை மாநகர்**

அந்த மத நல்லிணக்கப் போஸ்டர் இதோ.

**"இனிய ரமலான் நல்வாழ்த்துக்கள் முஸ்லிம்களே தரமான பொருட்கள் எங்கு கிடைக்கின்றதோ அங்கு வாங்குங்கள்! ஏனெனில் அனைத்து மதக் கடைக்காரர்களும் நமது சகோதரர்களே!..."**

**-மனித நீதிப் பாசறை(MNP) மதுரை மாவட்டம்**

இதுகுறித்து 05.01.2005 தேதியிட்ட 'துக்ளக்' இதழில் இந்தப் போஸ்டருடைய ஃபோட்டோவைப் போட்டு 'படம் சொல்லும் கதை..' என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

**பகை ஏது, வன்முறை ஏது?**

**தீபாவளி நேரங்களில் சில இந்து அமைப்புக்கள் "ஹிந்துக்களே ஹிந்துக் கடைகளிலேயே பொருட்களை வாங்குவீர்" என்று போஸ்டர் போடுவது வாடிக்கை! அதற்கு பதிலடியாக ஒரு முஸ்லிம் அமைப்பு, ரம்ஜான் நேரத்தில் மதுரையில் ஒட்டிய போஸ்டர் இது. பதிலடிகள் இப்படி இனிமையாய் அமைந்தால் பகை ஏது, வன்முறை ஏது?**

இப்போது கோவை நிகழ்வுகள் உண்மைகள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. உண்மை வெல்லும்; பொய்கள் அழியும்.

உங்கள் அன்புள்ள

**மு, குலாம் முஹம்மது,**

மாநில தலைவர் - மனித நீதிப் பாசறை,

ஆசிரியர் - விடியல் வெள்ளி மாத இதழ்

சென்னை-3

# துப்பாக்கி கேட்ட இந்துத்துவ தலைவர்களுக்கு கலைஞரின் பதில்



இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ், இந்து மக்கள் கட்சி ஆகியோர் ஒன்றாய்ச் சென்று கவர்னரிடம் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். அந்த மனுவில் இந்து தலைவர்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும், அவர்களுக்கு துப்பாக்கி வழங்கிட வேண்டும் எனக் கோரி இருந்தார்கள்.

இவர்கள் கவர்னர் மாளிகைக்கு மனுக் கொண்டு போகும் போது இப்படி ஒன்று நடக்கின்றது. எதிர் நடவடிக்கைகள் ஏதும் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார் உளவுத்துறை அதிகாரி ஒருவர். அவரிடம் நான், ஒட்டாமல் கிடந்த அவர்களை ஒன்றிணைத்ததும், மனுவை அவர்கள் கையில் தந்தும், கவர்னரை சந்திக்க அனுமதியைப் பெற்றுத் தந்ததும் உளவுத் துறையாகத்தான் இருக்கும். நாங்கள் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல. எங்களால் முடிந்த வரை எல்லோருக்கும் பாதுகாப் பாகவே இருப்போம் என்று கூறினேன்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் முதல்வர் கலைஞர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றார். அப்போது ஒருப் பத்திரிக்கையாளர் வேண்டுமென்றே ஒருக் கேள்வியைக் கேட்கின்றார். அந்தக் கேள்வி;

நேற்றைய முன் தினம் சில இந்துத் தலைவர்கள் தங்கள் உயிருக்கு ஆபத்திருப்பதாகவும் தங்களைத் தற்காத்துக் கொள்ள துப்பாக்கி வேண்டும் என்றும் கவர்னரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு துப்பாக்கி வழங்கப்படுமா? என்பதுதான். இதற்கு முதல்வர் கலைஞர் தனக்கே உரிய பாணியில் இப்படிப் பதில் சொன்னார்.

எந்த துப்பாக்கி? கோட்சே வைத்திருந்தானே அந்தத் துப்பாக்கியா? என்றார். மனு கொடுத்தவர்களும் அதை விளம்பரப் படுத்திட கேள்விக் கேட்டவரும் வெட்கித் தலை குனிந்தார்கள்.

MNP - எம்.என்.பி. தலை நிமிர்ந்து நின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

இப்படி கலைஞர் சிறுபான்மையினருக்கு இக்கட்டான நிலைகளில் துணை நிற்க தவறியதே இல்லை.

## ‘காந்தி யார்? கோட்சே யார்?’

தேனி மாவட்டத்தில் 'அறிவகம்' என்ற பெயரில் கல்விப் பணிகளைச் செய்து வருகிறது முஸ்லிம் டிரஸ்ட் ஒன்று. இந்த அமைப்பு சார்பில் நடத்தப்படும் பல்வேறு முகாம்களில் தீவிர வாதப் பயிற்சி நடக்கிறது என்று புகார் கிளப்பி, அவர்களுக்கு எதிராகத் தமிழகம் முழுவதும் வம்பு செய்து கொண்டிருக்கிறார்கள் இந்து அமைப்பு களைச் சேர்ந்தவர்கள். ‘அறிவக ஆசாமிகளிடமிருந்து எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். அதற்காக நாங்கள் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி வேண்டும்...’ என்று சொல்லி, இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சமீபத்தில் தமிழக கவர்னரிடம் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். அதுபற்றி பத்திரிகையாளர்களிடம் கருத்துச் சொன்ன தமிழக முதல்வர் கருணாநிதி, ‘காந்தியைக் கொன்ற கோட்சேகூடத்தான் துப்பாக்கி வைத்திருந்தார்...’ என்று சொல்லிவிட, அது இப்போது சர்ச்சையாகி இருக்கிறது. ‘துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி கேட்டால், கோட்சேவைக் கொண்டுவந்து முடிச்சு போடுவது என்ன அர்த்தத்தில்? எங்களையெல்லாம் கோட்சே என்கிறாரா? அப்படியென்றால் காந்தி என்று யாரை அவர் சொல்ல வருகிறார்...’ என்று கேட்க ஆரம்பித்திருக்கும் இந்து மக்கள் கட்சியினர், கருணாநிதியின் இந்தச் சொல்லாடலை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்.

நன்றி: ஜூனியர் விகடன், 4.10.06

# கலைஞருக்கு இஸ்லாமிய அழைப்பு



அருள்மறை

நிச்சயமாக மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் சகல உதாரணங்களையும் நாம் கூறியிருக்கின்றோம். (இவற்றைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக! அன்றி, (அல்லாஹ்வுக்கு) அவர்கள் பயந்து கொள்ளும் பொருட்டு எத்தகைய கோணலும் அற்ற இந்தக் குர்ஆனைத் தெளிவான அரபி மொழியில் இறக்கி வைத்தோம்.

அல்குர்ஆன் 39 : 27,28

விடியல் வெள்ளி

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது M.A.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
M.S. அப்துல் ஹமீது B.E.

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 6.00 |
| 6 மாதம் | : | ரூ. 35.00 |
| ஓராண்டு | | |
| உள்நாடு | : | ரூ. 70.00 |
| வெளிநாடு | : | ரூ.350.00 |

முகவரி
26, பேரக்ஸ் சாலை
2வது மாடி, பெரியமேடு,
சென்னை - 600 003.

கலைஞரின் பவளவிழா சிந்தனைகள்!

1998 ஜூன் திங்கள் 3ம் நாளில் கலைஞர் பவளவிழாவில் அடியெடுத்து வைத்தார்.

பொது வாழ்வில் பொன்விழா கண்டவர். அவர் சார்ந்து வளர்த்த - வளர்ந்த கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பொன்விழா வரவிருக்கின்றது.

இப்படி விழாக்கள் பலவற்றில் திளைத்துக் கொண்டிருக்கின்றார் கலைஞர்! இன்னும் பல ஆண்டுகள் அவர் வாழவேண்டும் என வாழ்த்தாத வாயில்லை. அவரைப் புகழாத தலைவரில்லை.

75 ஆண்டுகாலம் வாழ்ந்து வரலாற்றில் தன்னை பதித்துக் கொண்டிருக்கின்றார். எத்தனையோ சாதனைகள்... அவையும் எத்தனையோ துறைகளில்!

எழுத்துத்துறை, பேச்சுத்துறை, அரசியல், ஆட்சி, நிர்வாகம், சமுதாயக் கொடுமைகளுக்கு எதிரான போர், அமைச்சர், முதலமைச்சர், தமிழுக்காகத் தியாகம், சட்டமன்ற கதாநாயகன் - இப்படி எத்தனையோ துறைகளில் அவர் சாதனைகளை நிகழ்த்தி பதித்து இருக்கின்றார்.

தமிழ் வசன நடையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார். கவிதைகளில் ஒரு புதினத்தைப் புகுத்தினார். உரைநடையில் ஊரைக் கவர்ந்தார். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இத்தனைக்கும் அவருடைய முதலீடாக ஒன்றைச் சொல்லலாம். அது தான் கடின உழைப்பு! தனக்கென ஒரு முறையை அமைத்துக் கொண்டு மணித்துளிகளை அளந்து செலவழிக்கின்றார். தனது மழலைப் பருவம் முதல் 75 வயது வரை கடினமாக உழைத்திருக்கின்றார்.

இப்படி நீண்ட நெடுங்காலம் ஒருவர் தனது உழைப்பை அள்ளிக் கொட்டுகின்றபோது அவர் ஒரு சாதனையாளராவது என்பது உழைப்பின்-காலத்தின் கட்டாயம்.

பல சாதனைகளின் தொகுப்பாய் விளங்கும் கலைஞர் ஒன்றைக் கவனிக்கவேண்டும்.

அது, 75 ஆண்டுகாலம் அவரை வாழ வைத்தது யாருடைய சாதனை?

சாதனைகளை நிகழ்த்திட்ட அவர் 75 ஆண்டுகாலம் வாழ்ந்தது அவருடைய சொந்த சாதனையா? அல்லது அது ஒரு அபார சக்தியின் அருட்கொடையா? அவருடைய கடின உழைப்பு இதற்கு எந்த வகையில் உதவியது?

ஆங்கில கவிஞன் மில்டன் ஒரு நாள் பிணங்களை அடக்கியிருக்கும் கல்லறை வழியாக நடந்து கொண்டிருந் தானாம். அந்தக் கல்லறைகளைக் கடந்து வெளியே வந்தபோது இப்படிக் குறிப்பிட்டானாம்:

"Here in lie many inglorious Miltons" (புகழ்பெற முடியாத பல மில்டன்கள் இங்கே கல்லறைகளில் தூங்குகின்றார்கள்.)

புகழ்பெற்ற 'மில்டன்' நான், வாழ்ந்திடும் வாய்ப்பு கிடைத்ததால். இங்கே வாழ்ந்திடும் வாய்ப்பு கிடைக்காததால் புகழ்பெற்றிட முடியாமல்

1998 | 1 | விடியல் வெள்ளி

**கலைஞர் அவர்கள் விடியல் வெள்ளி பத்திரிகையை தொடர்ந்து படிக்ககூடியவர் அந்த வகையில் 1998 ஜூன் மாதம் வெளிவந்த விடியல் வெள்ளி பத்திரிகை மூலமாக கலைஞர் அவர்களுக்கு இஸ்லாத்தை எத்தி வைத்தார் முன்னால் விடியல் வெள்ளியின் நிறுவுனரும் ஆசிரியருமான அண்ணன் மு. குலாம் முஹம்மது அவர்கள். அந்த தலையங்கத்தை தற்போது உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.......**

## கலைஞரின் பவளவிழா சிந்தனைகள்!

*1998* ஜூன் திங்கள் 3ம் நாளில் கலைஞர் பவளவிழாவில் அடியெடுத்து வைத்தார்.

பொது வாழ்வில் பொன்விழா கண்டவர். அவர் சார்ந்து வளர்த்த- வளர்ந்த கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பொன்விழா வரவிருக்கின்றது.

இப்படி விழாக்கள் பலவற்றில் திளைத்துக் கொண்டிருக்கின்றார் கலைஞர்! இன்னும் பல ஆண்டுகள் அவர் வாழவேண்டும் என வாழ்த்தாத வாயில்லை. அவரைப் புகழாத தலைவரில்லை.

*75* ஆண்டுகாலம் வாழ்ந்து வரலாற்றில் தன்னை பதித்துக் கொண்டிருக்கின்றார். எத்தனையோ சாதனைகள்... அவையும் எத்தனையோ துறைகளில்!

எழுத்துத்துறை, பேச்சுத்துறை, அரசியல், ஆட்சி, நிர்வாகம், சமுதாயக் கொடுமைகளுக்கு எதிரான போர், அமைச்சர், முதலமைச்சர், தமிழுக்காகத் தியாகம், சட்டமன்ற கதாநாயகன்- இப்படி எத்தனையோ துறைகளில் அவர் சாதனைகளை நிகழ்த்தி பதித்து இருக்கின்றார்.

தமிழ் வசன நடையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார். கவிதைகளில் ஒரு புதினத்தைப் புகுத்தினார். உரைநடையில் ஊரைக் கவர்ந்தார். இப்படி அடிக்கிக் கொண்டே போகலாம்.

இத்தனைக்கும் அவருடைய முதலீடாக ஒன்றைச் சொல்லலாம். அது தான் கடின உழைப்பு! தனக்கென ஒரு முறையை


அமைத்துக் கொண்டு மணித்துளிகளை அளந்து செலவழிக்கின்றார். தனது மழலைப் பருவம் முதல் 75 வயது வரை கடினமாக உழைத்திருக்கின்றார்.

இப்படி நீண்ட நெடுங்காலம் ஒருவர் தனது உழைப்பை அள்ளிக் கொட்டுகின்றபோது அவர் ஒரு சாதனையாளராவது என்பது உழைப்பின் காலத்தின் கட்டாயம். பல சாதனைகளின் தொகுப்பாய் விளங்கும் கலைஞர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது, 75 ஆண்டுகாலம் அவரை வாழ வைத்தது யாருடைய சாதனை?

சாதனைகளை நிகழ்த்திட்ட அவர் 75 ஆண்டுகாலம் வாழ்ந்தது அவருடைய சாதனையா? அல்லது அது அபார சக்தியின் அருட் கொடையா? அவருடைய கடின உழைப்பு இதற்கு எந்த வகையில் உதவியது?

ஆங்கில கவிஞன் மில்டன் ஒரு நாள் பிணங்கள் அடக்கியிருக்கும் கல்லறை வழியாக நடந்து கொண்டிருந் தானாம். அந்தக் கல்லறைகளைக் கடந்து வெளியே வந்தபோது இப்படிக் குறிப்பிட்டானாம்:

"Here in lie many inglorious Miltons" (புகழ்பெற முடியாத பல மில்டன்கள் இங்கே கல்லறை களில் தூங்குகின்றார்கள்.)


தலையங்கம்

மண்ணுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள் பல திறமையாளர்கள். நான் வாழவும், உலகறிந்த கவிஞனாக புகழ் பெறவும் நான் இறைவனால் வாழ்வளிக்கப்பட்டிருக்கின்றேன் என்பதைச் சொல்லாமல் சொல்லி இருக்கின்றான் மில்டன்.

ஆக, 75 ஆண்டுகாலம், இன்னும் ஒரு நூறு ஆண்டுகாலம் வாழ்க்கை என்பது அந்தந்த ஆத்மாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இறைவன் கலைஞருக்கு நீண்டதொரு வாழ்நாளை நல்கி அவரை சாதனையாளராக ஆக்கிக் காட்டி இருக்கின்றான்.

இன்னும் இறைவனின் அருளுக்கு ஆளாகி இறைவன் அவருக்கு அளிக்கும் நாட்கள் வரை வாழ்வார்; சாதனைகள் படைப்பார். இந்த வாய்ப்புகளையெல்லாம் நல்கிய ஏக இறைவனை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

இளமையில் அவரிடம் குடியிருந்த குறுகுறுப்பும், சிடுசிடுப்பும் மாறி இப்போது அவர் முதிர்ச்சி அடைந்திருப்பதாக அத்தனை பேரும் அவரைப் பாராட்டுகின்றார்கள். அந்த முதிர்ச்சியின் முத்தாய்ப்பாக அவர் வானம், பூமி இன்னும் இவற்றில் இருப்பவை அனைத்தையும் படைத்த அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

'இறைவனை இருக்கின்றார் என்பார் சிலர்; இல்லை என்பார் சிலர்; எனக்கில்லை அந்தக் கவலை!' என்பதை விட்டு... தனது நீண்ட ஆயுளையும், சாதனைகளைக் குவிப்பதற்கான வாய்ப்புகளையும், திறமையையும் வழங்கிய அந்த இறைவனை ஏற்று நன்றி சொல்ல முன்வரவேண்டும்.

ஒருமுறை மட்டுமே வாழ்ந்திட வாய்ப்பளிக்கப்படும் இந்தப் பூமியில் நாம் இறைவனை ஏற்றுக்கொண்ட நிலையில் வாழ்ந்தோமா... அல்லது அவனை நிராகரிக்கும் நிலையில் வாழ்ந்தோமா என்பது மிகவும் முக்கியமானதோர் வினா!

நாத்திகத்தைக் கைவிடவேண்டும். ஆண்டவன் பெயரால் நடந்த அநியாயங்கள்தாம் கலைஞரைப் போன்றவர்களை நாத்திகத்தின்பால் இட்டுச் சென்றுள்ளது.

மேலைநாடுகளிலும் இதேபோல் ஆண்டவனின் பெயரைச் சொல்லி விஞ்ஞானிகளைத் தூக்கில் தொங்க விட்டதுதான் அங்கே நாத்திகர்களை உருவாக்கிற்று. அந்த வரலாறுகளைப் படித்தக் கலைஞர் நாத்திகத்தை நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.

பெரியார், அண்ணா ஆகிய கலைஞரை வளர்த்து ஆளாக்கியவர்கள் நாத்திகத்தின்பால் செல்வதற்கு இவையே காரணம். இவற்றிற்கெல்லாம் பக்கபலமாக தமிழகத்தில் ஆண்டவன் பெயரால் இழைக்கப்பட்ட ஆயிரமாயிரம் கொடுமைகள்-அண்ட முடியாதவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்று ஒரு கூட்டம் மக்களை ஒதுக்கியதும் கலைஞரை, பெரியாரை, அண்ணாவை நாத்திகத்தில் பிடித்துத் தள்ளிற்று.

அவ்வாறல்ல... இறைவன் ஒருவன்தான். அவன் யாரிடமும் எந்தப் பேதத்தையும் கற்பிப்பதில்லை. அவன் அனைவரையும் ஒரே அடிப்படையிலிருந்துதான் படைத்தான். அவன் யாரிடமும் எந்தப் பேதமும் பாராட்டுவதில்லை.

இந்த உண்மைகளை ஏற்று கலைஞர் அந்த இறைவனையும், அவன் காட்டிய வாழ்க்கை வழிமுறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மைகளை அவர் ஏற்றுக்கொண்டால் அது அவருக்கு இந்த உலகில் மட்டுமல்ல; இறப்பிற்குப் பின்னால் வரும் மறுவுலக வாழ்க்கையிலும் ஒளியேற்றும்.

*மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம், நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் மிக்க கண்ணியமானவன். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான். (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.*
*(49:13)*

*(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் - அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும் அவனுக்கு நிகராக எவரும் இல்லை.*
*(அத்தியாயம் 112: ஏகத்துவம்)*

அல்லாஹ் அவருக்கு 'ஹிதாயத்'தை வழங்கிடுவானாக!

ஜூலை 1998 | 2 | விடியல் வெள்ளி

புகழ்பெற்ற 'மில்டன்' நான், வாழ்ந்திடும் வாய்ப்பு கிடைத்ததால். இங்கே வாழ்ந்திடும் வாய்ப்பு கிடைக்காததால் புகழ்பெற்றிட முடியாமல் மண்ணுக்குள் முடங்கிக் கிடக்கின்றார்கள் பல திறமையாளர்கள். நான் வாழவும், உலகறிந்த கவிஞனாக புகழ் பெறவும் நான் இறைவனால் வாழ்வளிக்கப் பட்டிருக்கின்றேன் என்பதை சொல்லாமல் சொல்லி இருக்கின்றான் மில்டன்.

ஆக 75 ஆண்டுகாலம், இன்னும் ஒரு நூறு ஆண்டுகாலம் வாழ்க்கை என்பது அந்தந்த ஆத்மாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இறைவன் கலைஞருக்கு நீண்டதொரு வாழ்நாளை நல்கி அவரை சாதனையாளராக ஆக்கிக் காட்டி இருக்கின்றான். இன்னும் இறைவனின் அருளுக்கு ஆளாகி இறைவன் அவருக்கு அளிக்கும் நாட்கள் வரை வாழ்வார்; சாதனைகள் படைப்பார். இந்த வாய்ப்புகளையெல்லாம் நல்கிய ஏக இறைவனை அவர் ஏற்றுகொள்ள வேண்டும்; அவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

இளமையில் அவரிடம் குடியிருந்த குறுகுறுப்பும், சிடுசிடுப்பும் மாறி இப்போது அவர் முதிர்ச்சி அடைந்திருப்பதாக அத்தனை பேரும் அவரை பாராட்டுகின்றார்கள். அந்த முதிர்ச்சியின் முத்தாய்ப்பாக அவர் வானம், பூமி இன்னும் இவற்றில் இருப்பவை அனைத்தையும் படைத்த அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இறைவன் இருக்கின்றார் என்பார்

சிலர்;இல்லை என்பார் சிலர்; எனக்கில்லை அந்தக் கவலை! என்பதை விட்டு தனது நீண்ட ஆயுளையும், சாதனைகளைக் குவிப்பதற்கான வாய்ப்புகளையும், திறமையையும் வழங்கிய அந்த இறைவனை ஏற்று நன்றி சொல்ல முன்வரவேண்டும்.

ஒருமுறை மட்டுமே வாழ்ந்திட வாய்ப்பளிக்கப்படும் இந்தப் பூமியில் நாம் இறைவனை ஏற்றுக்கொண்ட நிலையில் வாழ்ந்தோமா... அல்லது அவனை நிராகரிக்கும் நிலையில் வாழ்ந்தோமா என்பது மிகவும் முக்கியமானதோர் வினா!!!

நாத்திகத்தைக் கைவிடவேண்டும். ஆண்டவன் பெயரால் நடந்த அநியாயங்கள் தாம் கலைஞரைப் போன்றவர்களை நாத்திகர்களை உருவாக்கிற்று. அந்த வரலாறுகளைப் படித்தக் கலைஞர் நாத்திகத்தை நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.

பெரியார், அண்ணா ஆகியவர்கள் கலைஞரை வளர்த்து ஆளாக்கியவர்கள் நாத்திகத்தின்பால் செல்வதற்கு இவையே காரணம். இவற்றிற்கெல்லாம் பக்கபலமாக தமிழகத்தில் ஆண்டவன் பெயரால் இழைக்கப்பட்ட ஆயிரமாயிரம் கொடுமைகள்-அண்ட முடியாதவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஒரு கூட்டம் மக்களை ஒதுக்கியதும் கலைஞரை, பெரியாரை, அண்ணாவை நாத்திகத்தில் பிடித்துத் தள்ளிற்று.

அவ்வாறல்ல... இறைவன் ஒருவன்தான். அவன் யாரிடமும் எந்தப் பேதத்தையும் கற்பிப்பதில்லை. அவன் அனைவரையும் ஒரே அடிப்படையிலிருந்துதான் படைத்தான். அவன் யாரிடமும் எந்தப் பேதமும் பாராட்டுவதில்லை.

இந்த உண்மைகளை ஏற்று கலைஞர் அந்த இறைவனையும், அவன் காட்டிய வாழ்க்கை வழி முறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மைகளை அவர் ஏற்றுக்கொண்டால் அது அவருக்கு இந்த உலகில் மட்டுமல்ல; இறப்பிற்குப் பின்னால் வரும் மறுவுலக வாழ்க்கையிலும் ஒளியேற்றும்.

> மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங் களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (அல்குர்ஆன் : 49:13)
>
> (நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.
>
> அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.
>
> அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை.
>
> அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை. (அத்தியாயம் 112: ஏகத்துவம்)

அல்லாஹ் அவருக்கு ஹிதாயத்தை வழங்கிடுவானாக!

**- விடியல் வெள்ளி, ஜூலை 1998**

Ilyas Riyaji
August 7 at 10:53 PM ·

மனித நீதிப் பாசறையுடன் கலைஞர்

---

கலைஞர் அப்போது தமிழக முதல்வராக இருந்தார். அது தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய நாள். 22.07.2006 அன்று எல்லா பத்திரிக்கைகளிலும் பரபரப்பான ஒரு செய்தி வந்திருந்தது.விழிறி என்ற மனித நீதிப் பாசறையின் கோவை மாவட்ட உறுப்பினர்கள் கோவையில் ஏழு இடங்களில் குண்டு வைக்க முயன்றனர். ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்பதே அச்செய்தி.

இந்த பொய்ச் செய்திகளை ஊடகங்களுக்கு தந்தவர் கோவை காவல்துறையின் நுண்ணறிவு பிரிவு அதிகாரி ரத்தின சபாபதி என்பவர். கலைஞரின் பட்ஜெட் செய்தி பின்தள்ளப்பட்டு தினசரி இதழ்களில் இந்த குண்டு வெடிப்பு(!) செய்தியே முதலிடம் பிடித்தது. இதன்மூலம் கலைஞர் விழிறி மீது கோபம் கொள்வார். இதன் தலைவர்களை கைது செய்வார். விழிறி ஐ தடை செய்வார் என்று மனப்பால் குடித்தார் ரத்தின சபாபதி. எங்கள் மீது அன்பு கொண்ட எங்கள் பணிகளை ஆர்வத்துடன் கவனிக்கின்ற நண்பர்களும் அபிமானிகளும் நீங்கள் கைது செய்யப்படலாம் கவனமாக இருங்கள் என்று எச்சரித்தார்கள்.பொறாமை கொண்ட சிலர் எங்களுக்கு அந்த நிலை வரவேண்டும் என்று விரும்பினர்.இந்த அச்சுறுத்தும் சூழலில் மனித நீதிப் பாசறையின் நிர்வாகிகளான (தலைவர்: மு.குலாம் முஹம்மது,செயல் தலைவர்: உமர் கத்தாப், இல்யாஸ் ரியாஜி ஆகிய) நாங்கள் முதல்வர் கலைஞரை சந்திக்க நேரம் கேட்டோம். அறிவாலயத்துக்கு வரச் சொன்னார். சென்றோம்.

உண்மையை கலைஞரிடம் விளக்கினோம். உளவுத் துறையின் சதிகளை புரிந்து கொண்டார். உடனே ஒரு நேர்மையான விசாரணைக்கு உத்தரவிட்டார். விழிறி க்கு நீதி வழங்கினார். ரத்தின சபாபதியின் சதித்திட்டத்தை முறியடித்தார்.

ஃபாசிஸ எதிர்ப்பு போரில் முன்னணியில் நின்ற விழிறி ஐ வீழ்த்த வேண்டும் என்று எண்ணிய சிலர் "கலைஞர் விழிறி யிடம் வளைந்து விட்டார்" என்று அவரைச் சீண்டினர். எதைப்பற்றியும் கவலைப்படாமல் நீதியில் நிலைத்து நின்றார் முதல்வர் கலைஞர். அவர் இவ்வுலகைப் பிரிந்த இந்நாளில் நன்றிப் பெருக்குடன் இதை நினைவு கூர்கிறேன்.

228 26 Comments 70 Shares

# மீனாட்சிபுரம் மதமாற்றம் யாரால்? யாரால்?

1981இல் தமிழகத்தில் தீண்டாமையிலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற சிந்தனையில் மீனாட்சிபுரம் கிராம மக்கள் தங்களை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்வு அம்பேத்கரின் மதமாற்றத்திற்கு பிறகு இந்தியாவில் மிகப் பெரிய மதமாற்ற நிகழ்வாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

இந்த மதமாற்ற நிகழ்வைக் குறித்து துக்ளக் ஆசிரியர் “சோ” அவர்கள் 1981 ஆம் ஆண்டு “சண்டே” என்கின்ற ஆங்கில வார இதழில் ஒருக் கட்டுரை எழுதியிருந்தார். அதில், “இதுப்போன்ற மதமாற்றங்களுக்குக் காரணம் திராவிடக் கொள்கையும், அதை வளர்த்த பெரியார், அண்ணா, கருணாநிதியும் தான்” என்றவாறு குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு, பதிலளிக்கும் விதமாக கலைஞர் “யாரால் யாரால்” எனும் தலைப்பில் ஒருப் புத்தகத்தை வெளியிட்டிருந்தார். அதில் மீனாட்சி புரத்தில் நடந்தது மதமாற்றம் அல்ல. பன்னெடுங்காலமாக இந்து மதத்தில் இருந்துக் கொண்டு அனுபவித்துக் கொண்டிருந்த தீண்டாமையின் விளைவால் ஏற்பட்ட மனமாற்றமேத் தவிற வேறில்லை எனும் விதமாக குறிப்பிட்டிருந்தார் கலைஞர். அதை அப்படியே இங்கே தருகிறோம்;

*உடன் பிறப்பே,*

*மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய நிகழ்ச்சிக்கு எத்தனையோ காரணங்கள் கூறப்பட்டன.*

*இந்து மத ஆதிக்காரர்களால் தங்கள் தவறை மறைக்கவும் - பன்னெடுங்காலமாகச் சாத்திர சம்பிரதாயங்கள் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொட்டுப் பூச்சிகளாய் - புன்மைத் தேரைகளாய் நடத்திய கொடுமைகளின் கோரம் தாங்க முடியாமல் தான் இத்தகைய மன மாற்றங்கள் நடந்தன என்ற உண்மையை ஒளித்திடவும் மீனாட்சிபுரத்திற்காக கட்டவிழ்த்து விடப்பட்ட காரணங்கள் மிகப்பல! இப்போது இதோ ஒரு புதிய காரணத்தை (Sunday 11-10-81) ‘சண்டே’ எனும் ஆங்கில இதழில் நண்பர் “சோ” அவர்கள் கண்டுபிடித்து அதனைக் கட்டுரையாகத் தீட்டியுள்ளார். மீனாட்சிபுரம் சம்பவத்திற்கு, சாதிவெறித் தன்மை காரணம் இல்லையாம்!*

*நாய் நடை பயிலலாம்! பன்றி பவனி வரலாம்! பாம்பு ஊர்வலம் நடத்தலாம்! ஆனால் பஞ்சமன் தெருவில் நடக்கக் கூடாது என்றும் அது பாவம் என்றும், வேதம் ஏற்காது என்றும், மனுஸ்மிருதி மறுக்கிறது என்றும், ஆண்டவனுக்கு ஆகாது என்றும் எந்த ஆதிக்கபுரியினர் அன்று தொட்டு இன்று வரை தடுத்து வந்தார்களோ, அந்த ஆதிக்கக் கோட்டையின் “அதிசய மனிதர் சோ” அவர்கள் இப்போது புதிய காரணம் ஒன்றைத் தனது பொல்லாத மூளையில் தோற்றுவித்துக் கொண்டு அதனை நீண்டதொரு கட்டுரையாக்கி நீட்டி முழங்கியிருக்கின்றார்.*

*“அக்கிரகாரத்து அதிசய மனிதர்” என்று அரிஞர் அண்ணா அவர்கள், வா. ரா. அவர்களைப் புகழ்ந்து எழுதியது உண்டு! புரட்சிகரமான கருத்துக்களை எழுத்தின் வாயிலாக வழங்கி அவ்வண்ணமே வாழ்ந்து காட்டியவர் வா.ரா. என்பதால்!*

# 1981 இல் கலைஞர் எழுதிய மறுப்புக் கடிதம்

ஆனால் இதோ இந்த அக்கிரகாரத்து அதிசய மனிதர், மீனாட்சிபுர சம்பவங்களுக்குக் காரணமாக விளங்கும் மதவெறி - ஆதிக்கவெறி - மனுஸ்ருமிதி வர்ணாஸ்ரம தர்மம் - அனைத்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தோடு தனது புது கண்டுபிடிப்பை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார். இதோ 'சண்டே' ஆங்கில ஏட்டில் அவர் வெளியிட்டுள்ள விஷயங்களை (விஷங்களை என்பதே பொருத்தமென்க) உடன் பிறப்பே உன் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

1. தி.மு.க. வும் திராவிடர் கழகமும் செய்த அழிவு வேலையின் அத்தாட்சி தான் மீனாட்சிபுரம் சம்பவம்.

2. ஈ.வெ.ராமசாமி நாயக்கர், பிரிட்டிஷ் புகழ்ப்பாடிகளான ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை எடுத்துக் கொண்டார். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்து மத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்றார். பிராமண ஒழிப்பையும் இந்து மத ஒழிப்பையும் ஒன்றெனக் கருதினார்.

3. இப்போது ஏற்பட்ட மீனாட்சிபுர அறுவடைக்கு அப்போது தான் நிலம் உழவு செய்யப்பட்டது.

4. சி.என். அண்ணாதுரையால் துவக்கப் பட்ட தி.க. கழகம் இந்தப் பாவத்திலிருந்து பிறந்தது.

5. உணர்ச்சிகளைக் கொல்லும் சினிமாவை, தி.மு.க. நாத்திகப் பிரச்சாரத் திற்குப் பயன்படுத்தியது. கோயில்களையும் பூசாரிகளையும் கொடுமையாளர்களாக சித்தரித்து, சந்நியாசிகளைத் தீயவர்களாகத் தீட்டிக்காட்டி, சினிமா பார்க்கின்ற ஒவ்வொருவரையும் இந்து மதத்தைக் கண்டிக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டது.

6. தமிழ் நாட்டு மக்கள் ஒருவித அசிங்கமான நாத்திகத்திற்கு பலியானதின் விளைவுதான் மீனாட்சிபுரம்.

7. இந்து மதக் கடவுள்கள் மீது ஈ.வெ. ரா, மழையாகப் பொழிந்த ஆபாச அர்ச்சனை, இந்து மதத்தின் மீது சின். என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள், முதலமைச்சராக கருணாநிதி பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரப் பூர்வமாகக் கட்டவிழ்த்து விட்ட அவதூறுடன் கூடிய ஏளனம் இவைகளுக்குப் பிறகும் தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்றார் அது தமிழனின் பொறுமைக்கு அடையாளமா? சாதிவெறிக்கு அடையாளமா?

உடன் பிறப்பே இத்தனையும் "சோ" பொழிந்துள்ள சொல்மாரி!

**பெரியார், அண்ணா, கருணாநிதி, தி.மு.க.,தி.க.**

மீனாட்சிபுரத்திற்கு யார் யார் காரணம் எனக்கூறி குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி இந்தக் குற்றவாளிகளைத் தமிழர்கள் இன்னமும் பொருத்துக் கொண்டு அமைதியாக இருக்கின்றார்களே என்றும் அங்கலாய்த்துக் கொண்டு "சண்டே" இதழில் தனது கட்டுரையை முடித்திருக்கிறார் "சோ".

இந்தியாவின் வடபகுதியில் பல இடங்களில் நடைபெற்றுள்ள மதமாற்றங்களுக்கும் தி.க. வும், தி.மு.க. வும் தான் காரணம் என்று சோ சொல்லப் போகிறாரோ என்னவோ தெரியாது! ஒரு பெரும் கூட்டத்துடன் டாக்டர் அம்பேத்கர் புத்த மதத்தைத் தழுவினாரே; அதற்குக் காரணம் இந்து மத ஆதிக்கமா? அல்லது வேறு ஏதாவது சோ அவர்கள் கண்டு பிடித்து எழுதப்போகிறாரா?

தி.க., தி.மு.க. ஆகிய இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் மத மாற்றங்கள் ஏற்பட்டதற்குக் கூட அப்போது பிறக்காமலிருந்த, பெரியாரும், அண்ணாவும், கருணாநிதியும், தி.க.வும், தி.மு.க.வும் தான் காரணம் எனக் கதைக்கப் போகிறாரா?

தி.க.வும், தி.மு.க. வும் அழிவு வேலைகளை செய்தன. அதற்கு அத்தாட்சி தான் மீனாட்சிபுரம் என்கிறார் நண்பர் சோ.

தும்பும் தூசியும் ஒட்டடையும் குப்பையும் நிறைந்துள்ள வீட்டில் அவற்றையெல்லாம் அகற்றி விட்டு இல்லத்தைத் தூய்மையாக வைத்திட முயல்வது அழிவு வேலை என்று அவரது அகராதியில் அச்சாயிருக்கிறது போலும்!

சாதிக்கரையானும், புராண ஆபாசப் பற்றுகளும், சந்தன தாம்புலம் பால், பழம், வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் என்று நண்பர் வாதிடுகிறாரா?

அவரது கட்டுரையிலேயே பெரியாரைப் பற்றிக் குறிப்பிடும் போது ஈ.வெ.ரா. என்று கூடக் குறிப்பிடாமல் "ஈ. வெ. ராமசாமி நாயக்கர்" நாயக்கர் என்று தானே ஆரம்பிக் கிறார். நாயக்கர் என்ற சாதிப்பெயரைச் சேர்க்காமல் பெரியார் என்றால் எல்லோறுக்கும் தெரியக் கூடியப் பெயர் தானே? அப்படியிருந்தும் அந்த சாதியுணர்வு சோவுக்குப் போகவில்லையே!

ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிஷாருக்கு புகழ்

பாடியதாம். அதற்கும் மீனாட்சிபுரத்திற்கும் என்ன தொடர்பு? இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமே; அந்த மகா கவி பாரதியார் கூட பிரிட்டிஷ் இளவரசரை புகழ்ந்து வரவேற்பு வாழ்த்து கவி பாடியவர் தான்! அதை ஏன் சோ மறந்து விட்டார்.

ஆரம்பத்தில் காங்கிரஸ் கூட உத்தியோகங்களில் இந்தியர்களுக்கு அதிகம் இடம் கோரித்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களைப் பின் தள்ளிவிட்டு மிக உயர் சாதிக்காரர்கள் "கருங்குழிப் பார்சல்களையெல்லாம் பற்றி கூட கவலைப்படாமல் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பதவிகளைப் பெற்று பரவசமுற்றனர். பிரிட்டிஷ் காரனாலேயே தொடங்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம் பின்னர் அவனிடமிருந்தே விடுதலைக் கோருகிற இயக்கமாக உருவெடுத்துப் போராடவில்லையா?

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு தேவை என்ற தனது கருத்துக்கு அன்றைய காங்கிரஸ் தலைவர்களான ராஜாஜி போன்றவர்கள் இடம் தராததாலும் வ.வே.சு.அய்யர் அவர்கள் சேரமாதேவியில் நடத்திய குருகுலத்தில் சமபந்தி உணவுக்கு மாணவர்களை அனுமதிக்காத காரணத்தாலும் பெரியார் அவர்கள் போர் குரல் எழுப்பிக் காங்கிரசை விட்டு வெளியேறிய வரலாற்றை நாடு மறந்து விடவில்லையே!

"சேரமாதேவியில் சேர்க்கமாட்டோம் சமத்துவக் கொள்கையை" என்று செம்பியவர்களின் செயலால் மீனாட்சிபுரத்து உணர்வுகள் ஏற்பட்டனவா? அல்லது அன்றைக்கே அந்த சாதி வெறிச் சண்டாளத்தனத்தை எதிர்த்து சங்கநாதம் செய்த தந்தை பெரியார் செயலால் மீனாட்சிபுரங்கள் ஏற்பட்டனவா?

**அன்புள்ள**

**மு.க.**

திராவிட முன்னேற்ற

கழகம் வெளியீடு - *1981*

**நன்றி: கோம்பை சர்ஃபுதீன்**



**வைகறை வெளிச்சம் முதல் இதழை கலைஞர் அவர்களுக்கு வழங்கிய போது**



# மதமும்! மதச் சார்பின்மையும்!!

## பாதிக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம்

**மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் சார்பில் 01.09.2017 அன்று "பாதிக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம்" என்னும் தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் தேசியக் கருத்தரங்கில் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் குற்றவியல் மற்றும் குற்ற நீதிமுறைத் துறையின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் தொல். திருமாவளவன் அவர்கள் பங்கேற்று ஆற்றிய உரையின் சுருக்கம்:**

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களே, பேராசிரியர் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்,

இந்த மாலை அமர்வில் "பாதிக்கப் பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம்" என்னும் தலைப்பில் கருத்துரை ஆற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பதிவாளர் உள்ளிட்ட அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மீனாட்சிபுரம் மதமாற்றம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மீனாட்சிபுரம் என்கின்ற கிராமத்தில் 1981ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ஆம் நாள், ஒரே நாளில் சுமார் 200 குடும்பத்தினர் இஸ்லாமிய மதத்தைத் தழுவினார்கள். இது இந்திய அளவில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்போது அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், மதம், மடம், போன்ற நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் எனப் பலரும் அந்த கிராமத்தை நோக்கி படையெடுத்தார்கள்.

அகில இந்திய அளவில் அது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியில் மத்திய அமைச்சராக இருந்த யோகேந்திர மக்வானா,

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த காலம் சென்ற எல். இளைய பெருமாள் ஆகியோரும் அந்த கிராமத்திற்கு ஓடோடி வந்தனர். அப்போது தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்தார்.

### புரட்சியாளர் அம்பேத்கரின் மதமாற்றம்

உலகிலேயே மிகப்பெரிய அளவிலான பெரும்திரள் மதமாற்றம் என்பது, 1956 அக்டோபர் 14இல் நாக்பூரில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் தலைமையில் நடைபெற்றதே ஆகும். அந்நிகழ்வு இந்திய சமூகத்தையே உலுக்கியது. அதன் பின்னர், 200 குடும்பங்கள் ஒரே நாளில் ஒரே இடத்தில் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறினார்கள் என்றால், அது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனாட்சிபுரத்தில் தான் நடந்தது.

மதமாற்றம் என்பது அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற ஒன்றேயாகும். இந்தியாவில் மட்டுமல்ல; உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் நிகழ்கின்ற ஒன்றுதான். ஆனால், ஒரே நேரத்தில் கணிசமான எண்ணிக்கையுள்ள மக்கள், ஒரு கலாச்சார வாழ்க்கை முறையிலிருந்து திடீரென இன்னொரு வாழ்க்கை முறைக்கு, கலாச்சார முறைக்கு மாறுவது என்பது சாதாரணமான ஒன்றல்ல. அதன்படி சமூகத்தளத்தில், பண்பாட்டுத்தளத்தில், அரசியல் தளத்தில் என அனைத்து தளங்களிலும் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றுதான் மீனாட்சிபுரத்தில் நிகழ்ந்த மதமாற்றம்.

### பாதிக்கப்பட்டோர் பார்வை

குற்றத்தால் ஒருவர் பாதிக்கப்படுகிறார் என்கின்ற போது, இதனுடன் மதமாற்றம் எந்த வகையில் தொடர்பு கொண்டதாக உள்ளது? மதமாற்றம் என்பது குற்றமா? மதமாற்றத்தால் என்ன பாதிப்பு ஏற்படும்? அதனால் பாதிக்கப்பட்டோர் என்ற ஒரு தரப்பினர் எவ்வாறு உருவாக முடியும்? என்கின்ற பல கேள்விகள் இயல்பாக எழலாம். மதமாற்றம் என்பது எத்தகைய பார்வையில் இதுவரையில் பார்க்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டால்தான், ‘பாதிக்கப்பட்டோர் பார்வை’ என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். அதனை நாம் குற்றவியல் பார்வையிலிருந்து தான் உணர முடியும்.

பாதிப்பை உருவாக்குகிறவர்கள் அல்லது குற்றத்தைச் செய்கிறவர்கள் யாரோ, அவர்களை மட்டுமே குறிவைத்து இதுவரை குற்ற நீதிமுறை இயங்கி வந்திருக்கின்றது அல்லது இயங்கிக் கொண்டேயிருக்கிறது. அதாவது, பாதிக்கப்பட்டோரைப் பற்றிக் கவலைப்படாத ஒரு போக்கு இவ்வளவு காலம் நீடித்து வந்துள்ளது.

1960களிலிருந்து தான் இதுபற்றிய சிந்தனையே உலக அளவில் எழுந்தது. குறிப்பாக இந்தியாவில், பேராசிரியர் கு.சொக்கலிங்கம் அவர்கள் தான் இதற்கான அடித்தளத்தை அமைத்தார்.

### ஆய்வுக்கு எடுத்தது ஏன்?

இங்கே மதமாற்றத்தில் பாதிக்கப்பட்டோர் யார்? மதம் மாறியவர்கள் தான் பாதிக்கப்பட்டோர் என்றால், அப்பாதிப்பு எத்தகையது? மதமாற்றம் என்றால் பொதுவாக எல்லோரும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், அது வெளிநாட்டுப் பணத்துக்காக நடந்தது என்கிறார்கள். இஸ்லாம் மதத்திற்கு மாறினால் அது அரேபியன் டாலர் என்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினால் அது அமெரிக்கன் டாலர் என்றும் கூறுகின்றனர். மதம் மாறியவர்கள் மீது எத்தகைய குற்றம் சுமத்தப்படுகிறது அல்லது எத்தகைய அவதூறு பரப்பப்படுகிறது என்றால், இவர்கள் வெளிநாட்டு பணத்துக்காகவே மதம் மாறிவிட்டார்கள் என்பது தான். இது அவர்களுக்கு எதிரான ஒரு வகை பாதிப்பே ஆகும். இதுதான் மீனாட்சிபுரத்தில் நடந்த மதமாற்றம் குறித்து நான் ஆய்வு செய்வதற்குத் தூண்டியதாகும்.

மதம் மாறியவர்கள் யார்? தலித்துகள். அவர்கள் மதம் மாறியதற்கு முன்னால் எந்த மதத்தில் இருந்தார்கள்? இந்துக்கள் என்கின்ற பட்டியலில் அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். இந்துக்களாக இருந்த அவர்கள், நீண்ட நெடுங்காலமாக, தலைமுறைத் தலைமுறையாக முப்பாட்டன் காலத்திலிருந்தே இந்து கோவில்களுக்குச் சென்று வந்தவர்கள், சிவனை வழிபட்டவர்கள், முனீஸ்வரனை வழி பட்டவர்கள்,காளியம்மனை வழிபட்டவர்கள், மாரியம்மனை வழிபட்டவர்கள், திடீரென்று அல்லாஹ் ஒருவனே கடவுள் அவனுக்கு உருவமில்லை என்கின்ற ஒரு தத்துவ முறைக்குள்ளே அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்றால் இந்த மாற்றத்தை அவர்களுக்குள் எது ஏற்படுத்தியது? எந்தப் புள்ளியில் அவர்கள் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டார்கள்?

தலைமுறைத் தலைமுறையாகப் பின்பற்றி வந்த ஒரு கலாச்சார வாழ்க்கை முறையிலிருந்து திடீரென, உடனடியாக விடுபட வேண்டுமென்று முடிவெடுக்கிறார்கள் என்றால் அதுவும் கணிசமான மக்கள் ஒன்று சேர்ந்து ஒருமித்த முடிவெடுக்கிறார்கள் என்றால், அது

எவ்வளவு ஆழமான ஒரு பின்னணியை, எவ்வளவு ஆழமான ஒரு பாதிப்பைக் கொண்டிருக்கும் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டிய தேவையிருக்கிறது.

### அகநிலைக் காரணிகள்

பொதுவாக, எல்லாப் பிரச்சினைகளுக்குமே அகநிலைக் காரணிகளும் உண்டு; புறநிலைக் காரணிகளும் உண்டு. இந்த மதமாற்ற நிகழ்விலும் அத்தகைய காரணிகள் உண்டு.

முதலாவதாக அகநிலைக் காரணிகள் என்ன என்பதைப் பார்ப்போம். சாதியின் பெயர், சாதியின் பெயரால் நிகழ்கிற இழிவுகள், அவமதிப்புகள், வாழ்கிற இடம், வாழுமிடத்திற்குள்ள சமூக மதிப்பீடு, போன்ற இவையெல்லாம் தலித் மக்களின் மதமாற்றத்திற்கான அகநிலைக் காரணிகள் எனலாம்.



குறிப்பாக உளவியல் சிக்கல்கள் மிக முக்கியமானவை ஆகும். நாம் ஏன் இந்த சாதியில் பிறந்தோம்? இந்து மதத்தில் இருப்பதினால் தானே சாதி இருக்கிறது? இஸ்லாம் மதத்தில் இப்படி சாதியெல்லாம் இல்லையே! அங்கே இதுபோல் அவமதிப்பு இல்லையே! என்று ஒப்பீடு செய்வது நிகழ்கிறது. இவை உளவியல் சார்ந்த அகநிலைக் காரணிகளாகும்.

அடுத்து பொருளியல் சார்ந்த காரணிகளும் அகநிலைக் காரணிகளாகும். அவை எவ்வாறு வருகின்றன? ஒரு தலித்தாக இருப்பதனாலேயே அவர் பொது இடங்களில் தேனீர் கடை வைக்க முடியாது. உணவு விடுதி நடத்த முடியாது. துணிக்கடை திறக்க முடியாது. பலசரக்குக் கடை திறக்க முடியாது. அவர் பொதுவாக மற்றவர்களோடு இணைந்து ஒரு தொழிலைச் செய்ய முடியாது. அரசு சொத்துகளில் அவர் குத்தகையில் பங்கேற்க முடியாது. இவ்வாறு பொருளாதார ரீதியாக அவர் தலித் என்பதனாலேயே பாதிக்கப்படுகிறார். தலித் என்பதனாலேயே அவருக்கு பெரிய அளவில் நிலம் இருக்காது. நிலம் இருந்தாலும் பயிர் செய்ய முடியாது. பயிர் செய்தாலும் இடையூறின்றி அமைதியாகச் செய்ய முடியாது. இவ்வாறு, பொருளாதார ரீதியாக ஒரு தலித் முன்னேற முடியாத நிலை உள்ளது.

ஆனால் ஒரு இஸ்லாமியர் பொது இடத்தில் ஒரு வணிகத்தைச் செய்ய முடிகிறது. ஒரு உணவு விடுதியைத் திறக்க முடிகிறது. பத்து ஏக்கர், இருபது ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடிகிறது. இவை பொருளியல் சார்ந்த அகநிலைக் காரணிகள் எனலாம். அடுத்து சமூகம் சார்ந்த காராணிகள். அதாவது, ஒரு தலித்தாக இருப்பதனாலேயே அவர் இந்து வழிபாட்டுத்தலத்திற்குள்ளே நுழைய முடியவில்லை. செருப்பு அணிந்து செல்ல முடிய வில்லை. நல்ல உடைகளை உடுத்திச் சென்றால், குடை பிடித்தால், சைக்கிளில் சென்றால் தாக்குகிறார்கள்.

அந்தக் கோவில் எல்லோருக்கும் பொதுவான கோவில். ஆனால், தொலை தூரத்தில் நின்று சாமி கும்பிட வேண்டும்

என்கிறார்கள். அந்தக் குளத்தில் பன்றி, நாய், ஆடு, மாடு போன்றவை குளிக்கின்றன. ஆனால், நாம் இறங்கி குளிக்க முடியவில்லையே! இவையெல்லாம் இந்துச் சமூகத்தில் இருப்பதால்தானே. எதற்கு இம்மதத்தில் இருக்க வேண்டும்? என்கிற எண்ணம் ஒரு தலித்துக்கு எழுவது இயல்புதானே! இத்தகைய ஒடுக்கு முறைகள் யாவும் சமூகம் சார்ந்த அகநிலைக் காரணிகளாகும்.

இவ்வாறு, சமூகக் காரணங்களும், பொருளியல் காரணங்களும் அவை தொடர்பான உளவியல் காரணங்களும் மதமாற்றத்திற்கு அகநிலைக் காரணிகளாக இருந்து அவர்களை மதமாற்றத்திற்கு உந்தியிருக்கிறது, தூண்டியிருக்கிறது எனலாம்.

**புறநிலைக் காரணிகள்**

இரண்டாவது, புறநிலைக் காரணிகள். சாதிய ஆதிக்க வன்முறைகள், அரசின் அணுகுமுறைகள் மற்றும் ஒடுக்குமுறைகள் முக்கியமானவை ஆகும். இந்தச் சாதிய ஆதிக்க ஒடுக்குமுறைகள் புறநிலைக் காரணிகளாகவும் அமையும்.

அண்மையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருகே, நல்லூர் சேரி என்கின்ற கிராமத்தில் தலித்துகள் விநாயகர் சதூர்த்தியன்று பிள்ளையார் சிலையை வைத்து பூசை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்த வழியில் தலித் அல்லாத சமூகத்தைச் சார்ந்த இரண்டு பேர் மிக வேகமாக இருசக்கர வண்டியை ஒட்டிக்கொண்டு போன போது, தலித் இளைஞர்கள் சிலர் வழிமறித்து, "ஏன் இப்படி வேகமாகப் போறீங்க? நாங்கள் சாமி கும்பிட்டுக்கொண்டு இருக்கோம்ல மெதுவாகப் போகமாட்டீர்களா?" என்று கேட்க, அவர்களுக்கு கோபம் வந்து "நீங்க எப்படி எங்களை மறிக்கலாம்?" என்று சாதியைச் சொல்லி அசிங்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

அதன் பிறகு அவர்கள் 20-30 பேரை அழைத்து வந்து, விநாயகர் சிலையைப் போட்டு உடைத்தும் பத்து வீடுகளை எரித்தும், சொத்துகளையெல்லாம் சூறையாடியும், 15-16 பேர்களை வெட்டிக் காயப்படுத்தியும் உள்ளனர். ஆனால் காவல்துறை என்ன செய்தது தெரியுமா? இரண்டு தரப்பும் அடித்துக் கொண்டீர்கள், அதனால் இரண்டு பேர் மீதும் வழக்குப் போடுகிறோம் என்று பாதிக்கப்பட்ட தலித்துகள் மீதும் வழக்குகள் பதிவு செய்து கைது செய்துள்ளனர். இதுதான் அரசின் அணுகுமுறை மற்றும் ஒடுக்குமுறையாகும்.

**சட்டம் ஒழுங்கு - சமூக ஒழுங்கு பார்வை**

அரசும், அதிகார வர்க்கமும், எல்லாக் குற்றங்களையும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாகவே பார்க்கின்றன. குற்றங்களுக்கான பின்னணி மற்றும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் பின்னணிப் பற்றி அவை கவலைப்படுவதில்லை. இதுவே 'சட்டம் ஒழுங்கு பார்வை' ஆகும்.

சாதிய மதவாதிகளின் பார்வையானது 'சமூக ஒழுங்கு பார்வை' ஆகும். அவர் ஏன் இவரை அடித்தார் என்றால், வழிமறித்ததற்காக அடித்தார். ஏனென்றால் இவ்வளவு நாளாக சமூக ஒழுங்கு எப்படி இருக்கிறது? நீ கீழ்ச்சாதி, நான் மேல் சாதி. நான் எப்படி வேண்டுமானாலும் போவேன். நீ என்னைக் கேள்வி கேட்கக் கூடாது. முதல் முறையாக நீ கேள்வி கேட்கிறாய். அதனால் இங்கே சமூக ஒழுங்கு பாதிக்கப்படுகிறது. இவ்வளவு நாளாக நீ கோவிலுக்கு வரவில்லை. இப்போது சாமி கும்பிடுவதற்கு உரிமை கேட்கிறாய். அதனால் சமூக ஒழுங்கு பாதிக்கப்படுகிறது. இதுதான் சாதிய மதவாதிகளின் கருத்தாக உள்ளது. இதுவே

**கடந்த 25-30**
**ஆண்டுகளுக்கு முன்பு**
**சாதியின் பெயரால்**
**இழிவுப்படுத்தப்பட்ட ஒருவர்,**
**இப்போது 'வாங்க பாய்' என்று**
**மதிக்கப்படுகிற நிலைக்கு**
**உயர்ந்திருக்கிறார். அவரது**
**சமூகத்தகுதி உயர்ந்திருக்கிறது.**
**பொருளாதார நிலையிலும் இன்று**
**அவர்கள் வளர்ச்சி**
**அடைந்திருக்கிறார்கள்.**
**தெருவுக்குத் தெரு**
**பலசரக்குக் கடைகளும்,**
**பெட்டிக் கடைகளும்**
**வைத்திருக்கிறார்கள்.**
**பொது இடங்களில்**
**வணிகம் செய்கிறார்கள்.**

அவர்களின் சமூக ஒழுங்குப் பார்வையாகும்.

இந்து சமூகத்தில் இப்படி நிகழ்கின்ற போது, பிற மதங்களில் எப்படி நிகழ்கிறது என்கிற ஒப்பீடு, பிற மதங்களுடைய அணுகுமுறை போன்றவை மதமாற்றத்திற்கு புறநிலைக் காரணிகளாக அமைகின்றன. அதாவது இஸ்லாமிய மதத்தில் அப்படியில்லை. கிறிஸ்தவ மதத்தில் கூட ஓரளவுக்கு மதிப்பிருக்கிறது. அங்கே கல்வி பெறலாம், வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம். இவ்வளவு இழிவு இல்லை என்கிற எண்ணம் தலித் மக்களுக்கு உண்டாகிறது. இவையும் புறநிலைக் காரணிகளாக அமைகின்றன.

### மீனாட்சி புரத்தில் நடந்தது என்ன?

இந்நிலையில், மீனாட்சிபுரத்தில் என்ன நிகழ்ந்தது? எல்லாக் கிராமங்களிலும் சாதிக் கொடுமைகள் இருக்கின்றன. இந்தியா முழுவதும் சாதிக் கொடுமைகள் இருக்கின்றன. இன்றைக்கு நேற்றல்ல பல நூற்றாண்டுகளாக இருக்கின்றன. ஆனால், எங்கேயாவது ஒன்றிரண்டு இடங்களில் தான் இப்படி பெருந்திரள் மதமாற்றம் நடக்கிறது.

மீனாட்சிபுரத்தில் மதமாற்றம் நடந்ததற்கு இரண்டு முக்கியமான நிகழ்வுகள் காரணங்களாக உள்ளன. ஒன்று வழக்கமான சாதியச் சிக்கல்கள். இரண்டு, காவல்துறையினரின் ஒடுக்குமுறைகள்.

அங்கேயும் வழக்கமான சாதியக் கொடுமைகள் நிலவின. பேருந்துப் பயணங்களில், தேனீர்க்கடைகளில், பொது இடங்களில் சாதிப்பெயரைச் சொல்லி இழிவுப்படுத்துவது. அதைவிட மிக முக்கியமாக 10-15 வயதுள்ள சாதி இந்து சிறுவன், 60-70 வயதுள்ள மூத்தவர்களையும் பெயரைச் சொல்லி ஒருமையில் அழைப்பது, பணியிடங்களில், காடு - கழனிகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் தொந்தரவுகள் செய்வது போன்ற சமூகக் கொடுமைகள் நடந்துள்ளன. இவையெல்லாம் அவர்களுக்குள் உளவியல் சிக்கல்களாக மாறுகின்றன. ஆகவே, இதுகுறித்து இளம் தலைமுறையினரிடையே பெரும் விவாதம் ஏற்படுகிறது.

இந்நிலையில் தான் இப்படிப்பட்ட சாதிக்கொடுமைகளையெல்லாம் எதிர்ப்பதற்காக இளைஞர்கள் ஆங்காங்கே இயக்கமாக அணிதிரண்டு கருத்துப் பரப்புதலில் ஈடுபடுகிறார்கள். மதமாற்றத்திற்கு இது ஒரு முக்கியமான காரணியாக அமைகிறது.

இரண்டாவது அங்கே நடந்த காவல் துறையின் ஒடுக்குமுறைகள் முக்கியமான காரணியாகும். மேக்கரை எனுமிடத்தில் நடந்த இரட்டைக்கொலை தான் காவல்துறையினரின் நடவடிக்கைகளுக்குக் காரணமாகும்.

அங்கே திருவாடுதுறை ஆதினத்திற்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. காடு மேடாகக் கிடந்த, புதராகக் கிடந்த அந்தப் பகுதியில் மீனாட்சிபுரம் தலித் மக்கள் தலா மூன்று அல்லது நான்கு என்கிற அளவில் நிலத்தைப் பயன்படுத்தி , மிளகு, ஏலம், போன்ற வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிலைச் செய்கிறார்கள்.

### இரட்டைக்கொலை

திருவாடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமான அந்த நிலம் கேரளாவைச் சேர்ந்த நிக்கோலஸ் என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிறகு அந்த நிலம் அதே கேரளப் பகுதியைச் சார்ந்த ராதாகிருஷ்ணா ரெட்டி என்பவரின் கைக்கு மாறியது. அப்போது அங்கே மேற்பார்வையாளராக அலெக்ஸாண்டர் என்பவர் இருந்தார். அவரின் கண்காணிப்பில் தான் தலித்துகள் அந்தப் பகுதியில் குடிசைப் போட்டுத் தங்கியிருந்து விவசாயம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் அந்த ரெட்டி அலெக்ஸாண்டர் என்கின்ற மேற்பார்வையாளரை மாற்ற முயற்சிக்கிறார். அப்போது அலெக்ஸாண்டரும் அவருக்கு ஆதரவாக இருந்த மீனாட்சிபுரத்தை சார்ந்த - மேக்கரைப் பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற தலித் மக்களும் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

அப்போது ராதாகிருஷ்ணன் ரெட்டி தேவர் சமூகத்தைச் சார்ந்த இரண்டு பேரை பாதுகாவலர்களாக நியமிக்கிறார். பின்னர் அந்த இரண்டு பேருமே படுகொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் படுகொலை தொடர்பான காவல்துறை விசாரணை நடக்கிறது. அப்போது யாரெல்லாம் கையில் கிடைத்தார்களோ அவர்களையெல்லாம் தூக்கிக்கொண்டு போய் காவல் நிலையத்தில் கடுமையாகத் தாக்கி, அவர்களை வதை செய்து, கொலை செய்ததாக ஒப்புக்கொள்ளுங்கள் என்று வழக்கமான பாணியில் காவல்துறை விசாரித்தது.

யாருமே கிடைக்கவில்லையென்றால் கிடைத்தவர்களைக் குற்றவாளியாக்குகிற போக்குதான் காவல்துறையினரின் பொதுவான நடைமுறையாகும். அதன் படி அப்பாவியான சிலரையும் குற்றவாளியாக்குகிறார்கள். தங்கராஜ், நாகையா, எட்வர்ட்ராஜன் மற்றும் முருகையா ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இந்த

நான்கு பேரை மட்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. கையில் கிடைத்தவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போய் நிர்வாணப்படுத்தி கொடுமை செய்தனர். இதுதான் அரச வன்கொடுமையாகும். இது அரச வன்கொடுமையாக மட்டுமின்றி சாதிய வன்கொடுமையாகவும் நடந்தேறியது. அவர்கள் மீது நிகழ்த்திய அந்த தாக்குதல்கள் தான் அவர்களை மாற்றுச் சிந்தனைக்கு உந்தித்தள்ளியது.

ஒருபுறம் சமூகரீதியாக இழிவுகள். இன்னொருபுறம் காவல்துறையின் ஒடுக்குமுறைகள். எந்தக் காவல்துறை நமக்குப் பாதுகாப்பு கொடுக்கும் என்று கருதினோமோ, எந்த அரசாங்கம் நமக்கு துணையாக இருக்கும் என்று கருதினோமோ, எந்தச் சட்டம் நம்மை பாதுகாக்கும் என்று கருதினோமோ அந்தச் சட்டம் நமக்குப் பாதுகாப்பாக இல்லை. அதிகார வர்க்கம் நமக்குப் பாதுகாப்பாக இல்லை. காவல்துறையினர் நமக்குக் கொடுமை செய்கிறார்கள். இப்படி நாம் ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமா? என்ற கேள்வி அவர்களுக்கு எழுந்த போதுதான், மதமாற்றம் குறித்த சிந்தனைக்குத் தள்ளப்பட்டனர். அந்த வட்டாரத்தில் மதமாற்றம் என்பது அங்கொன்றும், இங்கொன்றுமாக நிகழ்ந்து கொண்டிருந்த சூழலில் ஏன் நாம் இஸ்லாமியர்களாக மாறக்கூடாது என்கிற உந்துதல் அவர்களுக்கு ஏற்பட்டது.

## இஷா உல் அத்

திருநெல்வேலி பாளையங்கோட்டையில் உள்ள 'இஷா உல் அத்' எனும் ஒரு இஸ்லாமிய அமைப்பினரிடம் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அந்த அமைப்பிடம் "எங்களுக்கு இதுபோன்ற கொடுமைகள் எல்லாம் நடக்கின்றன; நாங்கள் ஏன் இஸ்லாத்தை தழுவக் கூடாது?" என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள், 'அப்படியெல்லாம் நாங்கள் உடனே செய்ய முடியாது. அதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன, இப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர். அவர்கள் இஸ்லாமியர்களாக மாறினால் என்னென்ன நேரும், என்பதையெல்லாம் விவாதித்திருக் கிறார்கள்.

இஸ்லாத்திற்கு மாறினால், SC Categoryக்கான அரசு சலுகைகள் எதுவும் கிடைக்காது. குறிப்பாக இட ஒதுக்கீட்டுப் பயன் எதுவும் கிடைக்காது. இட ஒதுக்கீடு இல்லையென்றால் கல்வி, வேலைவாய்ப்பு பாதிக்கப்படும். தொகுப்பு வீடுகள் கிடைக்காது. அரசாங்கத்தின் மூலம் பெறுகிற பயன்கள் கிடைக்காது. இப்படி என்னென்ன விதமான பக்கவிளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படும் என்பது குறித்தெல்லாம் பேசியிருக்கின்றனர். இவை எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்ட பிறகுதான் இருநூறு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்திற்கு மாறுவது என்கிற முடிவுக்கு வருகிறார்கள்.

இவ்வாறு சாதிய ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட அகநிலைக் காரணிகளும், காவல்துறையின் ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட புறநிலைக் காரணிகளும் தான் அந்த மக்களை மதமாற்றத்தை நோக்கி தள்ளின என்பதுதான் இந்த ஆய்வில் நான் கண்டறிந்த உண்மை.

## ஆரிய சமாஜ்

மதமாற்றத்திற்குச் சாதிய ஒடுக்குமுறை தான் காரணம் என்றால், 'அதுவெல்லாம் கிடையாது' என்று ஆரியசமாஜ் கூறியது. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களை அழைத்து வந்து பேரணி நடத்தியது. அடுத்து யோகேந்திர மக்வானா வந்து பார்த்தார். இங்கே சாதிக்கொடுமைகள் இருக்கின்றன, அதனால் தான் இந்த மக்கள் மதம் மாறினார்கள் என்று அவர் பேட்டியளித்தார்.

## எம்.ஜி.ஆர்.

அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். 'இது வெளிநாட்டுப் பணத்தால் நிகழ்ந்த வினை; அங்கே எந்தச் சாதிக்கொடுமையும் இல்லை' என்று கூறினார். அதன் பிறகு எம்.ஜி.ஆர். இல்லாத போது சட்டப்பேரவையில் விவாதம் நடந்த நேரத்தில், நாவலர் நெடுஞ்செழியன் பதிலளிக்கும் போது, "மதமாற்றத்திற்கு வெளிநாட்டுப்பணம் காரணம் இல்லை; அங்கே நிகழ்ந்த சில சாதியக் கொடுமைகள் தான் காரணம்" என்று கூறினார். இப்படித்தான் அங்கே தலித் மக்கள் மதம் மாறுவதற்கு சாதியக் கொடுமைகளும் ஓர் உந்துதலாக இருந்ததை அறிய முடிகிறது.

## மாற்றங்கள் - முன்னேற்றங்கள்

இன்றைக்கு மதம் மாறிய அவர்கள் எந்த நிலைக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றால், இத்தனைக்காலம் வரையில் ஒருமையில் பெயர்களைச் சொல்லி அழைக்கப்பட்ட இவர்களை இன்றைக்கு 'பாய்' என்று அழைக்கிற நிலை உருவாகியிருக்கிறது.

ஒரு தேனீர்க்கடையைக் கூட பொது இடத்தில் வைக்க முடியாத நிலையில் வாழ்ந்தவர்கள் வணிக வளாகங்களை நடத்த முடிகிறது. இப்போது அங்கே உமர் ஷெரிஃப் என்கிற மதம் மாறிய ஒருவர் பொது இடத்தில் மிகப்பெரிய வணிக வளாகம் வைத்திருக்கிறார். நீண்டகாலமாக இஸ்லாமியர்களாக



இருந்தவர்களோடு இன்று பெண்ணைக் கொடுக்கவும், பெண்ணை எடுக்கவும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தற்போது அங்கே மசூதியும் இருக்கிறது, அதற்கு முன்னர் அவர்கள் வணங்கிய காளியம்மான் கோயிலும் இருக்கிறது. அதில் என்ன பெரிய வியப்பு என்றால், ஒரே குடும்பத்தில் அண்ணன் இஸ்லாமியராக இருக்கிறார், தம்பி இந்துவாக இருக்கிறார். அவர்களுக்கிடையில் எந்த பிரச்சினையும் மத ரீதியாக வரவில்லை.

இஸ்லாமியர்களாக இருக்கிறவர்கள் காளியம்மன் கோயிலுக்கு நன்கொடை தருகிறார்கள். இப்படி இரு தரப்பினரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்.

ஃபாத்திமா என்கிற வயதான பெண்மணியிடம் விசாரித்தோம். அவர் பர்தா போட்டுக்கொண்டிருந்தார் அசல் இஸ்லாமிய பெண்ணாக எங்களுக்குக் காட்சி தந்தார். அவர் அண்மையில் மதம் மாறியவர் தான். அவர் நிறைய குர்ஆன் வசனங்களையும், 'ஹதீஸ்' என்கின்ற நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பொன்மொழிகளையெல்லாம் எங்களிடம் ஒப்பித்தார்.

நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் என்று கேட்டோம். நான் இஸ்லாமியராக மாறிய பின்பு தான் இதையெல்லாம் படித்தேன், அதற்கு முன் நான் பள்ளிக்கூடத்திற்கு கூட சென்றதில்லை என்றார். 'நீங்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை என்கிறீர்கள், பிறகு எப்படி இதையெல்லாம் படித்தீர்கள்?' என்றோம். 'எல்லாம் அல்லாஹ் எனக்குக் கொடுக்கின்ற அருள்' என்று அந்த பெண்மணி மிகுந்த மகிழ்ச்சியோடு பதில் சொன்னார்.

கடந்த 25-30 ஆண்டுகளுக்கு முன்பு சாதியின் பெயரால் இழிவுப்படுத்தப்பட்ட ஒருவர், இப்போது 'வாங்க பாய்' என்று மதிக்கப்படுகிற நிலைக்கு உயர்ந்திருக்கிறார். அவரது சமூகத்தகுதி உயர்ந்திருக்கிறது. பொருளாதார நிலையிலும் இன்று அவர்கள் வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். தெருவுக்குத் தெரு பலசரக்குக் கடைகளும், பெட்டிக் கடைகளும் வைத்திருக்கிறார்கள். பொது இடங்களில் வணிகம் செய்கிறார்கள். நிலபுலங்களை இன்றைக்குப் பெரிய அளவில் அவர்கள் வாங்க முடிந்திருக்கிறது.

இதுவரை 20 குடும்பத்திற்கு மேற்பட்டவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சம்பாதிக்கிறார்கள். அவர்களின் இந்து சகோதரர்களையும் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

ஆகவே, இந்துக்களாக இருப்பவர்களும், இஸ்லாமியர்களாக இருப்பவர்களும் பொருளாதாரத்தில் இன்றைக்கு வளர்ச்சியடைவதற்கு இந்த மதமாற்றம் ஒரு காரணமாக இருந்திருக்கிறது என்பதை இந்த ஆய்வில் நம்மால் காண முடிந்திருக்கிறது.

### சமூகக் கறை

மதம் மாறினாலும் அவர்களுக்கு ஒரு சமூகக் கறை 'சோஷியல் ஸ்டிக்மா' இருக்கத்தான் செய்கிறது. இதுதான் 'பாதிக்கப்பட்டோர் பார்வை' என்பதாகும். என்னதான் இருந்தாலும் அவர்கள் வெளிநாட்டுப் பணத்திற்காக மதம் மாறியவர்கள் என்கிற அவதூறு இன்னும் ஒரு கறையாக அவர்கள் மீது படிந்து இருக்கிறது.

இஸ்லாமியர்களின் மதப் பிரச்சாரங்களின் பிரச்சாரத்திற்கு இலக்காகி இவர்கள் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். அங்கே இன்னும் கீழ்சாதியாகத்தான் நடத்தப்படுகின்றார்கள். உயர்ந்த இஸ்லாமியர்களும் தாழ்ந்த இஸ்லாமியர்களும் அதிலே இருக்கிறார்கள் என்கிற விமர்சனங்களும் ஒருபுறம் இருக்கின்றன.

அது உண்மையில்லை என்றாலும் கூட அது இன்னும் ஒரு சமூகக் கறையாக இருக்கிறது. இவ்வாறு அதன் அடிப்படையைப் புரிந்து கொள்ளுவது தான் 'பாதிக்கப்பட்டோர் பார்வை' ஆகும். அதாவது மதம் மாறிய அவர்களுக்கு இது ஒரு சமூக நெருடலாக இருக்கிறது என்பதைப் புரிந்துக் கொள்வதாகும்.

மதம் மாறியவர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள் காலப்போக்கில் முழுமையான இஸ்லாமியர்களாகி பழைய உறவுகளிலிருந்து விலகிப்போய் விடுவார்கள். மிச்சமிருப்பவர்கள் தலித் இந்துக்களாகவே அங்கு வாழும் நிலை ஏற்படும். பாதிக்கப்பட்டோர் பார்வையிலிருந்து இதனைப் பார்க்கிற போது குடும்ப உறவுகளில் இப்படிப்பட்ட விரிசல்களும் இடைவெளிகளும் ஏற்படுகின்றன என்பதைக் கவனிக்க முடியும்.

பொருளாதாரத்தால் உயர்ந்திருக்கிறார்கள். சமூகத்தகுதியால் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தலை நிமிர்வு ஏற்பட்டிருக்கிறது என்கிற நேர்மறையான ஒரு மதிப்பீடு உள்ளது. இது மதமாற்றத்தின் ஒரு சாதகமான அம்சமாகும். எனினும் மொத்தமுள்ள 300 குடும்பங்களில், 200 குடும்பங்கள் இஸ்லாமியர்களாகவும், 100 குடும்பங்கள் இந்துக்களாக பிரிந்து போனதால், 100 தலித் இந்துக்கள் அந்த ஊரில் முன்னிலும் சிறுபான்மையினராக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மத மாற்றத்தில் இது ஒரு பாதகமான அம்சமாகும். இப்படிப் பார்ப்பதுவும் பாதிக்கப்பட்டோரியல் பார்வை எனப் புரிந்து கொள்ளலாம்.

### தலித் - இந்து - சிறுபான்மை



மூக்கன் (எ) உமர் கையாம்

இந்தியாவுக்குள்ளே சிறுபான்மையினர் எப்படி உருவானார்கள் என்றால், இந்துக்கள் என்னும் பெரும்பான்மையிலிருந்து மதம் மாறியதால் உருவானார்கள். தலித்துக்கள் எப்படி எல்லாக் கிராமங்களிலும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள் என்றால் தலித்துக்களாக இருந்தவர்கள் நிறைய பேர் இஸ்லாமியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், பவுத்தர்களாகவும் அல்லது சீக்கியர்களாகவும் மதம் மாறுவதால், மதம் மாறாதவர்கள் சிறுபான்மையினராகி விடும் நிலை ஏற்படுகிறது. அதாவது 'தலித் - இந்து - சிறுபான்மை' என்பது நிகழ்கிறது. இதனால் மதம் மாறாத தலித்துகளுக்குப் பாதிப்பு.

### தலைநிமிர்வு

மீனாட்சிபுரத்தில் நடந்த இந்தப் பெருந்திரள் மதமாற்றத்தை, பாதிக்கப்பட்டோர் பார்வையிலிருந்து கவனிக்கிற போது, பல்வேறு சமூகக்காரணிகளும், பொருளியல் காரணிகளும், அரசியல் காரணிகளும் மதமாற்றத்திற்கான அகநிலைக் காரணிகளாகவும், புறநிலைக் காரணிகளாகவும் இருந்து அவர்களை உந்தித் தள்ளியிருக்கின்றன. அதாவது அவர்கள், தங்களுக்கான தலைநிமிர்வைத் தேடவும், விடியலைத் தேடவுமே மதம் மாறினார்கள் என்பதை இந்த ஆராய்ச்சியிலிருந்து அறியமுடிகிறது. ◈



# சிலுவை யுத்தம் 2.0

# MAINSTREAM ISLAM
# பொதுத்தள இஸ்லாம்

சென்ற இரண்டு இதழ்களில், அமெரிக்காவும், அதன் பின் அணி வகுத்து நிற்கும், ஐரோப்பிய நாடுகளும், ஏன் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் தாக்கு கின்றார்கள்? இதற்கான காரணங்களை அவர்களின் ஆய்வுகள், அறிக்கைகள், திட்டங்கள் இவற்றிலிருந்தே எடுத்துக்காட்டி வருகின்றோம்.

அமெரிக்காவும், அதன் பின் அணிவகுத்து நிற்கும், ஐரோப்பிய நாடுகளும், அச்சப்படுவது, Mainstream Islam-பொதுத்தள இஸ்லாம் என்பதை John Feffer-ஜான் பெப்பர் தனது சிலுவைப் போர் 2.0 என்ற நூலில் குறிப்பிட்டார்.

இந்த Mainstream Islam, அதாவது இது பொதுத்தள் இஸ்லாம், என ஜான் ஃபெஃபெர், எதைச் சொல்லுகின்றார், யார் யாரைக் குறிப்பிடுகின்றார்? என்பதைச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

அவர்களின் சாதனைகள் சிலவற்றையும் நாம் சென்ற இதழில் பட்டியலிட்டிருந்தோம். அவர்களின் இன்னும் சில சாதனைகளை இங்கே தருகின்றோம்.

இவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் அவையை அமெரிக்காவில் உருவாக்கினார்கள். Center for American Islamic Relationship என்பதாக. CAIS; அமெரிக்க இஸ்லாமிய உறவுகளுக்கான மையம்.

உலகெங்கும் முஸ்லிம்களின் பெயரால் தீவிர தாக்குதல்களை நடத்திக் கொண்டிருப்பது அந்தந்த நாட்டின் உளவுத்துறைதான். இதற்குத் தேவையான எல்லாத் திட்டங்களையும், பணத்தையும் தருவது, தேவையானால் ஆட்களையும் தருவது சிமிகி என்ற அமெரிக்காவின் உளவுத்துறைதான்.

இப்படி ஒவ்வொரு முறை குண்டு வெடிப்புகளை நடத்திடும் போதும், இந்த அமைப்பு தீவிரமான காவல்துறையின் கண்காணிப்பிற்கும், அதிரடி சோதனை களுக்கும் உள்ளாகும். இப்படி அடிக்கடி நடக்கும் சோதனைகளை அமைதியுடன், எதிர்கொண்டு அமெரிக்காவில் இஸ்லாத்தைப் பரப்பிடும் வேலைகளைச் செய்து வருகின்றார்கள்.

இவர்கள் படிப்படியாக எந்த அளவிற்கு உயர்ந்து சென்றார்கள் என்றால், அத்தனை வெறுப்பின் ஊடேயும், அமெரிக்காவின் நிருவாகத் தலைமையகமான வெள்ளை மாளிகையின் நற்பெயரைப் பெற்றார்கள். வெள்ளை மாளிகையில் ஓர் இஃப்தார்

பார்ட்டியை - நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை அமெரிக்காவின் அதிபரே நடத்திடும் அளவிற்கு கொண்டு வந்தார்கள்.

உலக முஸ்லிம் நாடுகளின் மேல் அடாவடித் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த அதிபர் ஜார்ஜ் புஷ் அவருடைய காலத்திலும் வருடந்தோரும் இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

அமெரிக்கா அதிபர் புஷ்ஷுடைய நாட்களில் அவர் நோன்பு துறக்கும் நிகழ்ச்சியில் ஆற்றிடும் உரையில், இஸ்லாத்தைத் தீவிரவாதத்தோடு உரையை நோன்பு துறக்கும் நிகழ்ச்சியின் போது ஆற்றிடும் உரையை திருத்தியதாக, பின்னர் அமெரிக்காவின் CIA என்ற மத்திய உளவுத்துறை கூறுகின்றது.

புஷ் அவர்கள் ஆற்றிய இஃப்தார் உரையில், முஸ்லிம்கள் கொண்டு வந்த மாற்றங்களைக் கண்டு அதிர்ந்து போன உளவுத்துறை இப்படிக் குறிப்பிட்டது.

“நாம் உலகமெல்லாம் வாழும் முஸ்லிங்களைக் கண்காணித்து அவர்களின் செயல்களை முடக்கிப் போட்டுக் கொண்டிருக்கும் போது, அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள், வெள்ளை மாளிகைக்கு உட்புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்திருக்கின்றார்கள்.”



**2018 ரமளானில் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டிரம்பின் முதல் இஃப்தார் பார்ட்டி**

சம்மந்தப்படுத்தி பலப்பத்திகளை இணைத்திருந்தார்.

இந்த சொல் - தீவிரவாதம் என்ற இந்த சொல் இஸ்லாத்திற்கு அந்நியமானது. நீங்கள்(அதிபர் புஷ்) இந்தச் சொல்லைப் பயன்படுத்தும் போதெல்லாம், பெரும் பகுதி முஸ்லிம்கள் உங்களை வெறுக்கின்றார்கள் எனச் சொல்லிச் சொல்லியே அவருடையே உரையைத் திருத்தினார்கள்.

இந்த முஸ்லிம்களின் அழுத்தங்களுக்கு ஆளாகி, 7 முறை தன்னுடைய இஃப்தார்

-Team Report; Shariah the Threar to America.(விரிவான தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம் 2012 ஜனவரி அட்டைப்படக் கட்டுரை)

இந்த இஃப்தார் நிகழ்ச்சிகள் கிளிண்டன் காலத்தில் தொடங்கி இன்றளவும் தொடர்ந்து வருகின்றன. இப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ஃப் அவர்களுக்கு உலகில்

அறவே பிடிக்காத ஒன்று இஸ்லாம். இதுவரை அமெரிக்காவில் வந்த அதிபர்கள் அத்தனை பேரும் ‘NEO CONS’, ‘நியோகான்ஸ்’ அதாவது 'NEO CONSERVATIVES' என்ற புதிய கிருஸ்தவ பழைமைவாதிகளால், வழி நடத்தப் பட்டார்கள். கிளின்டன், புஷ், ஒபாமா ஆகியோர் இந்த புதிய கிருஸ்தவ பழைமை வாதிகளால் வழி நடத்தப்பட்டவர்கள் தாம். ஆனால் இப்போதைய அதிபர், இவர்கள் வளந்ததை விட தீவிரமான ஓர் அமைப்பில் வளர்ந்தவர். வார்த்தெடுக்கப்பட்டவர்.

அந்த அமைப்பின் பெயர் தான், ‘Klu Klux Klan - குளூ கிளக்ஸ் கிளான்’ என்பதாகும். இந்த அமைப்பு கிருஸ்தவர்களிலேயே வெள்ளைக் கிருஸ்தவர்கள் தாம் சிறந்தவர்கள். ஏனைய எல்லோரும், இவர்களுக்கு அடிமைகள் அல்லது இவர்களால் அழிக்கப்பட வேண்டியவர்கள். இவர்கள் அறிவை விட, அறிவார்ந்த செயல்களை விட, ஆயுதங்களையும், ஆட்களைக் கொலை செய்வதையுமே அதிகமாக நம்புகின்றவர்கள்.

கருப்பு நிறத்தை உடையவர்களும் மனிதர்களே அவர்களும் மனித உரிமை பெற வேண்டும், எனப்பேசிய அமெரிக்காவின் குடியரசு தலைவர் ஆப்ரஹாம் லிங்கன், ஜான் எஃப் கென்னடி போன்றவர்களைப் பட்ட வர்த்தனமாகக் கொலை செய்தவர்கள். இவர்களைப் பற்றி முழு வரலாற்றை அறிந்திட வைகறை வெளிச்சம், ஜூலை 2015 இதழில் அட்டைப் படக் கட்டுரையைப் படிக்கவும்.

இந்த இனவெறி, நிறவெறி அமைப்பின் உறுப்பினர் இன்றைய அமெரிக்க அதிபர் டுனால்டு டிரம்ஃப் இன் தந்தை. அதே வார்ப்பில் அதே இயக்கத்தில் வளர்ந்தவர் தான் டிரம்ஃப். அவரே வேண்டா வெறுப்பாக ஒரு நோன்பு துறக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திட வேண்டியவரானார் என்றால் இந்தப் பொதுத்தள - Mainstream முஸ்லிம்களின், சாதனை எவ்வளவு பெரியது என்பதை நம்மால் கணக்கிட முடியும்.

இவர்களையும் இவர்களின் இஸ்லாத்தையும் தான் நாங்கள் அஞ்சுகிறோம். என்கிறார் ஜான் பெப்ஃபெர் - இரண்டாவது சிலுவைப் போர் என்ற நூலின் ஆசிரியர்.

இந்த சிலுவைப் போரை - இரண்டாவது சிலுவைப் போரை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள், என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

**- MGM**

29.07.2018 அன்று நாகர் கோவிலில் ஊட்டு வாழ் மடம் இழுப்படி காலனியில், அன்பகம் தாஃவா குழு சார்பாக கிராமிய தாஃவா இஸ்லாமிய அழைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் குமரி மாவட்ட தலைவர் ஜின்னா தலைமை தாங்கினார். நாகை மாவட்ட தாஃவா ஒருங்கிணைப்பாளர் இம்தியாஸ் அவர்கள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தியதோடு உலக மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக இஸ்லாம் தரும் தீர்வையும் எடுத்துரைத்தார். குமரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அப்துல் பாஸித் நன்றியுரை கூறி நிகழ்ச்சியை முடித்து வைத்தார். இந்த தாஃவா நிகழ்ச்சியில் மக்கள் ஆர்வமாக கலந்து பயன் பெற்றனர். அல்ஹம்துலில்லாஹ்.



# அழைப்பியல்...



# போலி வாக்காளர் அட்டை பா.ஜ.க-வின் புதிய உத்தி

நாடு முழுவதும் கலவரங்களை நடத்தியும் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியும் மனித உயிர்களை குடித்து அந்தப் பழியை முஸ்லிம்களின் மீது சுமத்தி வெறுப்புப் பிரசாரத்தின் வழி ஆட்சியை பிடித்தவர்கள் தான் இன்று மத்தியில் ஆட்சியில் இருக்கும் காவி கும்பல்.

அதை அவர்கள் வெளிப்படையாகவே பிரகடனப்படுத்தினார்கள் “Riot is our route - riots for votes” “கலவரங்களே எங்களின் வழிமுறை கலவரங்கள் ஓட்டுக்காக” என்றே 2014 தேர்தலில் தனிப்பெரும் பெருபான்மையோடு வென்றது பா.ஜ.க.

ஆட்சியில் அமர்ந்தவுடன் இந்த காவிகளின் முகத்திரை கிழிந்தது இவர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆம் அதன் வெளிப்பாடு தான் மத்தியில் ஆட்சியை பிடித்து ஒரு வருடம் கூட நிறைவடையவில்லை டெல்லியில் 2015 பிப்ரவரியில் நடந்த சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க மண்ணைக் கவ்வியது. ஆம் ஆத்மி ஆட்சியை பிடித்தது. உடனே விழித்துக் கொண்டார்கள் இந்த பாசிஸ்டுகள். தங்களின் வெறுப்புப் பிரச்சாரம் இனி தேர்தல் வெற்றிக்கு உதவாது என்பதை உணர்ந்து மற்றொரு வழிமுறையை கையில் எடுத்தார்கள்

**வெற்றியின் ரகசியம் இ.வி.எம்.எஸ்(EVMS)**

அது EVMS(Electronic voting machine) எனப்படும் இ.வி.எம்.எஸ் கருவியை தனக்கே வாக்குகள் விழும் படி தயார் செய்வது அல்லது அதன் செயல்பாட்டில் தலையிட்டு பா.ஜ.க விற்கு வாக்குகள் விழும் படி மாற்றுவது இதை Tampering என்று கூறுவார்கள்.

இப்படித்தான் வட மாநிலங்களில் பல இடங்களை கைப்பற்றினார்கள் இந்த வெறியர்கள். இதை நாம் நமது வைகறை வெளிச்சம் இதழில் பல முறை சுட்டிக் காட்டியிருக்கின்றோம். பல மாநிலங்களிலும் மக்கள் பா.ஜ.க-விற்கு எதிராக தங்கள் வாக்குகளை அளித்தும் பயனில்லாமல் போனது.

இதை டெல்லியில் கடந்த வருடம் ஜூன் மாதம், ஆம் ஆத்மி கட்சியின் சட்டமன்ற உறுப்பினரான சுரப் பரத்வாஜ், வாக்கு சேகரிக்கும் கருவியான இ.வி.எம்.எஸ்-ஐ எப்படி டேம்பரிங் செய்யலாம் என்பதை சட்ட மன்றத்தில் செய்து காட்டினார்.

அதைப் பார்த்தவர்கள் அதிர்ந்து போனார்கள். தாங்கள் அளிக்கும் வாக்குகள் அனைத்தும் ஏட்டு சுரைக்காய் என்பதை அறிந்துக்கொண்டார்கள். ஆனால் தேர்தல் ஆணையமோ அதை மறுத்தது வீம்புக்கு வாய் சவடால் விட்டது. இ.வி.எம்.எஸ்-ஐ யாராலும் டேம்பரிங் செய்திட முடியாது என்றது. காரணம் தேர்தல் ஆணையத்தின் ஆசியோடு தான் மோடி வகையறாக்களின் இந்த மோசடிகள் நடந்தேறுகின்றன. ஆம் ஆத்மி இவர்களின் சவாலுக்கு ஒத்துக்கொண்ட பின்னர் சப்தமில்லாமல் போனது.

**உ.பி தேர்தல்**

சென்ற வருடம் உ.பி-யில் நடந்த சட்டமன்ற தேர்தலில் முஸ்லிம்கள் பெருபான்மையாக இருக்கும் தொகுதிகளிலும் பா.ஜ.க வென்றது, உள்ளாட்சி தேர்தலிலும் இவர்கள் தான்

பெருபான்மையான இடங்களை கைப்பற்றினர். பா.ஜ.க வெற்றியின் ரகசியம் EVMS கருவி தான் என்றனர் எதிர்கட்சியினர்.

உ.பி-யில் செல்வாக்குப் பெற்ற பல காலமாக ஆட்சியில் இருந்த சமாஜ்வாதி கட்சியால் ஒரு இடத்தைக் கூட பெற்றிட முடியவில்லை. மொத்தம் 16 மேயர் இடங்கள் அதில் 14 இடங்களில் பா.ஜ.க வெற்றிப்பெற்றது.

இதில் கவனிக்கப்பட வேண்டியது பா.ஜ.க வாக்குச் சீட்டின் வழி வாக்குகளை பதிவு செய்யும் வாக்குச்சாவடிகள் உள்ள தொகுதிகளில் வெறும் 15 சதவீத இடங்களை தான் வென்றது. ஆனால் EVMS கருவி உள்ள இடங்களில் 46 சதவீத இடங்களை வென்றுள்ளது என்று கொக்கரித்தார் அகிலேஷ் யாதவ். அதை எந்த ஊடகமும் பெரிதுப்படுத்தவில்லை. விளைவு 2017 குஜராத் தேர்தலில் மக்கள் பா.ஜா.க எதிராக வாக்களித்த போதும் EVMS தான் வென்றது.



**கர்நாடகா: போலி வாக்காளர் அட்டை பறிமுதல்**

பா.ஜ.க கர்நாடகத்தில் ஆட்சியை பிடித்திட 15 லட்சம் முஸ்லிம்களின் வாக்குகளை காணாமலாக்கியது. மட்டுமின்றி இன்னும் சில தகிடுத் தத்தங்களையும் செய்தார்கள் அதில் ஒன்று தான் போலி வாக்களர் அட்டைகளை வைத்து வாக்குகளை பெறுவது. கிட்டத்தட்ட 10,000 போலி வாக்காளர் அட்டைகள் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு பகுதியிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டது. இந்த பறிமுதல் நடந்தவுடன் பா.ஜ.க முந்திக்கொண்டு காங்கிரசை குற்றம் சாட்டியது. ஆனால் அந்த அடுக்கு மாடி குடியிருப்பு பா.ஜ.க பிரமுகரான மஞ்சுளா நஞ்சமுரி என்பவருக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது.

மொத்தம் 60,000-க்கும் மேற்ப்பட்ட போலி வாக்காளர் அட்டைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஆனால் குறைவானதே சிக்கியுள்ளது என்றார் ஜனதா தளம் தலைவர் தேவ கவுடா. இதை உறுதி செய்யும் விதமாக பிளாட் என்.115-இல் பல வாக்காளர் அட்டைகள் எரிந்து கிடந்ததை தான் பார்த்ததாக கூறியுள்ளார் பா.ஜ.க-வை சார்ந்த மம்தா வாசுதேவ்.

ஒட்டுமொத்தமாக இந்த பறிமுதல்கள் எல்லாம் எப்படியாயினும் பறிமுதல் செய்யப்பட அனைத்தும் பா.ஜ.க ஆர்.ஆர் நகர் தொகுதியில் மட்டும் தயார் செய்த போலி அட்டைகள் தான். மற்ற இடங்களில் கைவரிசையைக் காட்டி 104 இடங்களில் வெற்றிப் பெற்று விட்டனர்.

**போலி வாக்காளர் அட்டை அச்சடிப்பு தமிழகம் முழுவதும் நீளும் நெட்வொர்க்**

நாம் ஜூன் மாத இதழில் குறிப்பிட்டது போல் தமிழகத்தில் உள்ள 12 லட்சம் முஸ்லிம் வாக்காளர்களை காணாமலாக்கியது மட்டுமின்றி அந்த வாக்குகளை போலி வாக்குகளை கொண்டு நிரப்புவதற்கான வேலை நடந்துக் கொண்டிருக்கிறது.

ஆம்! தமிழ் இந்து ஜூலை 12 அன்று "போலி வாக்காளர் அட்டை அச்சடிப்பு; கம்ப்யூட்டர் மைய உரிமையாளர் கைது: தமிழகம் முழுவதும் நீளும் நெட்வொர்க்; அதிர்ச்சியில் போலீஸ்" என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது அதை அப்படியே வாசகர்களுக்கு இங்கே தருகின்றோம்

**போலியாக வாக்காளர் அடையாள அட்டைகள் அச்சடித்தது தொடர்பாக ஏற்கெனவே இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கோவையைச் சேர்ந்த கம்ப்யூட்டர் மைய உரிமையாளர் ஒருவரை நாகர்கோவில் போலீஸார் நேற்று கைது செய்தனர்.**

**இந்த முறைகேடு சங்கிலி தொடர்போல் தமிழகம் முழுவதும் நீள்வதால் போலீஸாரும், தேர்தல் அதிகாரிகளும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.**

**நாகர்கோவில் கோட்டாறில், ஈத்தாமொழி சாலையில் உள்ள சுமித் ஸ்டூடியோவில், போலியாக வாக்காளர் அடையாள**




அட்டைகளை அச்சடித்து, விநியோகம் செய்வதாக தேர்தல் அதிகாரிகளுக்கு புகார் வந்தது.

இதையடுத்து, தேர்தல் அதிகாரிகள் மற்றும் கோட்டாறு போலீஸார் சுமித் ஸ்டூடியோவை சோதனையிட்டபோது, போலி வாக்காளர் அட்டைகள் அச்சடிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு 800-க்கும் மேற்பட்ட போலி வாக்காளர் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஸ்டூடியோ உரிமையாளர் செந்தில்குமார், ஊழியர் சுபாஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்

**ரகசிய எண் கிடைத்தது எப்படி?**

தேர்தல் கமிஷனின் இணையதளத்தில் இருந்து வாக்காளர் அட்டைகளை பதிவிறக்கம் செய்து, அவற்றில் பெயரை இணைத்து அடையாள அட்டை கொடுக்கும் வகையில் ரகசிய குறியீட்டு எண் எவ்வாறு கிடைத்தது என்பது தேர்தல் அதிகாரிகள் மற்றும் போலீஸாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

செந்தில்குமாரிடம் நடத்திய விசாரணையில், கோவையில் உள்ள கம்ப்யூட்டர் மைய உரிமையாளர் சதீஷ்குமார்(35) என்பவர் மூலம் வாக்காளர் அட்டைகளை அச்சடித்தது தெரியவந்தது.


**போலிக்கு வாட்ஸ்அப் குழு**

குமரி தனிப்படை போலீஸார், கோவை சென்று, அங்கு பாவலர் நகரில் சதீஷ்குமாரை கைது செய்து நாகர்கோவில் அழைத்து வந்தனர். விசாரணையில் அவர், தேர்தல் கமிஷன் இணையத்தில் இருந்து வாக்காளர் அடையாள அட்டைக்கான விவரங்களை பதிவிறக்கம் செய்வதற்கான ரகசிய குறியீடு எண்களை, ராமநாதபுரத்தை சேர்ந்த ஒருவர் தனக்கு கொடுத்ததாக கூறினார். மேலும், வாக்காளர் அட்டைகளை போலியாக அச்சடிக்கும் ஸ்டூடியோக்கள், கம்ப்யூட்டர் மையங்களைக் கொண்ட வாட்ஸ்அப் குழு ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது. இவர்கள் தமிழகத்தில் பரவலாக உள்ளனர். இதனால், அதிர்ச்சியடைந்த போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.


இதில் கவனிக்கப்பட வேண்டிய தகவல் என்னவெனில் இதில் சம்மந்தப்பட்டிருக்கும் மூன்று மாவட்டங்களும் முஸ்லிம்கள் கணிசமாக இருக்கின்ற இடங்கள் என்பது மட்டுமின்றி நெடுங்காலமாக இந்துத்துவவாதிகளின் இலக்காகவும் இருந்து வருகிறது.

ஆகையால் தான் இந்துத்துவவாதிகளை கொல்ல முயற்சி, கொலை மிரட்டல் என்ற பெயரிலும் இன்னும் பிற பொய்யான காரணங்களை கூறியும் முஸ்லிம்கள் கைது செய்யப்படுவதும் அங்கு அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன . இப்போது போலி வாக்காளர் அட்டைகளின் வழி வாக்குகளை பெற்று வெற்றி பெறுவதற்கான வியூகத்தை வகுத்திருக்கின்றனர்.

**மு. இம்தியாஸ் அஹ்மத்**



விலை ரூ.220/-
81481 29887



# ஆட்சியாளர்களே வேதனையில் விளையாட வேண்டாம்......

## தலையங்கம்

நமது அண்டை மாநிலம் கேரளம். மலையும், பொழிலும் விரவி ஒய்யாரமாகக் காட்சி தந்த மாநிலம்! அண்மையில் அங்கு பெய்த பருவ மழை தண்ணீரைத் தாரை தாரையாகக் கொட்டிற்று. 85 ஆண்டுகளில் இல்லாத மழை! கேரள மாநிலத்தின் 14 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் பெரிதாக பாதிக்கப்பட்டன. பொது மக்களும், பாதுகாப்புப் படையினரும், பேரிடர் பெரும் படையினரும் தங்களால் இயன்றதை எல்லாம் செய்தாகள்.

ஆனாலும் ஏறத்தாழ 300 பேர் உயிரிழந்தார்கள். மலைச் சரிவு, நிலச்சரிவு, இடிபொருள் இவற்றை அகற்றிடும் போது, இன்னும் பல பிணங்கள் கிடைக்கலாம் எனப் பதைபதைத்து நிற்கின்றார்கள் அந்த மக்கள். காணாமற் போனவர்கள் எனக் கணக்கிடப்படும் பலரும் மரணித்திருக்கலாம் என்ற கலக்கமும், கண்ணீரும் அந்த மக்களின் கண்களில்.

ஏறத்தாழ 4 லட்சம் மிருகங்கள் பிணமாகி விட்டன. அவற்றின் உடல்களை அடக்கம் செய்வது ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. மொத்த வாழ்க்கையும் சிதறுண்டு போனது! காய்ந்த வயிற்றுக்கும் கஞ்சி வார்த்திடுவோர் காணாமல் போய் விட்டார்கள். எல்லாவற்றையும் மீண்டும் கட்டியெழுப்பிட வேண்டிய கட்டாய நிலை. வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டிட அந்த மக்கள் தயாராகி விட்டார்கள்.

உங்கள் துயரில் எங்களால் இயன்றதை எல்லாம் செய்வோம். உங்களைப் பின்னிப் பிணைந்த இந்த அவல நிலையிலிருந்து வெளியே கொண்டு வந்து விடுவோம் என வரிந்து கட்டிக் கொண்டு நன்கொடைகளையும், நிவாரணப் பொருட்களையும் வண்டி, வண்டியாக அனுப்பிக் கொடுத்தார்கள். இந்தியா முழுவதுமுள்ள மக்களும், தொண்டு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும்!

ஆனாலும் ஏற்பட்டிருக்கின்ற அழிவு மிகவும் பெரியது. மொத்தமாகப் பாதிக்கப்பட்ட மக்களைப் புனரமைக்க ரூபாய் 40,000 கோடி தேவைப்படும் என்பது அதிகாரிகளின் மதிப்பீடு(TH : 27. 08. 2018)

இதில் பெரிய அளவில் மத்திய அரசு தலையிட்டு உதவி செய்யும் என எதிர்பார்த்தார்கள்! ஏமாந்தார்கள்!!

இதுவரை 600 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு வழங்கியுள்ளது. பெரிய போராட்டங்களுக்குப் பிறகு இன்னொரு 562. 42 கோடியை மாநிலப் பேரிடர் நிவாரண நிதியோடு இணைத்துள்ளது.

இதில் ஐக்கிய அரபு நாடுகள் UAE: UNITED ARAB EMIRATES அறுநூறு கோடியை நிவாரணமாக அறிவித்தது. இந்தப் பணத்தை அவர்கள் அறிவிப்பதற்கு முன்பு இந்தியத் தூதரை அழைத்துப் பேசினர். இவ்வளவு பெரிய தொகையை ஏன் கொடுக்கின்றோம், என்பதற்கான காரணத்தையும் நன்றியோடு கூறினார். அது எங்களுடைய வளர்ச்சியில் அவர்களும், கேரளத்திலிருந்து வந்து உழைத்த மலையாள மக்களுக்கு முக்கியப் பங்குண்டு என்றனர்.

They are part of our Development என்றனர். அதாவது நாங்கள் உதவிச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம் என்ற உள்ளார்ந்த உணர்வோடு இந்த தொகையை அறிவித்தனர்.

ஆனால் இனப்படுகொலை புகழ் பிரதமர் மோடிக்குப் பொத்துக் கொண்டு வந்து விட்டது. அந்தப் பணத்தை –ஐக்கிய அரபு நாடுகள் தரும் பணத்தைப் பெறக்கூடாது எனக் கூறிவிட்டார்.

தன்னுடைய காழ்ப்புணர்வுக்குத் துணையாக 2004 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் உளரல் ஒன்றைக் காட்டினார். ஆனால் 2016 ஆம் ஆண்டு மோடி அரசு என்ன முடிவு செய்தது என்பதை மறந்து விட்டார்.

2016 ஆம் ஆண்டு மே திங்களில் மோடி அரசு வடிவமைத்தப் பேரிடர் மீட்புத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு என்ற அத்தியாயத்தில் இப்படிக் கூறியது மோடி அரசு;

"வெளிநாடுகளிலிருந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள் என யாரும் கேட்கக்கூடாது. ஆனால் வெளிநாடுகள் ஏதேனும் உதவிகளைத் தந்தால் பெற்றுக் கொள்ளலாம். "

மோடியின் அரசு காங்கிரஸ் அரசின் முடிவை மாற்றியுள்ளது. அப்படியிருக்க ஏன் ஐக்கிய அரபு நாடுகள் தரும் உதவியை மோடி அரசு தடுக்கின்றது?

ஆனால் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், அடுத்த நாளே பொட்டில் அறைந்தார் போல் ஓர் அறிவிப்பைச் செய்தார். அதில் அந்தப் பணத்தை பெறுவதற்கு அனுமதியுங்கள், அல்லது அதே போன்றதொரு இழப்பீட்டுத் தொகையை தாருங்கள், எனக்கேட்டார்.

இது போன்ற மனிதாபிமான உதவிகளை மறுப்பது மனித தன்மையற்ற செயல். இங்கே மோடியை வார்த்தெடுத்த பாசிசக் கொள்கையே பளிச்சிடு கின்றது. அல்லாமல் மோடி அமர்ந்திருக்கும் பதவியின் தாரதம்மியங்கள் வேலை செய்யவில்லை.

அரசியலில் வீற்றிருப்பவர்கள் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான படிப்பினைகள் பயனுள்ள தத்துவங்கள் இவை இஸ்லாத்தின் வரலாற்றில் நிரம்பவே உண்டு.

இஸ்லாத்தின் வரலாற்றில், இஸ்லாமியக் குடியரசு தலைவராக, கலீஃபா அபூபக்ர்(ரலி) அவர்கள் வீற்றிருந்த காலம். ஆட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் பஞ்சம் தொற்றிக் கொண்டிருக்கின்றது. பொது நிதி கருவூலத்தில் இருப்பதைப் பங்கு வைத்து மக்களுக்கு விநியோகிப்பது குறித்த ஆலோசனை ஒன்று நடை பெற்றது.

அந்த ஆலோசனையில் பங்குப் பெற்றவர்களில் சிலர், இஸ்லாத்திற்காக நாட்டையும், உடைமை களையும் தியாகம் செய்து மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்தவர்களுக்கு(முஹாஜிர்களுக்கு) முன்னுரிமை வழங்கிடலாம் எனக் கூறிய போது, கலீஃபா அபூபக்ர்(ரலி) அவர்கள் இப்படிக் கூறினார்கள்;

"இது பட்டினி சம்மந்தப்பட்டப் பிரச்சினை. இங்கு யார் அதிகமாக கஷ்டப்படுகின்றார்களோ அவர் களுக்கே முதல் பங்கு"

இந்தப் பின்னணியில் யூதர்களின் மதகுருவான ரிப்பியூன்களுக்கே முதல் பங்கு வழங்கப்பட்டது.

இந்தப் பார்வை, வரட்சிக்கும் வேதனைக்கும் கஷ்டப்படுபவர்கள், நம்மைச் சார்ந்தவர்களா? அல்லது, நமது எதிரிகளா? எனப் பார்க்காமல், யார் அல்லல்களுக்கும், அவலங்களுக்கும் உள்ளாவார் களோ அவர்களுக்கு நிவாரணம் என்றப் பார்வை மக உன்னத மனித மாண்பு. இதை இஸ்லாமிய வரலாற்றிலும், இறைவனை அஞ்சி வாழ்பவர் களிடமே எதிர் பார்க்க இயலும்.

அல்லாமல் வெறுப்பையும், காழ்ப்பையும் மனதில் உறைய வைத்து அதிலேயே மூழ்கித் திளைத்த மத்திய ஆட்சியாளர்களிடம் எதிர் பார்த்திட இயலாது.

அந்த மக உன்னத வழிகாட்டுதல் இங்கே நிலை நிறுத்தப்பட, நீதி நிலைக்க அனைவரும் உழைப்போம். இன்ஷா அல்லாஹ்...

**மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.**
**(அல்குர்ஆன்:4:1)**



# RSS.ம் - பிரணாப் முகர்ஜியும்

(வேற்று மத மக்கள் மீது வெறுப்பை உமிழ்ந்து கொண்டும், அவர்களை அச்சுறுத்திக் கொண்டும், அவர்கள் மீது தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருந்தபோதிலும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இனி தீண்டத் தகாதது அல்ல என்றும், மற்ற சமூக, அரசியல் இயக்கங்களைப் போன்றதுதான் என்றும் பிரணாப் முகர்ஜி அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார்.)

எதிரெதிரான தங்களது கோட்பாடு பற்றி நிச்சயமான நம்பிக்கை கொண்டவர் களிடையே எந்தவித சமரச பேச்சுவார்த்தையும் நடக்க இயலாது. அடால்ப் ஹிட்லருடன், யூதர்கள் எந்த ஒரு பேச்சுவார்தையையும் நடத்த மாட்டார்கள். ஒசாமா பின்லேடனுடன் அமெரிக் கர்கள் எந்தவித பேச்சுவார்த்தையையும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். ஒரு பாசிச மனம், நம்ப இயலாதபடி வியக்கத் தக்க வகையில் தெளிவாக இருப்பதாகும். அதன் முக்கிய காரணமே அந்த மனம், திறந்ததாக இல்லாமல் மூடியதாக இருப்பதுதான். பாசிசக்காரர்களிடமிருந்து பாசிசக் கோட்பாட்டை அகற்ற முடியும் என்பதை, தவறான பெருந்தன்மையான எண்ணம் கொண்டவர்களால் மட்டுமே சிந்தித்துப் பார்க்க முடியும்.

அதிகாரிகளின் பயிற்சி என்று ராணுவ ரீதியில் ஆர்.ஸ்.எஸ். அமைப்பு அழைத்துக் கொள்ளும் அவர்களது பிரச்சாரகர்களின் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்ட முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களுடன் ஒரு ஊமை மொழியில் பேசினாரா? பிரணாப் முகர்ஜியை வரவேற்றுப் பேசும்போது ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் நிச்சயமாக இதைக் குறித்துதான், "சங்கம் சங்கமாகவே இருக்கும்; பிரணாப் முகர்ஜி

பிரணாப் முகர்ஜியாகவே இருப்பார்" என்று கூறியிருப்பார் போலும். எனவே, இந்திய தேசியத்தில் அடங்கியிருப்பது என்ன என்பதைப் பற்றியோ அல்லது இந்தியாவைப் பற்றிய ஒரு கருத்தைப் பற்றியோ நாக்பூரில் எந்த ஒரு முடிவும் மேற்கொள்ளப் படமாட்டாது என்பது முன்னதாகவே அனைவரும் அறிந்த செய்திதான்.

இந்தியாவின் எதிர்காலம் இந்திய குடிமக்களால் தீர்மானிக்கப்படுவதே அன்றி, ஒரு மேடையில் கை கோர்த்துக் கொண்டிருக்கும் இரண்டு முதியவர்களால் தீர்மானிக்கப்படுவது அல்ல.

இந்திய வரலாறு பற்றியும், அதன் அரசமைப்பு தேசியம் உருவானது பற்றியுமான தொரு விளக்கம் அழகிய அலங்காரம் நிறைந்த சொற்களாலும், மொழியாலும், முகர்ஜி அவர்களால் அளிக்கப்பட்டது என்றாலும் அது ஒன்றும் முற்றிலுமாக வீணாக்கப்பட்ட நேரமல்ல; அதற்கென்று அடையாளம் கொண்ட ஒரு நோக்கம் அதற்கு இருந்தது. காங்கிரஸ் கட்சியிடமிருந்து தன்னை தனிப்பட்ட முறையில் விலக்கி வைத்துக் கொள்வதற்கு, முன்னாள் குடியரசுத் தலைவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். பெயரளவுக்கு ஓரமைப்பை நடத்திக் கொண்டும், வாய்ப்பு கிடைக்கும் நிகழ்ச்சிகளில் எல்லாம் கலந்து பேசிக் கொண்டும் இருப்பதைத் தவிர ஓய்வு பெற்ற குடியரசுத் தலைவருக்கு வேறு வேலை எதுவும் இல்லை. பார்வையாளர் அரங்கில் உட்கார்ந்து கொண்டு விளையாட்டை வேடிக்கைப் பார்ப்பதில் மனநிறைவடையாத அவர் களத்தில் இறங்கி மறுபடியும் விளையாடுவதற்கு விரும்புகிறார்.



இந்துமதக் கோட்பாடும், மதசார்பின்மையும் ஒரே நேரத்தில் நாட்டில் உயிர்ப்புடன் செயல்பட இயலும் என்று கூறி, தன்னை இந்து மதத்தைப் பின்பற்றுபவன் என்று அடையாளப் படுத்திக் கொள்ளும் அவர், கூர்மையாகப் பிளவுபட்டு குழப்பமடைந்திருக்கும் அரசியல் காட்சியில், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலையில் இருவேறு அரசியல் துருவங்களின் கோட்பாட்டு இடைவெளிக்கு பாலம் அமைக்க இயன்ற, எதிர்காலத்தை நிர்ணயிக்க இயன்ற ஒரு நடுவராக தன்னை முன்னிலைப்படுத்தி முன்னாள் குடியரசுத் தலைவர் காட்டிக் கொள்கிறார் என்றே தோன்றுகிறது. மேலும் ஒரு படி மேலே சென்ற அவர், ஆர்.எஸ்.எஸ். தோற்றுவிப்பாளரான கேசவ் பாலிராம் ஹெட்கேவார் பிறந்த இல்லத்துக்கு சென்று, "இந்தியத் தாயின் ஒரு மாபெரும் மகன்" என்று அங்கிருக்கும் வருகையாளர் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் அது மேற்கொண்டு வரும் மக்களைப் பிளவு படுத்தும் செயல்பாடுகளை சாதாரணமானவையாகக் கருதுவதற்கு உதவும் ஒரு பேச்சு வார்த்தையைத் துவக்குவதற்கான ஓர் அரசியல் அரங்கமே இது.

இது போன்ற முயற்சிகள் இதற்கு முன்னரும் மேற் கொள்ளப் பட்டிருக்கின்றன. காங்கிரஸ் கட்சிக்கு எதிரான சம்யுக்த விதயக் தள அரசுகளில் 1960 ஆண்டுகளின் இடைக்காலத்தில் ஜனசங்கம் இடம் பெற்றபோது அதிகாரத்தை சுவைக்கவும் செய்தது. நெருக்கடி நிலையின் போதும், அதற்குப் பிறகும் அகண்ட அரசியல் கூட்டணிகளில் இடம் பெற அதனால் இயன்றது. 1984ஆம் ஆண்டு கலவரங்களுக்குப் பின்னர், ஆர்.எஸ்.எஸ். தனது ஆதரவை காங்கிரசுக்கு அளித்தது. 1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களின் போது, ராஜுவ் காந்திக்கு எதிராக வி.பி.சிங்குக்கு ஆதரவு அளித்து அது பிரச்சாரம் செய்தது. வெறுப்பு வியாபாரிகள் மீது இப்போது

ஒரு வங்காள பார்ப்பனர் 'புனித' நீரைத் தெளித்து விட்டு,கோட்பாட்டுப் போரில் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவித்துக் கொண்டு திரும்பி வந்துள்ளார்.

2019ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எந்த ஒரு அணிக்கும் பெரும்பான்மை கிடைக்காத தொரு நிலையில், குழப்பமடைந்து பிளவு பட்டிருக்கும் அரசியல் சூழலில், அனைவரும் ஒப்புக் கொள்ளும் ஒரு தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இயலும் என்று முகர்ஜி நம்புவதாக சில அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்தனர். எவ்வாறாயினும், ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் உறவு கொண்டதன் மூலம், இந்திய வாக்காளப் பெருமக்களில் இரு பெரும் முக்கியமான பிரிவினரான தலித்துகள் - முஸ்லிம்களின் ஆதரவை முகர்ஜி இழந்து விட்டார். இக்குழுக்களின் ஆதரவை நம்பியிருக்கும் அரசியல் கட்சிகள் முகர்ஜியுடன் எவ்விதத் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்பமாட்டார்கள்.

2019ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு கூட்டணி ஆட்சி ஏற்பட வேண்டிய நிலை ஏற்பட்டால், அத்தகையதொரு ஆட்சிக்கு தன்னைத் தலைவராக ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், இதர இந்துத்துவ வாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற அளவுக்கு அதிகமான நம்பிக்கையை ஒரு வேளை முகர்ஜி கொண்டிருக்கக்கூடும். தங்கள் வாழ்நாள் முழுவதும் இயக்கத்திற்காகப் பாடுபட்டவர் களை விட்டுவிட்டு, 50 ஆண்டு காலம் ஆட்சி அதி காரத்தில் இருந்து அனுபவித்த முகர்ஜியை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் சிறிதும் இல்லை.

நாட்டின் மிக உயர்ந்த பதவியை எட்டுவதற்கு தாங்கள் உதவி செய்த பிரணாப் முகர்ஜி, எந்த விதமான மிகப் பெரிய பேரழிவினையும் ஏற்படுத்திவிடவில்லை என்பதைக் குறித்து காங்கிரஸ்காரர்கள் நிம்மதிப் பெரு மூச்சு விடுகின்றனர். சகிப்புத் தன்மை மற்றும் பன்முகத் தன்மை பற்றி ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் களுக்கு, அவர்களது இடத்திற்கே சென்று முகர்ஜி உரையாற்றியுள்ளார் என்பதைப் பற்றி தங்களது மனநிறைவை காங்கிரஸ் கட்சியினர் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர்.

இந்திய வரலாறு பற்றிய தனது நீண்டதொரு உரையில், ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் அடையாளப்படுத்திக் கொள்வதற்கான ஒரு பொதுவான கோட்பாட்டு சந்திப்பு முனையைத் தேடிக் கண்டுபிடிக்க முகர்ஜி முயன்றுள்ளார் என்பதை ஒப்புக் கொள்வதற்கு காங்கிரஸ் காரர்கள் மறுக்கின்றனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும், அதன் கோட்பாட்டுத் தோற்றுநருமான சாவர்கருக்கும் மிகவும் பிரியமான, எப்போதுமே இந்தியாவில் நிலை பெற்றிருப்பது என்று அவர்களால் கருதப்படும், இந்தியாவைப் பற்றிய கலாச்சாரக் கண்ணோட்டத்திற்கு முகர்ஜி மரியாதை கலந்த வணக்கத்தைச் செலுத்தினார். இந்தியக் கலாச்சாரம் எப்போதுமே பன்முகத் தன்மையும், சகிப்புத் தன்மையும் கொண்டது என்ற முகர்ஜியின் கூற்றினை, புத்த மதம் அது பிறந்த நாடான இந்தியாவிலிருந்தே முழுமையாக வெளியேற்றப்பட்டதும், அண்மையில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் மறுப்பதாகவே உள்ளது. கல்வி அறிவற்ற காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்கள் சிலரையும், சில தொலைக் காட்சி விமர்சகர்களையும் வேண்டுமானால் முகர்ஜி முட்டாள்களாக ஆக்கியிருக்கலாம்.

ஆட்சியாளர்களின் அகந்தை மற்றும் சகிப்புத் தன்மையின்மை பற்றி ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கண்டனம் செய்ததுடன், அடக்கமற்ற அதிகாரம், மாபெரும் தீய சக்தியாக மாறிவிடும் என்று எச்சரித்ததையும் கண்டு காங்கிரஸ்காரர்கள் உண்மை என்று எண்ணி ஏமாந்துவிடக்கூடாது. இதனை தற்போதைய ஆட்சியாளர்களுக்கான ஓர் எச்சரிக்கை என்று அவர்கள் விளக்கம் அளித்தாலும், பா.ஜ.க. விடமிருந்து தன்னை விலக்கிக்கொள்ளும் நோக்கத்தின் அடையாளமாக இருப்பதல்ல அது.

முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் செயல்பாடுகள் அனைத்திலும் இருந்து காங்கிரஸ் கட்சி தன்னை தெளிவாக விலக்கி வைத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். முதலாவதாக, முகர்ஜியை, நாக்பூருக்குச் செல்ல வேண்டாம் என்று சொல்லியிருக்கவோ, இப்போது அவரைப் புகழ்வதற்கோ தேவையே இல்லை. நிச்சயமற்ற ஆதாயத்துக்காக தனது வாழ்நாள் முழுவதிலும், தான் கடைப்பிடித்து வந்த அரசியல் அனுபவத்தை சூதாடித் தோற்பதற்கு விருப்பம் கொண்டுள்ள இந்த தந்திரம் மிகுந்த அரசியல்வாதியுடன் தொடர்பு வைத்துக் கொள்வதால், காங்கிரஸ் கட்சிக்கு எந்த விதப் பயனும் இல்லை.

மிகுந்த எச்சரிக்கையுடன் தயாரித்து நடத்தப்பட்ட நாக்பூர் நாடகத்தில் முக்கியமாகப் பயன்பெற்றது ஆர். எஸ்.எஸ். அமைப்புதான்.

**நன்றி: விடுதலை**

# தரம் தான் முக்கியம் எண்ணிக்கையல்ல



இமாம் யூசுஃப் அல் கர்ளாவீ.,

தரம் Quality எண்ணிக்கை Quantity இரண்டில் எது முக்கியம்?

பண்பு Character பருமன் size இரண்டில் எது முக்கியம்?

இப்படியொரு கேள்வியைக் கேட்டால் பருத்த உடல் வாகுடன் இருந்து என்ன பயன்? தலைகள் அதிகம் இருந்து என்ன செய்ய?

பண்பும் தரமும் முக்கியம் என்கிறது நம்முடைய மார்க்கம்.

சிந்தனைத் திறனற்ற படிப்பறிவற்ற, இறைநம்பிக்கை(ஈமான்) அற்ற நன்றியுணர்வற்ற மக்களை அதிகமாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை திருக்குர்ஆன் பழிக்கிறது; இகழ்கிறது.

அவர்களின் அநேகர் சிந்தனைத் திறனற்ற வர்கள்.(29:63)

எனினும், மனிதர்களில் அநேகர் ஞான மற்றவர்கள்.(7:187)

எனினும் அதிகமான மக்கள் இறை நம்பிக்கை இல்லாதவர்கள்.(11:17)

எனினும் அதிகமான மக்கள் நன்றி செலுத்த மாட்டார்கள்.(2:243)

இவ்வாறான வசனங்கள் இறைவேதமாம் திருக்குர் ஆனில் ஏராளம் உள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான்:

பூமியிலுள்ளவர்களில் பெரும்பாலானவர்களை நபியே நீர் பின்பற்றினால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிதவறச் செய்து விடுவார்கள். ஆதாரமற்ற வெறும் யூகங்களைத் தான் அவர்கள் பின்பற்று கின்றனர். இன்னும் அவர்கள் பொய்யான கற்பனைகளில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இவ்வாறெல்லாம் அதிக எண்ணிக்கையைப் பழிக்கும் திருக்குர்ஆன் பின்வரும் வசனங்களில் இறை நம்பிக்கையுடன் அறப் பணிகளாற்றி நன்றியுணர்வுடன் திகழும் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களைப் பாராட்டுகிறது.

இதோ அல்லாஹ் கூறுகிறான்:

இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தோரைத் தவிர இத்தகையோர் மோசக்காரர்களல்லர். இவர்கள் மிகச்சிலரே.(38:24)

என் அடியார்களில் நன்றி செலுத்துவோர் குறைவானவர்களே!(34:13)

பூமியில் நீங்கள் பலவீனமானவர்களாகவும் குறைந்த எண்ணிக்கை யுடையோராகவும் இருந்ததை எண்ணிப் பாருங்கள்.(8:26)

உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயங்களில் இந்த பூமியில் குழப்பங்களைத் தடுக்கக் கூடிய அறிவுடையோர் இருந்திருக்கக் கூடாதா? மிக்க குறைவான வர்களைத் தவிர அவ்வாறு இருக்கவில்லை. அவர்களை நாம் காப்பாற்றினோம். யார் அநியாயம் செய்தார்களோ அவர்கள் தம் செருக்கையே பின்பற்றுகிறார்கள். மேலும் குற்றவாளிகளாகவும்

**அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தரத்துக்குத் தந்த முக்கியத்துவத்தை அளவுக்கு Quantity க்குத் தரவில்லை என்பதை அவர்களின் வரலாற்றை வாசிப்போர் நன்கறிவார்கள். அண்ணல் நபியின் அருந்தோழர்கள் அவர்களுக்குப்பின் மக்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்ற கலீஃபாக்கள் ஆகியோரின் வாழ்விலும் இதை நாம் தெள்ளத் தெளிவாகக் காண முடியும்.**

இருந்தார்கள்.(11:116)

இப்படியெல்லாம் அருள் மறையாம் திருக்குர்ஆன் கூறுவதால் மனிதத் தலைகளின் எண்ணிக்கை அதிக மிருப்பதில் என்ன இருக்கிறது?

அவர்களில் எத்தனை பேர் இறை நம்பிக்கையுடனும் நற்பண்புகளுடனும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனும் திகழ்கின்றார்கள் என்பதே முக்கியம்.

கூட்டத்தைக் கூட்டிக் காட்டுவதில் நாட்டமுள்ள ஒரு கூட்டம் ஒரு நபிமொழியைச் சுட்டிக் காட்டுகிறது. அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

திருமணம் செய்துக் கொள்ளுங்கள். வாரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதிகமாகக் குழந்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மறுமையில் எல்லாச் சமுதாயங் களை விட நீங்கள் அதிகமாக இருப்பதை வைத்து நான் பெருமகிழ்ச்சி அடைவேன்.
(அறிவிப்பாளர்: மஅகல் பின் யஸார்(ரலி), நூல்:அபூதாவூத், நஸயீ)

இந்த நபிமொழி நமது எண்ணிக்கை அதிகமாக இருப்பது நபி(ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று கூறுகிறது. சரிதான் ஆனால், அந்தக் கூட்டம் பாவிகளாகவும், மூடர்களாகவும், அநியாயக் காரர்களாகவும் இருந்தால் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் மகிழ்ச்சி அடைவார்களா? நிச்சயமாக அடைய மாட்டார்கள்.

நற்செயல் புரிவோராக தூயவர்களாக, மற்றவர் களுக்கு உதவுவோராக இருப்பவர்களைக் கொண்டு தானே நபி(ஸல்) அவர்கள் மகிழ்வார்கள். பெருமை கொள்வார்கள். வெற்றுப் பதர்களால் என்ன பெருமை ஏற்பட்டு விட முடியும்? எனவே, வெறும் கூட்டம் மட்டுமே பெருமைக் குரியதல்ல. பண்பும் பயனும் உள்ள கூட்டமே பெருமைக்குரியது. இதோ பாருங்கள்! இன்னொரு நபிமொழியை:

“ஒன்று கூட வாகனத்திற்குறிய தகுதியில் இல்லாத நூறு ஒட்டகங்கள் இருப்பது போல் மனிதர்கள் உள்ளனர்.” என்று நபி(ஸல) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு உமர்(ரலி) நூல்: புகாரி)

அதாவது நூறு ஒட்டகங்கள் ஒருவரிடம் இருந்தும் அவற்றுள் ஒன்று கூட அவரின் பொதிகளைச் சுமந்திடவோ அவரின் வாகனமாக பயணத்தில் உதவிடவோ இல்லை யென்றால் அவற்றால் என்ன பயன்?

இது போல் நூற்றுக் கணக்கான மனிதர்கள் இருந்தும், மனிதப் பண்புமிக்கவர் அவர்களில் ஒருவர் கூட இல்லையெனில் அவர்களால் என்ன பயன்? தரமான ஒட்டகங்களைப் போல் தரமான மனிதர்களும் அரிதாகிவிட்டனர்.

பல்வேறு வகைப்பட்ட மிருகங்களிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை விட மனிதர்களுக்கிடையே இருக்கும் ஏற்றத் தாழ்வுகள் அதிகம். மனிதர்களில் பல தரத்தினர் உள்ளனர்.

“எந்தப் பொருளும் தன்னைப் போன்ற ஆயிரம் பொருள்களை விடச் சிறந்ததாக இருப்பதில்லை. மனிதனைத் தவிர” என்றொரு நபிமொழி உண்டு. (நூல்:தப்ரானி)

அதாவது, உருவத்திலும் வயதிலும் தன்னைப் போன்ற ஆயிரம் மனிதர்களை விட ஒரு மனிதன் தன் உயர்ந்த பண்புகளால் சிறந்தவனாகிறான் என்று பொருள். நாம் இக்காலத்தில் அளவையும் எண்ணிக் கையையும் பற்றி மட்டுமே கவலைப்படுகிறோம். ஆயிரங்கள், லட்சங்கள் என்று எண்களைக் கூட்டிக் காட்டுகின்றோம். எண்ணிக்கைகள் எதை சாதித்தன? எண்களால் ஆன பயன் என்ன? பெரும் படையுடன் திரண்டு வந்த ஜாலூதின் படையை தாலூத்தின் சிறு படை வென்ற வரலாற்றை திருக் குர்ஆன் எடுத்தியம்புவதைப் பாரீர்.

பின்னர், தாலூத் படைகளுடன் புறப்பட்ட போது அவர் “நிச்சயமாக அல்லாஹ் உங்களை (வழியில்) ஓர் ஆற்றைக்கொண்டு சோதிப்பான்; யார் அதிலிருந்து(நீர்) அருந்துகின்றாரோ அவர் என்னைச் சேர்ந்தவரல்லர்; தவிர, ஒரு சிறங்கைத் தண்ணீர் தவிர யார் அதில் நின்றும் (அதிகமாக) நீர் அருந்தவில்லையோ நிச்சயமாக அவர் என்னைச் சார்ந்தவர்” என்று கூறினார் அவர்களில் ஒரு சிலரைத் தவிர (பெரும்பாலோர்) அதிலிருந்து (அதிகமாக நீர்) அருந்தினார்கள்; பின்னர் தாலூத்தும், அவருடன் ஈமான் கொண்டோரும் ஆற்றைக் கடந்ததும், (ஒரு சிறங்கைக்கும் அதிகமாக நீர் அருந்தியோர்) “ஜாலூத்துடனும், அவன் படை களுடனும் இன்று போர் செய்வதற்கு எங்களுக்கு வலுவில்லை” என்று கூறிவிட்டனர்; ஆனால், நாம் நிச்சயமாக அல்லாஹ்வைச் சந்திப்போம் என்று உறுதி கொண்டிருந்தோர், “எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு வென்றிருக்கின்றார்கள்; மேலும் அல்லாஹ் பொறுமையாளர் களுடன் இருக்கின்றான்” என்று கூறினார்கள்.

ஜாலூத்தையும் அவன் படைகளையும் யுத்த களத்தில் சந்திக்க அவர்கள் முன்னேறிச் சென்ற போது, “எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையைத் தந்தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதியாக்குவாயாக! காஃபிரான இம்மக்கள் மீது (நாங்கள் வெற்றியடைய) உதவி செய்வாயாக!” எனக் கூறி(ப் பிரார்த்தனை செய்த)னர். இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வின் உதவியுடன் ஜாலூத்தின் படையை வென்றார்கள்.
(அல்குர்ஆன் 2:249,250,251)

இது மட்டுமா, பத்ருப் போர்க்களத்தில் முஸ்லிம்களின் சிறுபடை காஃபிர் களின் பெரும் படையை வீழ்த்திய தல்லவா? இதோ அல்லாஹ் கூறுகின்றான்.

“பத்ரு” போரில் நீங்கள் மிகவும் சக்தி குறைந்தவர்களாக இருந்த போது, அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான்; ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக

அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.(3:123)

நீங்கள் பூமியில் (மக்காவில்) சிறு தொகையினராகவும், பலஹீனர் களாகவும் இருந்த நிலையில், உங்களை (எந்த நேரத்திலும்) மனிதர்கள் இறாஞ்சிக் கொண்டு சென்று விடுவார்கள் என்று நீங்கள் பயப்பட்டுக் கொண்டிருந்த போது அவன் உங்களுக்கு (மதீனாவில்) புகலிடம் அளித்துத் தன் உதவியைக் கொண்டுஉங்களை பலப்படுத்தினான் இன்னும் பரிசுத்தமான ஆகாரங் களையும் அவன் உங்களுக்கு அளித்தான்; இவற்றை நினைவு கூர்ந்து (அவனுக்கு) நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக!(8:26)

ஹுனைன் போர்க் களத்தில் முஸ்லிம்கள் தோல்வியடைந்தார்கள் முதலில். அதற்கு என்ன காரணம்? முஸ்லிம் படை வீரர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். இது அவர்களுக்கு பெருமிதம் தந்தது. ஆத்மார்த்தமான பலம் தான் பெரும் பலம் என்ற உண்மையை அப்போது அவர்கள் உணரத் தவறிவிட்டனர்.

இது தவறு என்று உணர்ந்திடவும் அவர்கள் பாடம் பெற்றிடவும் தவறான எண்ணங்களிலிருந்து மீண்டு மீட்சி பெற்றிடவும் முதலில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு சோதனைகளைத் தந்தான். பின்னர் கண்ணுக்குப் புலப்படாத படைகளை அனுப்பி முஸ்லிம்களுக்கு உதவினான். வெற்றியை தந்தான். இதுபற்றி திருக்குர்ஆன் இப்படி கூறுகின்றது.

நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குப் பல போர்க்களங்களில் உதவி செய்திருக்கின்றான்; (நினைவு கூறுங்கள்:) ஆனால் ஹுனைன் (போர் நடந்த) அன்று. உங்களைப் பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்த உங்களுடைய அதிகமான (மக்கள்) தொகை உங்களுக்கு எவ்விதப் பலனும் அளிக்கவில்லை, (மிகவும்) பரந்த பூமி உங்களுக்கு (அப்போது) சுருக்கமாகிவிட்டது. அன்றியும் நீங்கள் புறங்காட்டிப் பின் வாங்கலானீர்கள்.பின்னர் அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும், முஃமின்கள் மீதும் தன்னுடைய சாந்தியை இறக்கியருளினான்; நீங்கள் பார்க்க முடியாப் படை களையும் இறக்கி வைத்தான். (அதன் மூலம்) நிராகரிப்போரை வேதனைக்குள்ளாக்கினான் இதுவே இறைமறுப்பாளர்களின் கூலியாகும். (9:25,26)

ஈமான் எனும் இறைநம்பிக்கையும் சப்ர் எனும் நிலைகுலையாமையும் உள்ள ஒருவர் இவ்விரண்டும் இல்லாத பத்து நபர்களைக் கூட வீழ்த்திடலாம் என்கிறது குர்ஆன்;

நபியே! இறை நம்பிக்கை யாளர்களுக்கு போர் செய்திட ஆர்வ மூட்டுவீராக; உங்களில் நிலை குலையாத இருபது பேர் இருந்தால், இருநூறு பேர்களை வெற்றி கொள்வார்கள். இன்னும் உங்களில் நூறு பேர் இருந்தால் அவர்கள் காஃபிர்களில் ஆயிரம் பேரை வெற்றி கொள்வார்கள்; ஏனெனில் (முஃமின்களை எதிர்ப்போர்) நிச்சயமாக அறிவில்லாத மக்களாக இருப்பது தான் (காரணம்).(8:65)

இது வலிமையுடனிருக்கும் காலங்களில் கிடைக்கும் வெற்றி. இறை நம்பிக்கையாளர்கள் வலிமை குன்றியிருந்தால் எதிரியை விட ஒரு மடங்கு அதிக வலிமையுடன் தான் திகழ்வார்கள் என்று அடுத்த வசனத்திலேயே அல்லாஹ் கூறுகின்றான்.

இப்போது உங்களில் பலவீனம் இருக்கிறது என்றறிந்துஉங்களுக்கு அல்லாஹ் அதை இலகுவாக்கி விட்டான். எனவே, உங்களில் நிலை குலையாத நூறு பேர் இருந்தால் இரு நூறு பேரை வெல்வார்கள். உங்களில் ஆயிரம் பேர் இருந்தால் அல்லாஹ்வின் அனுமதியுடன் இரண்டாயிரம் பேரை வெல்வார்கள் பொறுமையாளர் களுடன் அல்லாஹ் இருக்கின்றான். (8:66)

மேற்கண்ட வசனங்களையெல்லாம் நன்றாக சிந்தித்துப் பாருங்கள். ஈமான் சப்ர் இவற்றால் தான் வெற்றி கிடைத்ததேயல்லாமல் பெரும் கூட்டமோ மனிதத் தலைகளின் திரளோ வெற்றிக் கனியைப் பறித்திடவில்லை. அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தரத்துக்குத் தந்த முக்கியத்துவத்தை அளவுக்கு Quantity க்குத் தரவில்லை என்பதை அவர்களின் வரலாற்றை வாசிப்போர் நன்கறிவார்கள். அண்ணல் நபியின் அருந்தோழர்கள் அவர்களுக்குப்பின் மக்களை வழிநடத்தும் தலைமைப் பொருப்பை ஏற்ற கலீஃபாக்கள் ஆகியோரின் வாழ்விலும் இதை நாம் தெள்ளத் தெளிவாகக் காண முடியும்.

மிஸ்ர் எனும் எகிப்து நாட்டை வெற்றி கொள்வதற்காக அம்ரு பின் ஆஸ்(ரலி) அவர்கள் தலைமையில் நான்காயிரம் பேர் கொண்ட ஒரு படையை உமர்(ரலி) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். இந்தப் படை போதாது என்று படைத்தலைவர் அம்ரு பின் ஆஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள். உடனே உமர்(ரலி) அவர்கள் இன்னும் நான்காயிரம் பேரை அனுப்பினார்கள். இவர்களில் தரம் வாய்ந்த நான்கு பேர் உள்ளனர். இந்த நால்வரில் ஒவ்வொருவரும் ஆயிரம் பேருக்குச் சமமானவர்கள்.

எனவே, நம் படையினர் எண்ணிக்கை இப்போது பனிரெண்டாயிரமாகி விட்டது. எனவே, வீரர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்று இனி கூற முடியாது. எனவே நாம் தோற்று விட மாட்டோம் என்று கலீஃபா(ரலி) அவர்கள் கூறினார்கள். படை வீரர்களின் அதிக எண்ணிக்கையோ அவர்களின் ஆஜானுபாகுவான உடல்வாகோ வெற்றியைத் தீர்மானிப்பதில்லை. வீரர்களின் வலிமையும் திறமையுமே வெற்றிக்கான காரணம் என்று உமர்(ரலி) அவர்கள் நம்பினார்கள். எனவே தான் அப்படிக் கூறினார்கள்.

ஒரு நாள் உமர்(ரலி) அவர்கள் தம் தோழர்கள் சிலருடன் ஒரு வீட்டிலிருந்தார்கள். அது ஒரு விசாலமான பெரிய வீடு. அப்போது உமர் (ரலி) அவர்கள் தம் தோழர்களிடம் இப்போது உங்களுக்கு மனதில் மனதில் தோன்றும் கற்பனைகளை,

ஆசைகளைச் சொல்லுங்கள் என்றார்கள்.

உடனே அங்கிருந்த தோழர்களில் ஒருவர் இந்த பெரிய வீடு முழுக்க எனக்கு வெள்ளிக் காசுகள் கிடைக்க வேண்டும். அவற்றை நான் அல்லாஹ்வின் பாதையில் செலவிட வேண்டும். இதுவே என் ஆசை, கற்பனை என்றார்கள்.
இன்னொருவர், இந்த வீடு முழுக்க எனக்கு தங்கம் கிடைத்தால் அவற்றை நான் அல்லாஹ்வின் பாதையில் செலவிடுவேன் என்றார்.

பிறகு தோழர்கள் நீங்கள் உங்கள் ஆசையைச் சொல்லுங்கள் என்று கலீஃபா உமர்(ரலி) அவர்களிடம். அதற்கு அவர்கள்,

"இந்த வீடு முழுக்க எனக்குச் சில மனிதர்கள் வேண்டும். அபூஉபைதா, முஆது பின் ஜபல், அபூஹுபைதாவின் முன்னாள் அடிமை ஸாலிம்(அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக) போன்ற மனிதர்கள் எனக்கு வேண்டும். அவர்களை அல்லாஹ்வின் பாதையில் நான் பயன்படுத்த வேண்டும். இதுவே என் ஆசை,கற்பனை"என்றுக்கூறினார்கள்.

இப்படி தரம் வாய்ந்த மனிதர்களாகத் திகழ்ந்தனர் நபித் தோழர்கள். நாம் வாழும் இக்காலம் அப்படி இருக்கிறதா? பல கோடி முஸ்லிம்கள் இருக்கிறோம். உலகில் வாழ்கிறோம். அந்தோ பரிதாபம்! நம்மிலே தரமான மனிதர்கள் எத்தனே பேர் இருக்கின்றோம்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பசியுடன் இருப்பவர்கள் உணவு நிரம்பிய தட்டை நோக்கி வேகமாகப் பாய்ந்து வருவது போல முஸ்லிம்களான உங்களை நோக்கி பல்வேறு பகுதிகளிலிருந்து இதர சமுதாயத்தினர் பாய்ந்து வருவார்கள். இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் கூறியபோது, அந்நாளில் நாங்கள் சிறுக்கூட்டமாக இருப்பது தான் இதற்குக் காரணமா? என்று நபித் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள்; "இல்லை! அச்சயமத்தில் நீங்கள் பெரும் கூட்டமாகவே இருப்பீர்கள். எனினும், வெள்ளத்தினால் ஏற்படும் நுரைப் போன்றிருப்பீர்கள். எதிரிகளின் உள்ளத்திலிருந்து உங்களைப் பற்றிய அச்சத்தை அல்லாஹ் அகற்றி விடுவான். உங்கள் உள்ளங்களில் வஹ்ன்-ஐப் போட்டு விடுவான்" என்று கூறினார்கள்.

வஹ்ன் என்றால் என்ன? என்று நபித்தோழர்கள் கேட்டனர். "உலகத்தை விரும்புவதும் மரணத்தை வெறுப்பதும் வஹ்ன் ஆகும்." என்றார்கள் நபி(ஸல்) அவர்கள். அறிவிப்பாளர்: ஸவ்பான்(ரலி), நூல்: அஹ்மது)

இந்த நபிமொழி நமக்கு உணர்த்தும் பாடமென்ன? பார்ப்பதற்கு பருமனாகவும், யதார்த்தத்தில் வெறும் வீக்கமாகவும் இருக்கின்றவர்கள் எத்தனை பெரும் கூட்டமாக இருப்பினும் அவர்களால் பயனில்லை. வெள்ளத்தில் உருவாகி ஓரத்தில் ஒதுங்கும் நுரைகளால் என்ன சாதித்து விட முடியும்? அவை அதிகமாக இருந்தும் பலனேதும் இல்லையே!

எனவே எண்ணிக்கையை விட தரமே முக்கியமானது, முதன்மை யானது. எண்ணிக்கை என்று நான் கூறுவது வெளித் தோற்றத்தில் பெருமைக்குறியதாகக் கருதப்படும் அனைத்துக்கும் பொருந்தும்.

ஒருவர் பெரும் நிலத்தின் அதிபதியாக இருந்தென்ன பயன்? அந்த நிலம் அந்த ஊரில், எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதே முக்கியம். ஒரு பொருள் அதிக எடையும் உயரமும் தோற்றமும் இருந்தென்ன பயன்? அது எவ்வளவு மதிப்புமிக்க பொருள் என்பதே முக்கியம்.

பாருங்கள் ஒருவர் வாட்டசாட்டமான உடல்வாகு, எடுப்பான தோற்றம், அழகான உடலமைப்புடன் இருக்கிறார். அவரிடம் மனித இதயமோ அறிவோ இல்லை. இவரால் என்ன பயன்? உடல் என்பது என்ன? வெறும் முடி, தோல், உயிரின் வாகனம். இது மட்டும் சரியாக இருந்தால் போதுமா?

இதோ அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்! முனாஃபிக் எனும் நயவஞ்சகர்கள் பற்றி வர்ணிக்கிறான்.

நீர் அவர்களைக் கண்டால் அவர்களின் உடலமைப்பு உங்களுக்கு மனப்பூரிப்பு தரும்.(63:4)

அழிக்கப்பட்ட ஆது எனும் கூட்டத்தினர் பற்றி அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்.

உங்கள் உடல் பலத்தை அல்லாஹ் அதிகமாக்கினான் என்பதை நினைவுக் கூறுங்கள்.(7:69)

இவ்வளவு வல்லமை மிக்க ஆது கூட்டம் தாம் பெற்ற வலிமையினால் ஆணவம் கொண்டனர். சுய பலத்தை நம்பி ஏமாந்து போயினர். அல்லாஹ் கூறுகிறான்:

ஆது சமுதாயம் பூமியில் அநியாயமாகப் பெருமையடித்துக் கொண்டு எங்களை விட வலிமை மிக்கவர்கள் யார் என்று கூறினார்கள்.(41:15)

பெரும் தோற்றமுடைய ஒரு பெரிய மனிதன் மறுமை நாளில் அல்லாஹ்விடம் வருவான். ஒரு கொசுவின் இறக்கையின் அளவு கூட அல்லாஹ்விடம் அவனுக்கு மரியாதை இருக்காது. இக்கருத்தை உறுதிப்படுத்த விரும்பினால்,

"மறுமையில் அவர்களுக்கு எந்த மதிப்பையும் தர மாட்டோம்"(18:105)

என்ற திருக்குர்ஆன் வசனத்தைப் படியுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு ஸஹீஹான ஹதீஸ் காணப்படுகிறது.

ஆக, திறமையோ, நற்பண்புகளோ, ஈமானோ இல்லாதவர்கள் எவ்வளவு பெரும் கூட்டமாக இருந்தும் அவர்களால் பலனில்லை. எனவே, தரமே முக்கியம், எண்ணிக்கையல்ல.

**தமிழில்:**

**பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி.M.A.,**



# அறிய வேண்டிய அரிய மனிதர்கள்!

குமரி மாவட்டம் வடக்கு சூரன்குடி ஊரில் முஹம்மது மீரான் - ஹவ்வா உம்மாள் தம்பதிகளின் மகன் குலாம் முஹம்மது..

இஸ்லாமிய தமிழ் இதழியல் உலகில் யாரும் எட்ட முடியாத சாதனையாளர் என்று சொன்னால் மிகையாகாது..

இந்திய விடுதலை போராட்டத்தின் மறைக்கப்பட்ட பல்வேறு தியாக வரலாறு களை ஆதாரப்பூர்வமாக வெளிக்கொணர்ந்து புத்தகமாக வெளியிட்டவர்..

ஆரம்ப மற்றும் உயர்நிலை கல்வியை சூரங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியிலும், பி யூசி மற்றும் பி.காம் படிப்பை பயோனியர் குமாரசாமி கல்லூரியிலும் பயின்று மதுரை காமராஜர் பல்கலைகழகம் வழி

M.Com மற்றும் M.A. (Journalism and Mass Communism) என இரட்டை முதுகலைப் பட்டதாரியான குலாம் முஹம்மது அவர்கள் இந்திய ரயில்வேயில் பணிபுரிந்து வந்த தலைமை டிக்கெட் பரிசோதகர் வேலையை இலக்கிய மற்றும் தாஃவா சேவைக்காக துறந்தவர்..

தமிழக தாஃவா களத்தில் அளப்பரிய பங்காற்றி வரும் குலாம் முகமது அவர்கள் பல்வேறு சமுதாய அமைப்புகளில் கடந்த காலங்களில் முக்கிய பங்காற்றியவர்.. நீதி மற்றும் அமைதிக்கான பாசறை மூலம் அநீதிக் குள்ளாகுபவர்களுக்காக சட்ட பாதுகாப்பு பெற்றுதரும் மகத்தான பணிபுரிந்து வருகிறார்.

**Zafar Rahmani** பல தலைவர்களை தமது பாசறையிலிருந்து உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. மவ்லவி தெஹ்லான் பாகவி, முஜிபுர் ரஹ்மான் உமரி என நீண்ட பட்டியலே உண்டு.

Like · Reply · 4w 12

தமிழ்நாடு டெவலப்மன்ட் பவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் மூலம் சத்திய மார்க்கத்தை தழுவியவர்களுக்காக மார்க்க பயிற்சிக்கூடம் நிறுவனராக உள்ளார்..

All India Small and Medium News Paper Federation ன் தமிழக தலைவராக பொறுப்பு வகிக்கும் குலாம் முஹம்மது அவர்கள் விடியல் வெள்ளி மாத இதழின் ஆசிரியராக பொறுப்பு வகித்தவர் தற்போது வைகறை வெளிச்சம் மாத இதழை நடத்தி வருகிறார்... தனது எழுத்துப் பணிகளுக்கு வடிவம் கொடுக்க

இஸ்லாமிய இலக்கிய பணிமனை, ஹிந்துஸ்தான் பப்ளிகேஷன்ஸ், இலக்கிய சோலை மற்றும் வேர்கள் பதிப்பகம் மூலம் மிக குறுகிய காலத்தில் இஸ்லாமிய வாழ்வியல், தேசிய சர்வதேச நிகழ்வுகள், மறைக்கப்பட்ட வரலாறுகள் உட்பட பல்வேறு தலைப்புகளில் சுமார் 60 புத்தகங்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கிய சாதனைக்கு சொந்தக்காரர்..

இவரது இலக்கிய பணிகளுக்கு ஊக்கமாக இஸ்லாமிய இலக்கிய கழகம் 2009 ம் வருடம் **இலக்கிய சுடர்** விருது, சீதாக்காதி அறக் கட்டளை 2015 ம் வருடம் **சதக்கத்துல்லா அப்பா** விருது வழங்கி கவுரவித்தனர்..

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் 2018 ம் ஆண்டிற்கான **காயிதேமில்லத் பிறை விருது** வழங்கி குலாம் முஹம்மது அவர்களின் சமுதாய மற்றும் எழுத்துப்பணியை கவுரவித்தார் திருமாவளவன்...

சிறுபான்மை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிராக நடைபெறும் அநீதிகளை வெளிக்கொணர்ததற்காக பல்வேறு இன்னல் களை சந்தித்து சட்டப்போராட்டங்கள் மூலம் வென்று காட்டிய குலாம் முஹம்மது அவர்களின் சமுதாய மற்றும் இலக்கிய பணிகளுக்கு வல்ல இறைவன் அருள் புரியட்டும்...

**- Colachel Azheem**

**Mohamed Askar** ஆசிரியர் குலாம் முஹம்மத் அவர்களின் புத்தகங்கள் இஸ்லாமிய சமூகத்தின் பொக்கிஷங்கள்.அவரது கற்கரேவை கொன்றது யார்? என்ற மொழிபெயர்ப்புப் புத்தகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

10

Like · Reply · 4w

**Vandal Iqbal** செந்தமிழின் சுவைபருகும் திருநிறை சூரங்குடியின் தவபுதல்வன் எங்கள் குலாம் முகம்மது வாள்பட்டால் அதன் கூர் மங்கும் வைர நெஞ்சம் படைத்தவன் மத்தியில் ஆண்டவர்கள் இவனுடைய எழுச்சிக்கு எதிர்நிக்க தங்கியவர்கள் வரலாற்று சான்றுகள் இவன் கண்ணெதிரில் தென்படும் திக்கெட்டும் எதிர்கணைகள் வந்தாலும் இவன் எழுதுகோல் அதை முறியடிக்கும் அமைதியான தோற்றம் எளிமை அவனது அலங்காரம் பன்முகதன்மை அவனது அடையாளம் இன்றைய இஸ்லாத்திற்கு கிடைத்த மாபெரும் பொக்கிஷம் தேடல் அவனை தழுவி கொண்டுடீருக்கிறது இவன் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் சமுதாயத்திற்கு எவ்வளோசெய்யவேண்டும் மாசுபடாதமாணிக்கம் என் இனிய மைத்துனன்

11

Like · Reply · 4w

**Abdul Raheem Abdul** 40 ஆண்டுகளுக்கு மேலாக இஸ்லாத்தை மாற்று மத சகோதரர்களுக்கு எடுத்துறைக்கும் தாவா பணியையும் சமூகம் சக்தி பெறுவதற்கான உள் அரங்க நிகழ்ச்சியை நடத்தி வருகிரார். இதனால் காவல்துறை இவறுடைய வீட்டை 18 முறை சோதனை செய்யப்பட்டனர். சிறிதும் கலகம் அடையாமல் இன்றுவறை தான் எடுத்த அந்த பனியை தொடர்ச்சியாக செய்து வருகின்றார். ஜி.வி.மணி என்ற உமர் ஃபாருக். கொடிக்கால் சேக் அப்துல்லாஹ் மயிலாடுதுறை ரவூப் இவர்களுடன் சேர்ந்து கிராமம் கிராமமாக இஸ்லாத்தை எடுத்துறைத்தார் இஸ்லாத்தை ஏற்றுக்கொன்ட மக்களுக்கு 1996 ல் தேனி மாவட்டத்தில் முத்துதேவன் பட்டியில் அறிவகம் என்கிற தாவா சென்டறை ஆரம்பித்து நடத்தி வந்தார். தற்போது தமிழ்நாட்டில் பிராமணர்கள் அதிகம் வாழும் கும்பகோணத்தில் குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக்கொன்டவர்களுக்கு அன்பகம் என்னும் கல்வி கூடத்தை நடத்தி வருகிறார். தற்போது தலித்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிகழ்ச்சிகளை நடத்தி இஸ்லாதை கூறிவருகிரார். கடந்த இரன்டு வாரங்களுக்கு முன்பு சென்னை புளியந்தோப்பில் ஞிஸி அம்பேத்கரின் 127 வது பிறந்த நாள் விழாவில் அமெறிக்காவின் நிற வெறிக்கு போராடி இஸ்லாத்தை ஏற்றுக்கொன்ட மால்கம் ஙீ ன் வரலாற்றை கூறி தீண்டாமையின் விடுதலை இஸ்லாம் தான் என கூறி சிறப்புறை ஆற்றினார் தற்போது இந்த சமூகம் எதை முன்னெடுத்து பயனிக்க வேன்டும் என்பதை தெளிவாக கூறி செயல்பட்டுக் கொன்டிருப்பவர் அண்ணன். விநிவி, அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் கொடுத்து நாம் அனைவரும் அவரோடு சேர்ந்து பனி செய்யும் பாக்கியத்தையும் தருவானாக....

4

Like · Reply · 4w

# நெகிழ வைத்த நெஞ்சங்கள்.....

**Sirajudeen Fazal** அருமையான பதிவு தம்பி Colachel Azheem.இடம் இவர் பற்றி சொல்லலாம் என்றிருந்த போது பதிவை பார்க்க நேர்ந்தது. என்னை விட மூத்தவர்.ஒரே ஊர் உறவை விட நட்பை பேணியவர்கள் கல்லூரி படிப்பை துவங்கும் சமயத்திலே பொதுவாழ்வில் இருவரும் பயணித்தவர்கள். இஸ்லாமிய மாணவர் அமைப்பில் மாவட்ட தலைவர் செயலாரக பணியாற்றினோம்.திறமை அறிந்து ஊக்கம் அளிப்பார். இதுவரை 63க்கும் அதிகமான புத்தகங்களை எழுதியுள்ளார்.. நடமுறைக்குஎது சரியோஅதை செயல்பட துடிப்பவர் பத்திரிகையாளர் ,நூலாசிரியர்,மொழிபெயர்ப்பாளர்,பதிப்பாளர் தவா பயிற்சியாளர்,ஆளுமைமமிக்க தலைமை,என பன்முக திறன் கொண்டவர். நீடித்த ஆயுள் நோயற்றவாழ்வோடு வாழ துவாக்ககள்.

13

Like · Reply · 4w · Edited

**Naseer Ahamed** தமிழ் நாட்டில் சகோதரத்துவம் என்றால் என்ன என்பதை 95களில் இளைய சமூகத்திற்கு கற்றுக்கொடுத்த உன்னத நான் என்றும் நேசிக்கும் மாபெரும் தலைவர்(இன்று இளைய சமூகம் மறந்துவிட்ட ஒருவர்)

2

Like · Reply · 4w

நீதியின் பக்கம் மனித நீதிப்பாசறை மூலம் தமிழகத்தில் விளம்பரம் இல்லாத மாற்றத்தை ஏற்படுத்தியவர்.இன்றும் அதே துடிப்புடன் செயல்படுபவர்.இன்றும் செயல்பட தயாராக உள்ள அனைவரும் வருவதாக இருந்தாலும் அதை ஹிக்மத்துடன் கொண்டு செல்வார்.

11

Like · Reply · 4w

**Arsath Ibnu Mubarak** அல்லாஹ்விற்க்காக நேசிக்கக் கூடிய நபர்களில் ஒருவர்..! சிறந்த ஆளுமைகளில் ஒருவர்..!

6

Like · Reply · 4w

**Sathak Usmani** அண்ணனின் பேச்சுக்கும் எழுத்துக்களும் அபார ஆற்றல் உண்டு

2

Like · Reply · 4w

**Riyas Mohamed Riyas** இஸ்லாமிய சமூகம் எதை முன்னெடுத்து செயல்பட வேண்டும் என்பதை எங்களுக்கு கற்று தந்த ஆசான். மார்க்க விசயத்தில் சிறிதும் சமரசம் செய்து கொள்ளாதவர். சமூகம் எந்த திசையில் பயனிக்க வேண்டும் என்பதை கட்டமைத்த சிறந்த ஆளுமை.

11

Like · Reply · 4w

**Ilamurugu Arunthathiyar** இஸ்லாத்தை அறிந்து ஏற்றுக் கொண்டவர்களை.அரவணைத்து. அவர்களின் உணர்வுகளை மதித்து , சரியாக வழிநடத்தி செல்பவர் அண்ணன் குலாம் அவர்கள்.

4

Like · Reply · 4w

**Haja Mohideen** சமுதாய பற்றும் சமுதாயத்துக்காக அயராது உழைக்கும் ஆர்வமுமுள்ள என் மைத்துனருக்கு அல்லா நோயற்ற வாழ்வும் நீண்ட ஆயுளும் தர துவா செய்கிறேன்.

5

Like · Reply · 4w

# இஸ்லாம். அரசியல்.. அதிகாரம்... அரபுலக எழுச்சி! -6

- அபூஹாசின்

## ஸையத் அஹ்மத் ஷஹீத்

பல துறைகளில் ஷா வலியுல்லாஹ் ஏற்படுத்திய சிந்தனை புரட்சி அவர் இறந்ததோடு அவரோடு சேர்ந்து புதைந்து விடவில்லை. அவருடைய சீடர்கள் அவருடைய இலட்சியத்தை மக்களிடம் கொண்டு சென்றனர். அத்தோடு அவர்கள் நின்று விடவில்லை. அந்த இலட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டுமோ அந்த முயற்சிகளை மேற்கொண்டனர்.

சூபிசம், அரசியல் இவற்றில் ஷா வலியுல்லாஹ்வின் மரபை பின்பற்றி அறிஞர்கள் கூட்டம் ஒன்று உருவானது. இஸ்லாமிய கட்டமைப்பை ஜிஹாதின் வழி உருவாக்கிடவும் அந்த அறிஞர்கள் முயன்றனர். ஷா வலியுல்லாஹ்வுடன் நெருக்கமாக இருந்த சீடர்களில் ஒருவர் தான் செய்யத் அஹ்மத் ஷஹீத்.

ஷா வலியுல்லாஹ்வின் கருத்துகளையும் சிந்தனைகளையும் புரிந்து கொண்டு அதன்படி மக்களுக்கு வழிகாட்டினார் செய்யத் அஹ்மத் ஷஹீத். தெற்கு ஆசியாவில் ஏற்பட்ட இஸ்லாமிய மறுமலர்ச்சி வரலாற்றில் செய்யத் அஹ்மத் ஷஹீதுக்கென்று ஒரு தனி சிறப்பும் இடமும் உண்டு.

1786 ஆம் ஆண்டு உத்திர பிரதேசத்தில் அவர் பிறந்தார். அவருடைய குடும்பம் மார்க்கத்தை பரப்புவதில் பெயர் பெற்ற குடும்பம். ஷா வலியுல்லாஹ்வின் மகனான அப்துல் அசிசின் மிக நெருங்கிய சீடர்களில் அஹ்மத் ஷஹீதும் ஒருவர்.

அறிவை தேடி செல்வதில் அவர்களின் இரு குடும்பமும் ஒருவருக்கொருவர் இணைந்தே செயல்பட்டன. அது மட்டுமில்லை, மேற்கத்திய சிந்தனைகளுக்கு எதிர்ப்பை தெரிவிப்பதிலும், இந்தியாவில் முகலாய ஆட்சியை வீழ்த்திட வேண்டும் என்று செயல்பட்ட அரசியல் எதிரிகளுக்கும் தடையாக அவர்களின் இரு குடும்பங்களும் முன் அணியில் நின்றன. தன்னுடைய கருத்தில் உறுதி மிக்கவராகவும், தவறென்று வரும்போது அதற்கு எதிராக குரல் எழுப்ப தயங்காதவராகவும் திகழ்ந்தார் செய்யத் அஹ்மத்.

டோன்க் பகுதியின் (ராஜஸ்தான்) நவாப் அமிர் கானின் படையில் தன்னை இணைத்து கொண்டு போர் பயிற்சிகளை கற்று கொண்டார். டோன்க் பகுதியின் ஆட்சியாளர் ஜிஹாத் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருந்ததை கண்டு ஏமாற்றமடைந்தார்.

எனவே அப்துல் அசிஸ் டெல்லியில் நடத்தி வந்த பாடசாலையில் மீண்டும் சேர்ந்தார். அங்கிருந்து கொண்டு, இஸ்லாத்தின் எதிரிகளை எதிர்கொள்வதற்கு தன்னை தயார் படுத்தி கொண்டார். 1818-19 ஆம் ஆண்டுகளில் தோஅப் பகுதியில் (உ.பி) ஜிஹாத் குறித்து பிரச்சாரம் செய்தார். அங்குள்ள மக்களை அதற்காக தயார் படுத்தினார். தெற்கு ஆசியா மக்களின் மனங்களில் அப்போது தான் ஜிஹாதிற்கான விதை தூவப்பட்டது.

சூஃபி முகாம்களில் தற்காப்பு கலைகளும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றார். இஸ்லாத்திற்கான அவருடைய பிரச்சாரத்திற்கும், அவரின் தற்காப்பு கலை குறித்த பிரச்சாரத்திற்கும் எதிராக எதிர்ப்புகள் வரும்போது ஜிஹாத்திற்கான முக்கியத்துவம், இக்காலத்தில் அதன் தேவை பற்றி விளக்கினார். அவர் எந்த இடங்களுக்கு சென்றாலும் அங்கெல்லாம் ஜிஹாத் குறித்து பேசாமல் இருந்ததே இல்லை என்று சொல்லலாம்.

மக்காவிற்கு செல்லும்போது கூட அவர் எது நீண்ட தூர வழியோ அவ்வழியையே தேர்ந்தெடுத்தார். ஏனெனில் அதிகமான மக்களை சந்தித்து, அவர்களிடம் ஜிஹாத் குறித்து உரையாடவும் அதை முன்னெடுக்கவும் முடியும் என்று கருதினார்.

ஹஜ்ஜிற்கு சென்று வந்த பின் இரண்டு வருடங்கள் (1824-26) தனது சொந்த ஊரில் வசித்தார். அப்போது தான், அவரின் குருவான ஷா அப்துல் அசிஸ் அவர்கள் இறைவனிடம் சேர்ந்தார்கள். அரசியல் சூழ்நிலையை எதிர்கொள்ளும் மொத்த பொறுப்பும் செய்யத் அஹ்மதின் தோள்களில் விழுந்தது. தன்னுடைய ஜிஹாத் அமைப்பை மேலும் முன்னெடுத்து செல்ல பல முஸ்லிம் அறிஞர்களுக்கு கடிதம் எழுதினார்.

தற்போது உள்ள அரசியல் அமைப்பிற்கு எதிராக நாம் ஜிஹாதை அறிவிக்க வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தையும் அவர்களுக்கு தெரிவித்தார். இந்த இலட்சியத்திற்கு ஷா வலியுல்லாஹ்வின்



தனது பேரக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு செய்யத் அஹ்மத் ஷஹீத்

குடும்பத்தின் உறுப்பினர்களும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஷா வலியுல்லாஹ்வின் குடும்பத்தை சேர்ந்த மவ்லானா அப்துல் ஹயாத் மற்றும் மவ்லானா முஹம்மது இஸ்மாயில் ஷஹீத் ஆகிய இருவரும் ஏற்கெனவே அவரின் அணியில் இணைந்திருந்தார்கள்.

இவர்கள் இருவரையும் அப்போது வாழ்ந்தவர்கள் பல சிறப்பு பெயர்களை கொண்டு அழைத்தனர். 20 ஆம் நூற்றாண்டின் கவிஞரான இக்பால் அவர்களும் இஸ்மாயில் ஷஹீதை பற்றி புகழ்ந்து பேசியுள்ளார். ஒரு சமயம் இக்பால் இப்படி கூறினார் : "இஸ்மாயில் ஷஹீதை போன்று அவருக்கு பின் ஒரு அறிஞராவது பிறந்திருந்தால் இந்திய முஸ்லிம்கள் இன்று வாழ்வதை போன்ற அவல, பரிதாப நிலையில் வாழ்ந்திருக்க மாட்டார்கள்".

ஜிஹாத் செய்ய வேண்டும் என்ற பிரச்சாரத்தை அக்காலத்தில் முதலில் முன் மொழிந்தவர் செய்யத் அஹ்மத் இல்லை என்றாலும் அவர் தான் ஜிஹாத் களத்தில் இறங்கி ஆங்கிலேயர்களுக்கும் சீக்கியர்களுக்கும் எதிராக போர் புரிந்து அதை செயல்படுத்திக் காட்டியவர்.

இஸ்லாத்திற்கு மாற்றமான சட்டங்கள், அதற்கு எதிரான அணுகுமுறைகளை மேற்கொண்ட ஆங்கிலேயர்களுக்கும் சீக்கியர்களுக்கும் எதிராக பத்வாவை (மார்க்க தீர்ப்பு) வழங்கினார் செய்யத் அஹ்மதின் குருவான அப்துல் அசிஸ். கல்கத்தா முதல் டெல்லி வரை யுத்த பூமியாக (தாருல் ஹர்ப்) அறிவிக்கப்பட்டது. ஏனெனில் இறை நிராகரிப்பாளர்கள் இஸ்லாமிய ஷரியத்தை அகற்றி விடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்தலியின் தாக்குதலுக்கு பின் ஜாட்ஸ், மராத்தியர்கள் கட்டுக்குள் வந்தனர். சீக்கியர்கள் மட்டுமே அச்சுறுத்தலாக இருந்தனர். வட மேற்கு எல்லைப்புற மாகாணம் (North West Frontier Province) ஜிஹாதிற்கான களமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

சீக்கியர்களுக்கு எதிராக போராட யுத்த தந்திரங்களை வகுத்தார் செய்யத் அஹ்மத். பல படை பிரிவுகளை உருவாக்கினர். தன்னுடைய இலட்சியத்தை விரிவுபடுத்திடவும் அதற்கான செலவுகளை சமாளித்திடவும் இந்தியா முழுவதும் தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பினார். யுத்தத்திற்கான எல்லா முன் தயாரிப்புகளையும் செய்த பின், 1826 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 500 காசிக்களுடன் யுத்த களத்திற்கு புறப்பட்டு சென்ற செய்யத் அஹ்மத் சஹீத் அதே ஆண்டு டிசம்பரில் யுத்த களத்தை வந்தடைந்தார். லாஹூரை ஆண்டு வந்த சீக்கிய மன்னர்களுக்கு இப்படி செய்தி அனுப்பினார். இஸ்லாமிய ஜிஹாதின் இலட்சியத்தை அச்செய்தி பிரதிபலித்தது.

"இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது ஜிஸ்யாவை கட்டுங்கள் அல்லது மரணத்தை எதிர் நோக்கியிருங்கள்".(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

# செங்காரை கிராமத்தில் இஸ்லாமிய அழைப்புப் பணி

கடந்த 28.07.2018 சனிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் கோயிலுக்கு அருகில் உள்ள செங்காரை கிராமத்தில் அம்பேத்கரின் 127வது பிறந்த நாளை முன்னிட்டு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தலித்முரசு ஆசிரியர்களில் ஒருவரான எழுத்தாளர் யாக்கன் அவர்கள், சமத்துவ சமுதாய இயக்கத்தின் தலைவர் வழக்கறிஞர் விஷ்ணுகுமார் அவர்கள், பீம்சேனா அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அப்துர்ரஹ்மான் மற்றும் மூத்த பத்திரிகையாளர் மு.குலாம் முஹம்மது(வைகறை வெளிச்சம்) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மிக எளிமையாக நடந்த நிகழ்ச்சி அது. மிக யதார்த்தமான கிராம சூழலில் நடைபெற்ற நிகழ்ச்சி. மின்சார விளக்குகள் மின்சார விசிறி கூட இல்லாத சமூக நலக்கூடத்தில் மின் விளக்குகளும் மின் விசிறிகளும் ஒலிபெருக்கியும் வெளியில் இருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. கழிப்பறை வசதி கூட இல்லாத கூடம் அது. பட்டியலின மக்களின் வசதியை பட்டியலிட்டு காட்டியது அந்தக்கூடம்.

இருப்பினும் அமைதியான சூழல். ஆனால் மிக அற்புதமாக நிகழ்ச்சி ஆர்ப்பாட்டமில்லாமல் நடந்தேறியது. நகர்புற கூச்சல்கள், மாசுக்கள் என அனைத்தையும் தவிர்த்து விட்டு மின்மினி பூச்சிகளின் வெளிச்சம், பறவைகளின் கூக்குரல், பூச்சிகளின் ரீங்காரம் என மனதை கவர்ந்த சூழல். அந்த இடத்தை போன்றே மனதை கவரும் இனிதான மக்கள். இவர்களுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

நிகழ்ச்சியில் வழக்கறிஞர் விஷ்ணுகுமார் அவர்கள் தமக்கே உரிய பாணியில் அந்த மக்களுக்கு உள்ள பிரச்சனைகளையும் அதற்கு மதமாற்றம் ஒன்றே தீர்வு எனவும் அந்த மதமாற்றமும் இஸ்லாத்தை நோக்கி இருந்தால் தான் சரி எனவும் எடுத்துரைத்தார். அவ்வப்போது கேள்விகளை கேட்டு தன் பக்கம் கவனத்தை ஈர்த்து பேசிய அவரின் பாணி அலாதியானது.

சகோ. யாக்கன் அவர்கள் கூறும் போது மிகத்தெளிவாக இந்து மதம் என்பது சாதியத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. எனவே ஒருவன் இந்துவாக இருக்கும் வரை அவனிடம் சாதி இருக்கும். எனவே தான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மத மாற்றத்தை முன்னெடுத்தார்கள்.

பிராமணன், சத்ரியன், வைஷியன், சூத்திரன் என்ற நான்கு வர்ணத்திற்குள் நாம் வரவே இல்லை. நாம் அது அல்லாத மற்றவர்கள். எனவே சாதி கொடுமைகளை ஒழிக்கும் அல்லது சாதியற்ற இந்து சமுதாயத்தை உருவாக்கும் வேலைகள் நமக்கு தேவையில்லை. அதை தூக்கி சுமக்கும் அவசியமும் நமக்கு இல்லை. நாம் அண்ணல் அம்பேத்கர் அவர்களை பின்பற்றி வேறு மதத்திற்கு செல்வோம்.

அண்ணல் அம்பேத்கர் மதமாற்றத்தை சொன்னார்களே தவிர புத்த மதத்திற்கு தான் செல்ல வேண்டும் என்று சொல்ல வில்லை. ஆகவே நீங்கள் இந்து மதத்தை தவிர்த்து வேறு எந்த மதத்திற்கு வேண்டுமானாலும் செல்லுங்கள்.

குறிப்பாக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் போது நொடிப்பொழுதில் சாதி உங்களை விட்டு நீங்கி விடுகிறது. அப்போது உங்களுக்கு துன்பங்கள் ஏற்படுமானால் உலகளவில் உங்களுக்கான குரல்கள் ஒலிக்க தொடங்கிவிடும்.





நீங்கள் சர்வதேச சமுதாயமாக மாறிவிடுவீர்கள்.

ஆனால் அம்பேத்கரை பின்தொடர்ந்து நான் புத்த மதத்தை தான் பின்பற்றுகிறேன். எனக்கு இஸ்லாத்தை பற்றி அவ்வளவாக தெரியாது. அதைப்பற்றி நான் படிக்கவில்லை என்று கூறினார். புத்தமதத்தை தழுவுவதையே தான் பரிந்துரைப்பதாகவும் கூறினார். மேலும் இஸ்லாத்தைப் பற்றி சில சந்தேகங்களையும் அவர் எழுப்பினார்.

இறுதியாக பேசிய மு.குலாம் முஹம்மது அவர்கள் அனைத்து கேள்விகளுக்கும் மிகத்தெளிவான பதிலளித்து இஸ்லாத்தை தீர்வாக முன்வைத்து பேசினார்கள். ஒரு நொடியில் தன் சாதி அடையாளத்தை ஒழித்து காட்டிய கொடிக்கால் செல்லப்பா என்கிற கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களின் உரையை எடுத்து காட்டினார்கள்.

1936ம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களால் எழுதி அனுப்பப்பட்டு பின்னர் பேசவிடாமல் தடுக்கப்பட்டு அதற்காக மாநாட்டையே நிறுத்திய பின்னர் அம்பேத்கர் அவர்கள் புத்தகமாக எழுதி வெளியிட்ட annihilation of caste என்ற புத்தகத்தில் இருந்து பல்வேறு பக்கங்களை பக்கங்களின் எண்ணோடு எடுத்துகாட்டி பேசினார்கள். ஆச்சரியப் படுத்தினார்கள்.

அண்ணல் அம்பேத்கர் முதலில் மதமாற்றத்திற்கு தேர்ந்தெடுத்தது மூன்று மதங்கள். அவை இஸ்லாம், கிறித்தவம், சீக்கியம். ஆனால் பின்னர் மூஞ்சே என்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பாளரால் அழுத்தம் தரப்பட்டு புத்தமதத்தினை தேர்ந்தெடுத்த வரலாற்றினையும் எடுத்துரைத்தார்கள்.

டாக்டர் ஆதில் என்பவர் பட்டியல் சாதியாக இருந்து பின்னர் புத்தமதத்தை தேர்ந்தெடுத்தார். அதில் புத்த பிக்குகளை பயிற்றுவிக்கும் நபராக 10 ஆண்டுகள் இருந்தார். ஆனால் அங்கும் நியோ புத்திஸ்டுகள் என தாங்கள் ஒதுக்கப்படுவதை கண்டறிந்து இஸ்லாத்தை ஏற்றார். இப்போது இஸ்லாத்தை எடுத்து கூறி இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் அழைப்புப்பணியில் தன்னை ஈடுபடுத்தி கொண்டுள்ளார். யாக்கன் அவர்களுக்கு நேரமிருந்தால் அவரை சந்தித்து பேச வேண்டும் என தன்னுடைய உள்ள கிடக்கை வெளிப்படுத்தினார்கள் மு.குலாம் முஹம்மது அவர்கள்.

யாக்கன் அவர்கள் எடுத்து கூறிய நிகழ்வில் அவருக்கு இப்போதும் வீடு கிடைக்க வில்லை என்பதை எடுத்து கூறியிருந்தார். நீங்கள் புத்தமதத்திற்கு சென்றுவிட்ட பின்னரும் உங்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்று எடுத்து கொள்ளலாமா என்று கூறிய குலாம் முஹம்மது அவர்கள் நீங்கள் முஸ்லிமாகி விட்டால் இந்த பிரச்சனைகள் அனைத்திலிருந்தும் நொடிப்பொழுதில் தீர்வு என கூறிய போது அரங்கமே அதிரும் அளவிற்கு கரகோஷங்கள்.

நீங்கள் இந்து என்று கூறியவுடன் அடுத்ததாக எந்த சாதி என்று எழும் கேள்வி இஸ்லாத்தில் எப்போதும் இல்லை. நாட்டின் தலைமகன் குடியரசு தலைவர் கோயிலுக்குள் அனுமதிக்கப் படவில்லை. ஆனால் இங்கே மஸ்ஜிதுக்குள் நீங்கள் தொழுகையின் போது எட்டி நின்றால் இழுத்து அருகில் நிறுத்தி தோளோடு தோளொட்டி காலோடு காலொட்டி நிற்க வைப்பார்கள் அது தான் இஸ்லாம் என்று கூறிய போதும் கரகோஷங்கள்.

யாக்கன் அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்து கூறி அதன் பக்கம் வர அழைப்பு விடுத்தார்கள்.





அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் வரை அவரை விடாமல் அவரை பின்தொடர்ந்து எடுத்துரைப்போம் என்றும் கூறிய போது அரங்கம் சிரிப்பலையால் அதிர்ந்தது. யாக்கனும் தான்.

பின்னர் அங்கிருந்த அனைத்து மக்களுக்கும் இஸ்லாத்தின் பக்கம் வர அழைப்பு விடப்பட்டது. அங்கிருந்த மக்களும் அதனை மிகுந்த கரகோஷத்துடன் அங்கீகரித்த போது விடுதலைக்கான அவர்களின் வேட்கை புரிந்தது.

நிகழ்ச்சியின் நடுநடுவே பலமுறை மின்சாரம் தடைபட்டு இருட்டானது. ஆனால் அப்போதும் கலைந்து செல்லாமல் ஆணியடித்தது போல் அமர்ந்திருந்து தங்களது கைபேசியில் இருந்த விளக்குகளை எரியவிட நிகழ்ச்சி தொடர்ந்தது, ஓர் அற்புதமான நிகழ்வு. இந்த சூழல் மெரினா புரட்சியை மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவுறுத்தியது. அந்நிலையிலும் கலைந்து சென்றுவிடாமல் அமைதி காத்து நிகழ்ச்சியை தொடர்ந்து கவனித்த மக்களை கண்ட போது அவர்களின் விடுதலைக்கான வேட்கையை நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நிகழ்ச்சியில் முதலில் உரையாற்றிய விஷ்ணுகுமார் அவர்கள் இடையிடையே கேள்விகளை எழுப்பி பேசிக் கொண்டிருந்தார். அப்போது நமக்கான நிரந்தர விடுதலை எப்படி வரும்? என்று கேள்வி எழுப்பிய போது பார்வையாளர்களில் அமர்ந்திருந்த மம்தா என்கின்ற சிறுமி “இஸ்லாத்திற்கு செல்வதினால் தான்” என்று பதில் கூறியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பின்னர் உரையாற்றிய மு. குலாம் முஹம்மது அவர்கள் அந்த சிறுமிக்கு இஸ்லாத்தைப் பற்றிய புத்தகங்களை விஷ்ணுகுமார் அவர்களின் கைகளால் அன்பளிப்பாக வழங்க வைத்தார்.


நிகழ்ச்சி நடப்பதற்கான நேரத்திற்கு சற்று முன்னதாகவே அந்த கிராமத்திற்கு நமது வைகறை நிருபர்கள் சென்றுவிட்டனர். அப்போது அந்த மக்களில் சிறுவர் சிறுமிகள் “நிகழ்ச்சிக்கு இப்போது தான் தயார் செய்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதுவரை எங்கள் வீட்டில் வந்து அமர்ந்திருங்கள். நாங்கள் டீ போட்டு தருகின்றோம்” என்று கூறிய அவர்களின் அன்பை வார்த்தைகளால் எழுதி விட முடியாது.

நிகழ்ச்சி கிட்டதட்ட இரவு 10.45 மணிக்கு முடிவுற்றது. அதுவரை பொறுமையாக நம்முடன் கடைசி வரை இருந்து நிகழ்ச்சியை சிறப்பித்த மக்களுக்கு நன்றி கூறி முடிக்கப்பட்டது.

இது நாள்வரை இந்த பகுதிக்கு இஸ்லாத்தை எடுத்து செல்லாமல் இருந்து விட்டோமே என்ற எண்ணம் நம்மை தாக்கினாலும் இன்று அந்த கடமையை நிறைவேற்றி விட்டோம் என்ற மனநிறைவுடன் கண்கள் பனிக்க எங்களுடைய பிரயாணத்தை அடுத்த பகுதிக்கு தொடங்கிவிட்டோம். இன்ஷா அல்லாஹ். துவா செய்யுங்கள் எங்கள் பணி தொடர.

**–இவண் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட்**

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? – 2




## ஜனனி (எ) ஆயிஷா ஃபாத்திமா

மே 2014ஆம் ஆண்டு தென்னிந்தியாவின் பிரபல நடிகை மோனிகா(ரஹீமா) ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார். அந்தச் சந்திப்பிற்கு வழக்கத்திற்கு மாறாக அவர் புர்காவோடு வந்து நின்றவுடன் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போயினர். பின்னர் அவர், தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும், இனி திரைப்படங்களில் நடிக்கப் போவதில்லை என்றும் பகிரங்க அறிவிப்பு விடுத்தார்.

அப்போது அவரை நோக்கி வீசப்பட்டக் கேள்விக்கணைகளில் முக்கியமானக் கேள்வி "நீங்கள் முஸ்லிம் இளைஞரை யாரையாவது காதலிக்கிறீர்களா?" என்பது. இது பிரபலங்களுக்கு மட்டுமில்லை, சாதாரண அடித்தட்டு வர்க்கத்தை சார்ந்த பெண் யாராவது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும் இந்த குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

இதை இரண்டு விதமாக சொல்லுவார்கள். ஒன்று, “முஸ்லிம் இளைஞர்கள் லவ் ஜிஹாத் எனும் பெயரில் இளம் பெண்களை தங்கள் மதத்திற்கு மாற்றுகின்றனர்”. இரண்டாவது “ஒன்றுமறியா பெண்களை மூளைச்சலவைச் செய்து முஸ்லிமாக மாற்றுகின்றனர்”. என்று.

ஆனால் உண்மை நிலவரமோ இதுவல்ல. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெரும்பாலான பெண்களுக்கு இஸ்லாத்தை யாரும் எடுத்தெல்லாம் சொல்வதில்லை. அவர்கள் தங்களை சுற்றியுள்ள முஸ்லிம்களின் வாழ்வியல் சூழலை கவனிக்கிறார்கள். பின்னர் இஸ்லாத்தைக் குறித்து கிடைக்கும் குறைந்தப் பட்ச தகவல்களை வைத்து சிந்திக்கிறார்கள், அதை ஆய்வு செய்கிறார்கள். அதனால் கவரப்பட்டு தானாக முன் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

இது தமிழகத்தில் மட்டுமில்லை. உலகம் முழுக்க இஸ்லாத்திற்கு வரக் கூடிய பெண்களின் அனுபவங்களை ஆய்வு செய்தீர்கள் என்றால், அவர்களாக சிந்தித்து ஆய்வு செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பார்களே தவிர, எந்த முஸ்லிமும் ஆரம்பத்தில் அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி கூறியிருக்க மாட்டார். (உ.ம். அகிலா (எ) ஹாதியா)

அதனடிப்படையில் தமிழகத்தின் திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த ஜனனி. இந்து மதத்தில் பிறந்து, கிருஸ்தவத்தை ஏற்றுக் கொண்டு பின்னர் இஸ்லாம் தான் நேர்வழி என்பதை, எந்த முஸ்லிமின் உதவியும் இல்லாமல் தானாக ஆய்வு செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். அவரது அனுபவங்கள் இதோ.....

**ஜனனி (எ) ஆயிஷா ஃபாத்திமா**

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்.... என்னுடைய பெயர் ஆயிஷா ஃபாத்திமா. என்னுடைய பழைய பெயர் ஜனனி. நான் B.com., படித்திருக்கிறேன். என்னுடைய குடும்பத்தில் நான் என்னுடைய தம்பி, அம்மா, அப்பா. நான் கன்னடம் பேசக் கூடிய தேவாங்க செட்டியார் சமூகத்தில் பிறந்தவள்.

**தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண மக்களின் அனுபவங்கள்.**

காலையில் சாப்பிடுவதற்கு முன்பு கோவிலுக்கு சென்று பூஜையெல்லாம் முடித்து விட்டுதான் சாப்பிடுவோம். அப்படியொரு சூழ்நிலையில் தான் சிறு வயதிலிருந்தே நான் வளர்ந்தேன்.

அதனால், நான் ஹிந்து மதத்தின் மீது பற்றுடன் இருந்தேன். எந்தளவிற்கு என்றால் சாலையில் இருக்கும் பேனரில் கூட கடவுள் படம் இருந்தால் அதை வணங்குவேன். அந்தளவிற்கு எனக்கு இந்து மதத்தின் மீது பற்று அதிகமாக இருந்தது.

என்னுடைய பெரியப்பா சிறு வயதிலேயே கிருஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டார். தற்போது அவர் திருப்பூரில் ஒரு பெந்தேகோஸ்தே கிருஸ்தவ சபையில் பாதிரியராக உள்ளார்.

**கிருஸ்தவத்தை நோக்கி....**

இந்த நிலையில் தான், நான் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை என்னுடைய பெரியப்பா வீட்டிலிருந்து எழுத வேண்டிய ஒரு சூழல் உருவாகியது.

அப்போது என்னுடைய பெரியப்பா என்னிடம் ஹிந்து மதம் எவ்வளவு மோசமானது என்பதைப் பற்றியெல்லாம் நிறைய எடுத்துக் கூறினார்.

"நீங்கள் லக்ஷ்மி, சரஸ்வதி என்று சிலைகளை உருவாக்கி ஒய்யாரமாய் வணங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் அதேப் படங்களை பட்டாசுகளில் வைத்து வெடிக்கவும் வைக்கிறீர்கள். இதென்ன கடவுள் பற்று?" என்று என்னிடம் கேட்டார்.

பின்னர் கிருஸ்தவம் தான் உண்மையான மார்க்கம் என்று என்னிடம் எடுத்துக் கூறினார். இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்றுக் கூறி அவர் சிலுவையில் அறையப்படுவதைப் போல ஒரு வீடியோவையும் போட்டுக் காட்டினார்.

அதைப் பார்த்தவுடன் எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இயேசு நம் பாவங்களுக்காக அவரை வருத்திக் கொண்டு சிலுவையில் பலியாகியுள்ளாரே! அவர் தான் உண்மையான கடவுளாக இருக்க முடியும் என யோசித்து அன்று முதல் ஹிந்து மதப் போதனைகளை பின்பற்றுவதை விட்டு விட்டேன்.

அது முதல் தேவாலயத்திற்கு செல்ல ஆரம்பித்தேன். நோன்பெல்லாம் இருக்க ஆரம்பித்தேன்.

அதுமட்டுமில்லாமல் என்னுடைய பெரியப்பா பெந்தெகோஸ்தே சபையின் பாதிரியார் என்பதால் அங்கு, பேய் ஓட்டுவது, பிசாசு ஓட்டுவது, அந்நிய பாஷை பேசுவது போன்ற செயல்களெல்லாம் இருக்கும்.

அதையெல்லாம் பார்த்த போது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. இதுவரை நான் பார்க்காத பல விஷயங்களை கிருஸ்தவ மதத்தில் பார்த்தேன்.

அதன் பிறகு பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் போது சர்ச்சிற்கு செல்லுவது, நோன்பிருப்பது போன்ற காரியங்கள் விடுப்பட்டது. அப்போது எனக்கு ஆறுதலாக இருந்தது பைபிள் தான்.

**பைபிளின் புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும்**

பைபிளின் புதிய ஏற்பாட்டை படித்துக் கொண்டே இருப்பேன். ஏனென்றால் அதில் இயேசுவின் அன்பைப் பற்றி, அவர் சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றியெல்லாம் சொல்லப் பட்டிருக்கும். அதையெல்லாம் படிக்கப்படிக்க இயேசுவின் மேல் அன்பு அதிகரிக்கும்.

ஒருக்கட்டத்தில் புதிய ஏற்பாடு தான் படித்தாயிற்றே. இனி பழைய ஏற்பாட்டை படிப்போம் என்று அதைப் படிக்க ஆரம்பித்தேன்.

பழைய ஏற்பாட்டை படிக்கப் படிக்க, நான் எந்தளவிற்கு கிருஸ்தவ மதத்தை நேசித்தேனோ, அந்தளவிற்கு அதை வெறுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியது.

அதில் இருக்கக்கூடிய முரண்பாடான கருத்துக்கள், ஆபாசமான வசனங்கள் எல்லாம் முகம் சுளிக்க வைத்தது. பைபிளின் அட்டைப் படத்தில் "இது பரிசுத்த வேதாகமம்" என்று இருக்கும். ஆனால் பழைய ஏற்பாட்டை படித்த போது எனக்கு தோன்றியது, "இது உண்மையில் பரிசுத்த வேதாகமம் தானா?" என்று.

அதன் பின் என்னுடைய பெரியப்பாவிடம் எனக்கு பைபிள் படிக்க விருப்பமில்லை. அதில் இருப்பதெல்லாம் எனக்கு பிடிக்கவில்லை" என்று கூறினேன். அதற்கவர், "இல்லை நீ தொடர்ந்து படி. படிக்கப்படிக்க தான் உனக்கு புரியும்" என்று கூறினார்.

இந்த நிலையில் ஒரு நாள் நான் தினமலர் நாளேட்டின் ஆன்மிக மலரில் கிருஸ்தவத்தைப் பற்றின ஒரு கட்டுரையைப் படித்தேன். அதன் அடுத்தப்பக்கத்தில் இஸ்லாத்தைப் பற்றின ஓர் ஆன்மிக கட்டுரை இடம் பெற்றிருந்தது.

பொதுவாக எனக்கு இஸ்லாம் என்றாலே

பிடிக்காது. ஏனென்றால் எனக்கு முஸ்லிம் யாரையும் தெரியாது. இஸ்லாம் என்றால் என்னவென்று தெரியாது. பாடப்புத்தகங்களில் கூட இஸ்லாம் குறித்து சில கேள்வி பதில்கள் வரும்.(சீறா புராணம்) அதைக் கூட நான் படித்ததில்லை. அதனால் இதைப் படிக்கலாமா? வேண்டாமா? என்று ஒரு குழப்பமாகவே இருந்தது. சரி என்னதான் இருக்கிறதென்று பார்ப்போம் என்று படித்தேன்.

**இயேசுவும் - ஈஸா(அலை) அவர்களும்**

அந்த கட்டுரையின் ஆரம்பத்தில் ஒரு குர்ஆன் வசனம் இருந்தது. "இயேசு என்றழைக்கப்படுகின்ற ஈஸா(அலை) அவர்களை நீங்கள் சிலுவையில் அறைந்துக் கொல்லவில்லை. அவரை நீங்கள் சிலுவையில் அறையவேயில்லை. அவரை நான் என்னிடத்தில் உயர்த்திக் கொண்டேன்" என்ற வசனம் இருந்தது.(4:157)

அதேப்போல ஒரு நபிமொழியும் இருந்தது. நபி(ஸல்) அவர்களிடம் ஒரு நபித்தோழர் வந்து கேட்கிறார். "யா ரசூலுல்லாஹ் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். என்னுடைய மகன் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவனிடத்தில் இஸ்லாத்தைப் பற்றியும் உங்களைப் பற்றியும் எடுத்துரைக்கும் போது, பரிகாசம் செய்கிறான். அவனின் இந்த செயல் என்னைக் கோபமூட்டுகிறது. அதனால் நான் பதிலுக்கு ஈஸா(அலை) அவர்களை தவறாக விமர்சித்து விடுவேனோ என அச்சமாக இருக்கிறது" என்று சொல்கிறார்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்; "இல்லை நீங்கள் அப்படி எதுவும் பேசிவிடாதீர்கள். ஈஸா(அலை) அவர்களுக்கும் எனக்கும் மத்தியில் எந்த நபியுமில்லை. நாங்கள் இருவரும் சகோதரராக இருக்கிறோம். நான் நபித்துவத்தின் இறுதி முத்திரையாக இருக்கிறேன்" என்று அந்த நபிமொழி முடிந்தது.

எனக்கு அப்போது அந்த ஹதீஸிலும் குர்ஆன் வசனத்திலும் குறிப்பிட்டுள்ள ஈஸா(அலை) அவர்கள் தான் இயேசு என்று தெரியாது. ஆனால் சிலுவையை குறிப்பிட்டதால் அவர் தான் இயேசுவாக இருப்பார் என நான் தீர்மானித்தேன்.

இதைப் படித்தவுடன் என் உள்ளத்தில் பலக் கேள்விகள் எழுந்தது. பொதுவாக நாம் ஒருக் கொள்கையை தூக்கிப் பிடித்து அதைப் பரப்பிக் கொண்டிருக்கும் போது, மற்றக் கொள்கை யுடையவர்களையும் அவர்கள் நம்பிக் கொண்டிருப்பவற்றையும் இழிவுப்படுத்தி தன்னுடையக் கொள்கையை தூக்கிப் பிடிப்போம்.

ஆனால் இந்த குர்ஆன் வசனமும், நபிமொழியும் இயேசு கிருஸ்துவை இவ்வளவு கண்ணியப்படுத்துகிறதே. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் யார்? ஏன் அவர் இயேசு கிருஸ்து குறித்து சிறு கலங்கம் கூட வராமல் பார்த்துக் கொண்டார்? என மனதிற்குள் பலக் கேள்விகள் ஓடியது.

பின்னர் வாராவாரம் தினமலரில் வரக்கூடிய அந்த இஸ்லாம் குறித்த கட்டுரைகளை சேகரிக்க ஆரம்பித்தேன். இப்படியே மூன்று மாதங்களாக அந்த கட்டுரைகளையெல்லாம் சேகரித்து படித்த போது இஸ்லாத்தில் ஏதோ ஒரு உண்மை இருக்கிறது என்று எனக்கு புரிந்தது.

அதன் பின்னர் இணையதளம் மூலம் இஸ்லாம் குறித்து நிறைய படித்து தெரிந்துக் கொண்டேன். இஸ்லாத்தின் கருத்துக்களுடன் நவீன விஞ்ஞானத்தின் உண்மைகள் ஒத்துப் போவதெல்லாம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சரியாக 2010ஆம் ஆண்டுகளிலேயே இஸ்லாம் தான் இறைவனின் மார்க்கம் என்று விளங்கி விட்டேன்.

ஆனால் என்னுடைய வீட்டில் இதைக் கூற முடியவில்லை. ஏனென்றால் வீட்டில் சொன்னால் நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் 2010 ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள ஒரு ஜமாத் மூலமாக நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்.

**நான் தீவிரவாதியாக மாறிவிட்டேனாம்.....**

அதன் பின்னர் என்னுடைய பெற்றோரை தொலைப்பேசி வாயிலாக தொடர்பு கொண்டு விஷயத்தை கூறினேன். அவர்கள் எல்லோரும் என்னைப் பார்க்க வந்தனர்.

அவர்கள் வரும் போது நான் ஹிஜாப் அணிந்திருந்தேன். அதைப் பார்த்தவுடன் என் தாய் தந்தையருக்கு மிகப்பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

என்னுடைய மகள் தீவிரவாதியாக மாறிவிட்டாள் என்று என்னுடைய அம்மா மிகவும் பிரச்சினை செய்தார்கள். அன்று இரவே சென்று காவல் நிலையத்தில் புகாரும் கொடுத்து விட்டார்கள்.

"என்னுடைய மகளை மூளைச்சலவை செய்து யாரோ சிலர் தீவிரவாத இயக்கத்தில் இணைத்து விட்டனர்" என்று புகார் அளித்து விட்டார்.

பின்னர் என்னை காவல் நிலையத்தில் வைத்து இரவு இரண்டு மணிவரை

விசாரித்தார்கள். நான் தெளிவாக கூறிவிட்டேன். "என்னை யாரும் மூளைச் சலவை செய்யவில்லை. நானாக விரும்பித்தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்." என்று. நான் மேஜர் என்பதால் புகாரை ரத்து செய்து என்னை அனுப்பி விட்டார்கள்.

என்னுடைய வீட்டில் என் தாத்தா ஆசிரியர் என்பதால் எல்லோருக்கும் ஒரு விதமான சுதந்திரம் இருந்தது. அவரவர்கள் விரும்பிய மதத்தை அவரவர்கள் பின்பற்றினார்கள். என்னுடை பெரியப்பாக்கள் இருவர் கிருஸ்தவத்தில் உள்ளனர். என்னுடைய சித்தப்பா நாத்திகராக உள்ளார். அவர்களின் விஷயத்திலெல்லாம் யாரும் எதுவும் கேட்க வில்லை. ஆனால் நான், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன் என்றவுடன் அவர்களால் அதைப் பொறுக்க முடியவில்லை.

**சோதனைகள்**

பின்னர் ஒரு இஸ்லாமிய தோழி மூலம் எனக்கு சேலத்தில் ஒரு மதரசா விவரம் கிடைத்தது. நான் அங்கு சென்று படித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் என் வீட்டார்களோ, "எனக்கு ஏதோ பெரிய பேய் பிடித்திருப்பதாகவும், அதனால் தான் இவள் இப்படியெல்லாம் செய்கிறாள்" என்றும் முடிவெடுத்து சாமியாரையெல்லாம் அழைத்து வந்து திருநீரெல்லாம் அடித்து மந்திரிப்பார்கள்.

இன்னொருப்பக்கம் என்னுடைய சித்தப்பா எனக்கு பேய் ஓட்டுகிறேன் என்று பைபிள் வசனங்களையெல்லாம் படித்து எனக்கு பேய் ஓட்டுவார்.

ஆனாலும் அவர்கள் என்ன செய்தாலும் நான் தெளிவாக கூறிவிட்டேன். இஸ்லாம் தான் நேர்வழி. நான் முஸ்லிமாகத்தான் இருப்பேன் என்று. அப்படி நான் சொன்னதும் என்னை அடித்து சபித்து விட்டு சென்று விடுவார்கள்.

அதன் பிறகு, நான் சேலம் மதரசாவிற்கு செல்வதற்கு உதவியாக இருந்த அந்த இஸ்லாமிய தோழியின் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள்.

தினமும் அவர்களின் வீட்டின் முன்னாள் நின்று பிரச்சனை செய்வார்கள். அவர்களை மிரட்டுவார்கள். அப்போது தான் அந்த தோழிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

என்னுடைய சமூகத்தில் இருக்கும் பெரிய பெரிய ஆட்களையெல்லாம் அந்த தோழியின் வீட்டிற்கு அழைத்துச் சென்று, "எங்கள் மகள் வீட்டிற்கு வராதவரைக்கும் உங்கள் மகளின் திருமணத்தை நடக்க விடமாட்டோம்" எனப் பிரச்சனை செய்தார்கள்.

அதனால், அந்த தோழியின் குடும்பத்தார்கள் என்னிடம் வந்து இப்படியெல்லாம் நடக்கிறது என்றுக் கூறினார்கள். அப்போது நான், "நம்மால் ஏன் அந்த தோழியின் திருமணம் தடை பட வேண்டும்?" என்ற சிந்தனையில் மதரசாவிலிருந்து வீட்டிற்கு செல்லலாம் என முடிவெடுத்தேன்.

என்னை அழைத்துச் செல்ல என் குடும்பத்தார்கள் வந்திருந்தார்கள். அவர்கள் என்னிடம் "நீ வீட்டில் இருந்துக் கொண்டே இஸ்லாத்தை பின்பற்றிக் கொள். புர்காவைக் கூட போட்டுக்கொள். குர்ஆனைக் கூட ஓதிக்கொள். எப்படி பெரியப்பா கிருஸ்தவராக இருக்கிறாரோ அதேப்போல நீ முஸ்லிமாக இருந்துக் கொள்ளலாம். எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை" என்றுக் கூறித்தான் அழைத்துச் சென்றார்கள்.

ஆனால் ஊருக்கு வந்தவுடன் இரயில் நிலையத்திலேயே நிற்க வைத்து "நீ புர்காவை கழட்டினால் தான் உன்னை அழைத்துச் செல்வோம். இதையெல்லாம் மாட்டிக்கொண்டு நீ வரமுடியாது" என்று கூறினார்கள்.

ஆனால் நான் உறுதியாகக் கூறிவிட்டேன். "என்னால் ஹிஜாப்பையெல்லாம் கழட்ட முடியாது. நான் முஸ்லிமாகத் தான் இருப்பேன்." என்று.

**மிரட்டல்கள்**

பின்னர் வீட்டிற்கு சென்றோம். அடுத்த மூன்று நாட்கள் வீட்டில் நிறைய பிரச்சனைகள் நடந்தது. பின்னர் புகாரை திரும்ப பெற வேண்டும் என்று என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள்.

அங்குச் சென்றவுடன் காவல் நிலையத்தில் வைத்து என்னை மிரட்டினார்கள். "நீ இதேப்போல இஸ்லாத்தில் தான் இருப்பேன் என்று கூறினால், உனக்கு உதவி செய்த அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு மீண்டும் விசாரிப்போம்" என்று பிளாக் மெயில் செய்தார்கள்.

அந்த தோழியை வைத்து என்னை பிளாக் மெயில் செய்ய ஆரம்பித்தார்கள். என்னால் புர்கா போட முடியாமல், குர்ஆன் ஓத முடியாமல் மிகவும் கஷ்டமாக இருந்தது.

அதுமட்டுமில்லாமல் எனக்கு பேய், பிசாசு பிடித்து விட்டது என்று தேவாலயத்திற்கு கூட்டிச் சென்று பிரார்த்திப்பது, கோவிலுக்கு கூட்டிச் சென்று மந்திரிப்பது போன்றவற்றை

யெல்லாம் செய்தார்கள். அதேப்போல எங்கள் குடும்பத்தில் ஏதாவது விழா நடந்தால் அங்கு அழைத்துச் சென்று பெரியவர்கள் காலில் விழச் சொல்லுவார்கள். ஸ்லோகம் படிக்கச் சொல்வார்கள். இதையெல்லாம் நான் செய்ய மாட்டேன் என்று கூறுவேன். அதற்கு அவர்கள் "இவள் துலுக்கச்சியாக மாறிவிட்டாள் அதானால் தான் பைத்தியம் பிடித்து விட்டது." என்றெல்லாம் கூறி அசிங்கப்படுத்துவார்கள்.

என்னுடைய பெரியப்பா வீட்டிற்கு கூட்டிச் செல்வார்கள்; அவர் கிருஸ்தவம் தான் சரியான மார்க்கம் என்று இரண்டு மணி நேரம் உட்கார வைத்து பேசுவார். வீட்டிற்கு வந்தால் அம்மா, அப்பாவெல்லாம் இந்து மதம் தான் சரியான மார்க்கம் என்று கூறி அதை பின்பற்ற சொல்லுவார்கள். சித்தப்பா வந்தாரென்றால், நாத்திகம் தான் சரி. கடவுளெல்லாம் இல்லை என்று கூறுவார்.

இப்படி எல்லோரும் அவரவர் நம்பிக்கைகளை என்னிடம் கூறுவார்கள். ஆனால் நான் இஸ்லாத்தைப் பற்றி கூறினால் மட்டும் காது கொடுத்து கேட்க மாட்டார்கள்.

என்னுடைய பெரியப்பா என்னிடம் வந்து, "நீ ஏன் நேர்வழியை குர்ஆனில் தேடுகிறாய்? குர்ஆனில் தேடினால் பைத்தியம் தான் பிடிக்கும். நீ முஸ்லிம்களைப் பார். எந்த முஸ்லிமாவது ஒழுங்காக இருக்கிறானா? நீ கிருஸ்தவ மதத்தை பார். நான் சில கேசட்டுக்களை போட்டுக் காட்டுகிறேன். அதையெல்லாம் பார். அதைப் பார்த்து முடித்தவுடன் நீ கிருஸ்தவனாகி விடுவாய்." என்றுக் கூறினார்.

நானும் அவர் போட்ட எல்லாக் கேசட்டுக்களையும் பார்த்தேன். அதில் பைபிளின் பல்வேறு வசனங்களும் இடம் பெற்றிருந்தது. அப்போது ஓரிறைக் கொள்கையை போதிக்கக் கூடிய பைபிளின் சில வசனங்களும் வந்தது.

உடனே நான் அவர்களிடம் "பாருங்கள் பைபிளின் வசனங்களே இறைவன் ஒருவன் தான் என்று போதிக்கிறது. பின்னர் நீங்கள் ஏன் இயேசுவை இறைவனாக ஏற்றுக் கொள்ள சொல்கிறீர்கள்?" என்றுக் கேட்டேன்.

அதற்கு அவர்கள், "அதில் அத்துனை வசனங்கள் ஓடியது. அதுவெல்லாம் உனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு இறைவன் என சொல்லக்கூடிய வசனங்கள் தான் உனக்குத் தெரிகிறதா? அப்படியென்றால் உனக்கு ஏதோ பெரிய பேய் தான் பிடித்திருக்கிறது." எனக் கூறி கேரளாவிற்கெல்லாம் அழைத்துச் சென்று நம்பூதிரியையெல்லாம் வர வைத்து மந்திரித்தார்கள். ஆனால் என்னிடத்தில் எந்த மாற்றமும் இல்லை. அதனால் என்னுடைய குடும்பத்தார் எனக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்து விட்டார்கள். சரி இதற்கு மேல் வீட்டில் இருப்பது நல்லதல்ல என்று எனக்கு தோன்றியது.

ஆனால் முன்பு போல மறுபடியும் நான் வீட்டை விட்டு வெளியே வந்து என்னால் யாருக்கும் எந்த பிரச்சனையும் வந்து விடக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

அதன் பிறகு மூன்று மாதங்களாக கவனமாக இணையதளத்தில் தேடினேன். அப்போது தான் சென்னையில் உள்ள ஒரு "பெண்கள் இஸ்லாமிய அழைப்பு மையம்" பற்றி தகவல்கள் கிடைத்தது. அவர்களை தொடர்பு கொண்டு என்னுடைய சூழ்நிலைகளை எடுத்துக் கூறினேன். அவர்கள் எனக்கு உதவுவதாகக் கூறினார்கள்.

**அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத்**

*2013* பிப்ரவரி *15*ஆம் நாள் திருப்பூரிலிருந்து சென்னைக்கு ரயிலில் தனியாகத்தான் வந்து சேர்ந்தேன். அதற்கு முன் நான் தனியாக ஒரு மணி நேரம் கூட பயணம் செய்ததில்லை. ஆனால் அல்லாஹ் போதுமானவன், அவன் நிச்சயமாக நம்மை கைவிட மாட்டான் என்ற ஒரே நம்பிக்கையில் சென்னை வந்து சேர்ந்தேன்.

அதன் பிறகும் என் குடும்பத்தாரிடமிருந்து எனக்கு நிறைய பிரச்சனைகள் வந்தது. என்னுடைய அப்பா,

"முதல் முறை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது நாங்கள் உன்னை மீட்டு வீட்டிற்கு அழைத்து வந்து, மூன்று வருடங்கள் எங்களுடன் வைத்திருந்து நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று நம் சமூக மக்களுக்கு நிரூபிக்கும் வண்ணமாக நடந்துக் கொண்டோம். ஆனால் நீ மீண்டும் அதில் சென்று விட்டாய். நீ வெளியில் வந்தால் நிச்சயமாக நான் உன்னை கொன்று விடுவேன். அதற்காக நான் சிறை சென்றாலும் கவலையில்லை" என்று கூறிவிட்டார்.

"உனக்கு நாங்கள் மூன்று நாட்கள் கெடு தருகிறோம். அதற்குள் இஸ்லாத்தை விட்டுவிட்டு வீட்டிற்கு வந்து விடு. இல்லையென்றால் நிச்சயமாக உன்னை கொன்று விடுவோம்." என்று வெறித்தனமாக இருந்தார்கள்.

ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் இவையனைத்தையும் எனக்கு இலேசாக்கி வைத்தான். இப்போது மூன்று வருடங்கள் கடந்து விட்டது. என் குடும்பத்தார்கள் என் மீது வைத்திருந்த கோபமெல்லாம் இப்போது

இல்லை. அவர்கள் என்னை வந்து பார்க்கின்றார்கள். நலம் விசாரிக்க வருகின்றார்கள்.

ஆனால் இஸ்லாத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக அவர்கள் ஒரு நாள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

அல்லாஹ் ஒருவன் மட்டுமே போதுமானவன் என்று நினைக்கக்கூடிய மனிதர்களுக்கு அல்லாஹ்வுடைய உதவி மிக சமீபமாக இருக்கும். எனக்கு அல்லாஹ் உதவி புரிந்தான். அதேப்போல இன்றையக் காலக்கட்டத்தில் நிறைய பெண்கள் இந்த இஸ்லாமிய மார்க்கத்திற்கு வந்து விடுகிறார்கள்.

ஆனால் அவர்கள் வீட்டில் சந்திக்கும் இன்னல்களாலும், சோதனைகளாலும், குர்ஆனை படிக்க முடியாமல், ஹிஜாப்பை அணிந்துக் கொண்டு முஸ்லிம்களைப் போல் வெளியில் செல்ல முடியாமல், அல்லாஹ்வை தொழுக முடியாமல் ஏங்கி தவிக்கிறார்கள்.

அவர்களுக்காகவும், என்னுடைய அப்பா அம்மாவெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் பிரார்த்தியுங்கள். அஸ்ஸலாம்.

(Source:https://www.youtube.com/watch?v=MNeAAirqKr4&list=PL6QNhHvRWhuGoQxcrzTp3FjU2MWURR5gV)

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்**

# என்னங்க சார் உங்க திட்டம்...?

அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் வரப் போகிறது. திரும்பவும் ஆட்சிக்கு வரணும்னா.. பாஜகவை ஆதரிக்கிற நடுத்தர மக்களுக்கு இந்த பட்ஜெட்டில் ஏகப்பட்ட சலுகைகள் இருக்கும். வருமான வரியே கட்ட வேண்டியது இருக்காது. அதற்குப் பதில் வங்கிப் பரிமாற்ற வரிதான் இருக்கும்.. ஏகப்பட்ட பணம் மிஞ்சும்.. வீடு வாங்கலாம், நிலம் வாங்கலாம்.. முதலீடு செய்யலாம்... இப்படி பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த நடுத்தர மக்கள் ஏமாந்து போய் இருக்கிறார்கள்.

நடுத்தர மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வருமான வரி உச்சவரம்பு உயர்த்தப் படவில்லை. நிரந்தரக் கழிவு முறை மீண்டும் இந்தப் பட்ஜெட்டில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. வரி செலுத்த வேண்டிய வருமானத்தில் இருந்து ரூ.40 ஆயிரம் வரை கழித்துக் கொள்ளலாம் என அறிவித் திருக்கிறார் நிதியமைச்சர். இதனால் ஏற்கனவே, சம்பளத்தின் ஒரு பகுதியாக பயணப்படிக்கும் மருத்துவச் செலவுக்கும் அலவன்ஸ் வாங்குபவர்களுக்கு இதனால் எந்த லாபமும் இல்லை. மேலும் கல்வி வரி 3 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக அதிகரித்துள்ளதால், அதற்காக கூடுதல் வரி செலுத்த வேண்டியிருக்கும்.

அடுத்ததாக, பட்ஜெட்டில் ரூ.1 லட்சத்துக்கு அதிகமான நீண்ட கால முதலீட்டு ஆதாயத்தின் மீது 10 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இதுவும் நடுத்தர மக்களுக்கு மிகப் பெரும் அடியாகும். உலகிலேயே அதிகம் சேமிப்பு வைத்திருப்பது இந்தியர்கள்தான். வருமானத்தில் 25 சதவீதம் வரை சேமிக்கிறார்கள் என்கிறது புள்ளி விவரம். இதை நிலம், வீடு, தங்கம் போன்ற வற்றில்தான் முதலீடு செய்வது வழக்கம். இந்தியர்களில் வெறும் 2 சதவீத மக்கள்தான் பங்குகளிலும் பரஸ்பர நிதி திட்டங்களிலும் முதலீடு செய்துள்ளனர். வங்கி டெபாசிட், அஞ்சலக சேமிப்புத் திட்டங்கள் போன்றவற்றில் வட்டி குறைந்து விட்டதால், இப்போதுதான் நடுத்தர மக்கள் பங்குகள். பரஸ்பர நிதி நிறுவனங்களின் திட்டங்களில் முதலீடு செய்ய ஆரம்பித்தனர். ஆனால் அதற்கும் இப்போது வேட்டு வைத்து விட்டார்கள் என்கின்றனர் நடுத்தர மக்கள்.


ஓய்வூதியம் கிடைக்காத பணியில் இருக்கும் நடுத்தர மக்கள் அதிக அளவில் பரஸ்பர நிதி திட்டங்களில் முதலீடு செய்து வருகின்றனர். எஸ்ஐபி எனப்படும் மாதாந்திர முதலீடுகள் மூலம் கணிசமான தொகையை ஓய்வு காலத்துக்கு சேமிப்பது அவர்கள் வழக்கம். ஆனால் வரும் லாபத்தில் 10 சதவீதத்தை வரியாக செலுத்த வேண்டும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருப்பது, சேமிப்பு மீதான ஆர்வத்தைக் குறைக்கும் செயலாகும் என பரஸ்பர நிதி நிறுவனங்களே வருத்தம் தெரிவித்துள்ளன. ஆனால், நடுத்தர மக்களுக்குத் தொடர்ந்து பல சலுகைகளை அளித்து வருவதாக நிதியமைச்சர் ஜேட்லி பட்ஜெட்டுக்குப் பிறகு ஒரு தனியார் டிவிக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு முறையும் குறிப்பிட்ட துறையினருக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. இந்த முறை விவசாயிகளுக்கும் ஏழை மக்களுக்கும் அதிக பலன் கிடைக்கும் வகையில் திட்டங்களை அறிவித்திருக்கிறோம். குறிப்பாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் 10 கோடி மக்களுக்கு பலன் கிடைக்கப் போகிறது. இதற்காக மட்டுமே ரூ.10 ஆயிரம் கோடி வரை செலவாகும்`` எனக் கூறியிருக்கிறார் ஜேட்லி. அதிகரித்து வரும் மாதாந்திர வீட்டுச் செலவுகள். பெட்ரோல், டீசல் விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு போன்றவற்றை சமாளிக்க முடியாமல்தான் வரிச் சலுகையை எதிர்பார்த்திருக்கிறார்கள் நடுத்தர மக்கள். இதுபோன்ற சூழலில் பட்ஜெட்டில் சொல்லிக் கொள்ளும்படியாக சலுகைகள் இல்லாதது அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

2019-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் வருகிறது. பாஜகவை பொறுத்தவரை இதுதான் கடைசி பட்ஜெட். அதனால் இந்த பட்ஜெட்டில் அதிக வரிச் சலுகை அளிக்கப்படும். மக்கள் நலத் திட்டங்களுக்கு அதிகம் செலவிடப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பொதுத் தேர்தலில் வெற்றி பெற, ஏற்கனவே வெற்றி பெற்றதற்கு உதவிய நடுத்தர மக்களுக்கு இதுபோன்ற வரிச் சலுகைகள் அள்ளி வழங்கப்படும் என எதிர்க் கட்சிகளே கூட எதிர்பார்த்தன. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானால் பாஜகவுக்கு இரண்டே வழிகள் இருக்கிறது. ஒன்று தன்னைத் தொடர்ந்து ஆதரித்து வரும் நடுத்தர மக்களுக்கு பட்ஜெட்டில் வருமான வரிச் சலுகை அளித்து அவர்களை குஷியாக வைத்துக் கொள்வது. இன்னொன்று போர். சலுகை இல்லையென்று ஆகி விட்டது. எனவே தேர்தலுக்கு முன்னதாக பாகிஸ்தானோடு சிறிய போர் நடக்கலாம் என எச்சரிக்கிறார்கள் அரசியல் நிபுணர்கள். ஏற்கனவே எல்லை தாண்டி ஊடுருவி துல்லியத் தாக்குதல் நடத்தி வரும் இந்தியப் படை, பாகிஸ்தான் ஆக்கிரமித்து வைத்திருக்கும் காஷ்மீர் பகுதியில் முழு அளவு தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கிறார்கள். போர் எப்போதெல்லாம் நடந்ததோ, அப்போதெல்லாம் ஆட்சியில் இருக்கும் கட்சிதான் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. அந்த பார்முலாவை இந்த முறை பாஜக பயன்படுத்தும் என்கிறார்கள் அவர்கள்.

**நன்றி தி இந்து.**



## முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

தொடர் 4

- அபூ அஃப்ரஹ்

நூருத்தீன் அவர்கள் மக்களின் பிரச்சனைகளை அறிந்து கொள்ளவும் அதைசரி செய்யவும் ஒருவாரத்தில் 4 அல்லது 5 நாட்கள் நீதிமன்றத்திற்கு வந்து விடுவார். அதற்கென கூடுதலாக சம்பளம் எதுவும் அவர் பெறவில்லை. அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடியும் அவனிடம் கூலி தேடியும் இதனை செய்து வந்தார்.

அப்படி செல்லும் போது மார்க்க அறிஞர்களையும் நீதிமான்களையும் உடன் அழைத்து செல்வார். அவருடைய அறையின் வாசலில் எந்த காவலாளியையும் நிற்க வைக்கவில்லை. இதன் மூலம் வலியவர் எளியவர் எனஅனைவரும் எந்ததங்கு தடையுமின்றி அவரை சந்தித்து வந்தனர்.

அவரை சந்திக்க வருபவர்களிடம் அவர் மிக மென்மையாகவே பேசுவார். ஆனால் அதில் உறுதிஇருக்கும். அந்தஉறுதிதவறு செய்வர்களை ஆட்டிப்படைக்கும்.

அவருடைய காலத்தில் தான் லெவான்த் மார்க்க அறிஞர்கள், நீதியரசர்கள், சூஃபிகள் வாழும் இடமாகமாறியது. அறிவாளிகளின் கூடாரமாக மாறியது.

நூருத்தீன் அவர்களின் அரசவை மற்ற மன்னர்களின் அவையை போன்றதல்ல. அதில் பொய், புறம், அவதூறு, குறைபேசுதல், அளவுக்கதிகமாக மன்னரை புகழ்தல் போன்றவை இருந்ததில்லை.

### நூருத்தீனைப் பற்றி ஃபிரான்க்குகளின் எண்ணம்

நூருத்தீன் அவர்கள் இரவுத் தொழுகையான தஹஜ்ஜத் தொழுகையை ஆர்வமுடன் தொழுபவர்களாக இருந்தார்கள். அதேப் போல் மற்ற ஐந்து வேளை கடமையான தொழுகைகளை ஆர்வமுடனும் பணிவுடனும் அனைவருடன் சேர்ந்து ஜமாஅத்தாக தொழும் வழமையை கொண்டிருந்தார்கள்.

ஃபிரான்க்ஸ் (பண்டைய ஜெர்மானியர்கள் தற்போதைய ஃபிரான்ஸையும் சேர்த்து) எனப்பட்ட எதிரிகள் நூருத்தீன் ஸங்கியை பற்றி இப்படி பேசிக் கொண்டார்கள்.

"அவர் அல்லாஹ்விடத்தில் நெருக்கமாக உள்ளார். அவர் போர்களில் வெற்றி பெறுவது அதிகப்படியான போர்வீரர்களின் எண்ணிக்கையால் அல்ல. அவருடைய பிரார்த்தனையாலும் இரவுத் தொழுகை களாலும் தான். அவர் இரவுகளின் நின்று

தொழுகிறார். தன் கரங்களை அல்லாஹ்வை நோக்கி உயர்த்திப் பிடிக்கிறார். அவருக்கு அல்லாஹ்வும் பதில் அளிக்கிறான். அவர் கேட்பதையெல்லாம் கொடுக்கிறான்."

## நீதிமன்றத்தில் மென்மை

ஷேக் தாவுதல் மக்தஸி என்பவர் பின்வரும் சம்பவத்தை கூறுகிறார்,

ஹிஜ்ரி558ல் ரபியுல் அவ்வல் மாதம் (கி.பி 1163ல்) நீதிமன்றத்தில் நூருத்தீன் அவர்கள் இருந்த போது ஒருவன் அவரிடம் நூருத்தீனுடைய தந்தையைப் பற்றி புகார் அளித்தான். தன்னிடமிருந்து கொஞ்சம் பணத்தை சட்ட விரோதமாக அவர் எடுத்துக் கொண்டதாக அந்தப் புகார்.

அது பொய் புகார் என நூருத்தீனுக்கு தெளிவாக தெரியும். ஏன் என்றால் அவருடைய தந்தை அப்படிப் பட்டவர் அல்லர்.

நூருத்தீன் அவர்களிடம் அந்த பணத்தை திரும்ப அளிக்கும் படி அந்த மனிதன் கேட்டான். நூருத்தீன் அந்த மனிதனிடம்

"எனக்கு நீ சொல்வதைப் பற்றி எதுவும் தெரியாது. நீ உன் கூற்றுக்கு ஆதாரமாக ஏதாவது சாட்சியையோ ஆதாரத்தையோ கொண்டு வந்தால் நான் எனக்கு என் தந்தை அளித்தவற்றிலிருந்து அதை திரும்ப தந்து விடுகிறேன்" என்று மிக மென்மையாக பதிலளித்து அனுப்பி வைத்தார்.

ஆனால் அந்த மனிதன் திரும்ப வரவே இல்லை. இதுவும் நூருத்தீன் ஸங்கி அவர்களின் மென்மையான போக்கிற்கு ஒரு சாட்சி.

## அறிவீனனுக்கும் ஆன்மீகவாதிக்கும் சண்டை

ஒருமுறை ஆன்மீகவாதி ஒருவர் நூருத்தீன் அவர்களை காணவந்தார். அவர் அபுல் பயான் என்பவரின் சகோதரர்.

அபுல் பயான் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு முன் அவரிடம் ஒரு தொகை அமானிதமாக கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதைப் பற்றி யாருக்கும் தெரிய வில்லை.

அந்த தொகையை அமானிதமாக கொடுத்தவர் இதைப் பற்றி அந்த ஆன்மீகவாதிக்கு தெரியும் என உறுதியாக நம்பினார். அதைத் திரும்பத் தரும் படி கடுமையாக வலியுறுத்தினார்.

ஆனால் அந்த ஆன்மீகவாதி அதை ஒப்புக் கொள்ளவில்லை. மறுத்தார்.

வழக்கு நீதிமன்றத்திற்கு கமாலுத்தீன் என்ற நீதிபதியின் முன் வந்தது.

சாட்சியங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் கமாலுத்தீன் அவர்கள் அந்த ஆன்மீகவாதியை தனக்கு அந்த அமானிதத்தைப் பற்றி எதுவும் தெரியாது என இறைவன் மீது சத்தியம் செய்து கூறும்படி பணித்தார்.

அந்த ஆன்மீகவாதியும் அவ்வாறே சத்தியம் செய்தார்.

நீதிபதியும் அவரை விடுவித்து விட்டார்.

ஆனால் அமானிதத் தொகையை கொடுத்தவர் தொடர்ந்து அந்த ஆன்மீகவாதியை சபித்து வந்தார். அந்த ஆன்மீகவாதி ஒரு பொய்யன் என கூறி வந்தார்.

அந்த ஆன்மீகவாதி நூருத்தீன் அவர்களிடம் நேரிடையாக சென்று அந்த மனிதரைப் பற்றி புகார் அளித்தார்.

அந்த மனிதனை பிடித்து வந்து அவனை கடுமையாக தண்டிக்கும் படியும் கோரினார்.

அவரைப் பார்த்து நூருத்தீன் அவர்கள், "அறியாமையில் உள்ளவர்கள் உங்களை கடுமையான (தகாத வார்த்தைகளை) கொண்டு பேசினால் அவர்கள் மென்மையான வார்த்தைகளைக் கொண்டு பதிலளிப்பார்கள்" என்று அல்லாஹ் தன்னுடைய வேதத்தில் கூறவில்லையா என்று கேட்டார்.

"அந்த மனிதர் தான் அறியாதவர் என்றால் நீங்களும் அவரைப் போன்று நடக்கக் கூடாதல்லவா?

ஒரு தீமைக்கு இன்னொரு தீமை பதிலாகாது.

நன்மையைக் கொண்டு அவருக்கு பதிலளியுங்கள்" என்று கூறினார்.

குர்ஆனை ஆய்ந்து அறியும் அவரின் அறிவாற்றல் அல்லது அல்லாஹ் அவருக்கு வழிகாட்டியதன் காரணமாகவே நூருத்தீன் அவர்கள் இவ்வாறு சிந்தித்திருக்க வேண்டும் என கமாலுத்தீன் அவர்கள் கூறுகிறார்கள்.

**செவிமடுத்தோம் கட்டுப்பட்டோம்..**

அலெப்போவின் நீதிபதியின் பெயர் தாஜுதீன் அப்துல் கஃபூர் இப்னுலுக்மானுல் குர்தாரி. அவருக்கு ஒரு பணியாள் சிறுவன் இருந்தான். அவன் பெயர் ஜுவைத். அவன் நீதிமன்ற நடைமுறைகளை செயல்படுத்தும் பணியில் இருந்து வந்தான்.

ஒரு முறை வணிகர் ஒருவர் நூருத்தீன் அவர்கள் மீது ஒரு வழக்கை தொடர்ந்தார்.

அதற்காக அல்குர்தாரி அவர்கள் நூருத்தீனை அழைத்து வர ஜுவைதை அனுப்பி வைத்தார்.

நூருத்தீன் அவர்களின் வீட்டை நெருங்கிய ஜுவைதை இஸ்மாயில் அல் காசிந்தர் என்பவர் வரவேற்று என்ன காரணத்திற்காக ஜுவைத் வந்திருக்கிறான் என்று கேட்டறிந்தார்.

நூருத்தீன் அவர்கள் ஆஜராக சம்மன் கொண்டு வந்துள்ளேன் என்று அவன் சொன்ன காரணத்தை கேட்டதும் இஸ்மாயில் சிரித்து விட்டார். என்ன! நூருத்தீனை விசாரிக்க சம்மன் கொண்டு வந்துள்ளாயா? இது என்ன கேலிக் கூத்து என்று நையாண்டி செய்ய ஆரம்பித்து விட்டார்.

அப்படியே சிரித்துக் கொண்டே நூருத்தீன் அவர்களிடம் சென்றவர், என் மன்னரே சற்று எழுந்திருப்பீராக! என்று சொன்னார். அதை கேட்ட நூருத்தீன் அவர்கள் எதற்கு? எங்கே? எனக் கேட்டார்.

தாஜுத்தீன் அவர்களின் வேலைக்கார சிறுவன் தங்களை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்ல சம்மன் கொண்டு வந்துள்ளான் என்று கேலியாக சொன்னார்.

அதைக் கடிந்து கொண்ட நூருத்தீன் அவர்கள் "நான் நீதிமன்றத்திற்கு வரும் படி அழைக்கப்பட்டதற்காகவா கிண்டலடிக்கிறீர்கள்? நான் அதற்கு செவிமடுக்கத்தான் வேண்டும், கட்டுப்படத்தான் வேண்டும். ஏனெனில் எல்லாம் வல்ல அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கட்டளையிடுகிறான்:

மூமின்களிடம் அவர்களுக்கிடையே (ஏற்படும் விவகாரங்களில்) தீர்ப்புக் கூறுவதற்காக அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் (வரும்படி) அழைக்கப்பட்டால், அவர்கள் சொல்(வது) எல்லாம் "நாங்கள் செவியேற்றோம், (அதற்குக்) கட்டுப் பட்டோம்" என்பது தான். இ(த்தகைய)வர்கள் தாம் வெற்றி அடைந்தவர்கள். (அல்குர்ஆன் 24:51) என்று கூறி விட்டு நூருத்தீன் அவர்கள் தன் குதிரையை எடுத்துக் கொண்டு வேகமாக கிளம்பினார்.

அவர் நகரத்தின் வாயிலை அடைந்தார். அங்கே ஜுவைதிடம் "நீ நீதிபதியிடம் சென்று அல்லாஹ்வுக்காக நான் இங்கே வந்து விட்டேன். ஆனால் நீதிமன்றத்தை என்னால் அடைய முடியவில்லை. ஏனென்றால் இந்த பாதைகள் குறுகலாகவும் முழுவதும் சேறாகவும் உள்ளன.

எனவே நான் என் பிரதிநிதியை அனுப்பி வைக்கிறேன். அவர் நீதிமன்றத்திற்கு வருவார். நான் நீதிமன்றத்திற்கு வந்து நேரில் சத்தியம் செய்வது அவசியம் என்றால் இன்ஷா அல்லாஹ் நான் வருகிறேன் என்று சொல்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

அதன் பின்னர் நூருத்தீன் அவர்களின் பிரதிநிதி நீதிமன்றத்தில் பங்கேற்றார். ஆனால் நூருத்தீன் அவர்கள் அங்கு வர வேண்டியது கட்டாயமானது.

எனவே நீதிபதி மீண்டும் நூருத்தீனுக்கு சம்மன் அனுப்பினார். அங்கு செல்வது மிகுந்த சிரமம் என்பதை உணர்ந்த நூருத்தீன் அவர்கள் அதற்கு பதிலாக அந்த வழக்கு தொடர்ந்த வியாபாரியை நேரில் வர வழைத்து அந்த வியாபாரியின் தேவையை பூர்த்தி செய்து அந்த விவகாரத்தை சுமூகமாக முடித்துக் கொண்டார்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்..

**வைகறை வாசகர்கள் தங்களதுச் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

**+91 81481 29887**

# இஸ்லாமிய வங்கி முறை - இஸ்திஸ்னா.

- அபூதாஹிர்

சென்னையில் உள்ள மௌலிவாக்கத்தில் 2014ஆம் ஆண்டு நடந்த கோர விபத்தை நிச்சயமாக மக்கள் அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். மழைக்கு ஒதுங்கிய மக்கள் உட்பட மொத்தம் 61 பேர் உயிரிழந்தனர்.

கட்டிடம் சரியாக கட்டவில்லை. அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்று காரணம் கூறி அதன் அருகில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த இன்னொருக் கட்டிடத்தை 2016இல் அரசு இடித்து தள்ளியது.

இந்த விபத்தில் ஏற்பட்ட இழப்புகள் பல. அந்தக் கட்டிடத்தில் வீடு வாங்கியவர்களின் பொருளாதார நெருக்கடிகளை மட்டும் இப்போது பார்ப்போம்.

சொந்த வீட்டுக் கனவை எல்லோருக்கும் பொதுவாக்கி அதன் மூலம் நிலத்தின் விலையை பன்மடங்காக உயரச் செய்து பல கோடி ரூபாய் வருவாய் கண்டது கட்டுமான தொழில் நிறுவனங்கள்.

வீடுகளைக் கட்டுவதற்கு திட்டம் போட்டவுடன் மக்கள் போட்டிப் போட்டுக் கொண்டு முன் பதிவு செய்து விட்டனர். வங்கியில் கடன் வாங்கியோ அல்லது தங்களது சேமிப்புப் பணத்தை செலுத்தியோ தங்களுக்கு சொந்தமாகப் போகும் வீட்டில் அப்போதே கனவில் குடியேறி விட்டனர்.

வங்கியில் வட்டிக்குக் கடன் வாங்கியவர்களிடம், வாங்கிய முதல் நாளில் இருந்தே தவணைகளை வங்கிகள் வசூல் செய்ய ஆரம்பித்து விட்டது. கட்டிடம் கட்டி முடித்தப்பின் வாடகையிலிருந்து தப்பிக்கலாம் என நினைத்தவர்களுக்கு கட்டிட விபத்து பேரிடியாக விழுந்தது.

ஆம்! மழையில் கட்டிடம் சரிந்து விழுந்தது. அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பல;

சொந்த வீடு கனவு தள்ளிப் போனது.

கட்டுமான நிறுவனம் எந்த உத்தரவாதமும் தராமல் கை விரித்தது. காப்பீட்டு நிறுவனங்கள் வீடு கட்டிய பின் விபத்து நடந்தால் தான் ஏற்போம். என்று நஷ்டஈட்டை தவிர்த்துக் கொண்டது.

வாங்கிய கடனுக்கு வட்டியுடன் தவணை வாங்க வங்கிகள் வாடிக்கையாளரின் வீட்டு வாசலில் வந்து நின்றன.

வாடகை கொடுக்க வேண்டிய சுமையுடன் இல்லாத வீட்டிற்கு தவணை என்ற சுமையும் மக்களின் மீது விழுந்தது.

அரசு என்ன செய்வது என தெரியாமல், காலம் கடந்த ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது.

அவர்களுக்கு இன்றளவிலும் நிச்சயமாக நீதி கிடைத்திருக்காது என்பதை நாம் எல்லோரும் அறிந்ததே. காரணம் நாம் எப்போதும் சொல்வதுப் போல மனிதனால் இயற்றப்படக் கூடிய எந்தச் சட்டமும் எப்போதும் நிரந்தரத் தீர்வைத் தராது.

ஏனென்றால் இதை இயற்றுபவர் ஒரு சாராரை சார்ந்தவராக, அவர்கள் மட்டும் திருப்தி கொள்ளும் வகையில் இயற்றியிருக் கலாம். அல்லது மனோ இச்சையை பின்பற்றி இருக்கலாம். அல்லது மனிதன் இயல்பாகவே தவறு செய்பவன் தான் என்ற ஒற்றை விதியில் அனைத்தும் அடங்கிப் போகும்.


மனித குலம் எதிர் கொள்ளும் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு இஸ்லாமே ஆகும். இதில் அனைத்துப் பொருளாதார பிரச்சனை களுக்கும் இஸ்லாம் தீர்வை சொல்கிறது.

மேற்சொன்ன ஒரு பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வை வழங்கி மனித குலத்தை காப்பாற்ற இஸ்லாம் வழங்கிய ஒரு பொருளாதார திட்டம் தான் இஸ்திஸ்னா ஆகும்.

### இஸ்திஸ்னா

இஸ்திஸ்னா - இதன் வேர்ச்சொல் சனா. அதற்கு உற்பத்தி செய்யப்படுவது அல்லது கட்டுமானம் செய்யப்படுவது என்று பொருள். அடுக்கு மாடி குடியிருப்பு, நட்சத்திர ஓட்டல், விமானம் தயாரிப்பு போன்ற பல பெரும் திட்டங்கள் இஸ்திஸ்னா மூலம் அரபுலக நாடுகளில் நடந்துக் கொண்டிருக்கிறது.

இது எவ்வாறு இயங்குகிறது என்று வரைபடத்துடன் இப்போது பார்ப்போம்;




உதாரணத்திற்கு ஓர் அடுக்கு மாடி குடியிருப்பை வைத்துக் கொள்வோம்.

வாடிக்கையாளர் ஓர் அடுக்கு மாடி குடியிருப்பை கேட்டு வங்கியை வேண்டுகிறார்.

வங்கியும் வாடிக்கையாளரின் தேவையை, அவரது நம்பகத் தன்மையை அறிந்து அதனை ஏற்றுக் கொள்கிறது.

வங்கி நேரடியாக கட்டுமானத் தொழிலில் ஈடுபடாததால், அது ஒரு கட்டுமான நிறுவனத்தை அணுகி அதன் தேவையை பூர்த்தி செய்ய ஒப்பந்தம் செய்கிறது. பணத்தையும் பகுதிகளாக செலுத்துகிறது.

கட்டுமான நிறுவனம் வங்கியின் மூலம் அவ்வப்போது கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஒரு குடியிருப்பைக் கட்டி வங்கிக்கு கொடுத்து விடுகிறது.

வங்கியும் நிறுவனத்திடம் போடப்பட்ட ஒப்பந்தத் தொகையை பகுதிகளாக செலுத்தி முடிக்கும்.

வாடிக்கையாளர், அவர் கேட்டதைப் போலவே அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை அவருக்கு அளிக்கும். அவர் அதற்குறிய பணத்தை முழுவதுமாகவோ, அல்லது மாதத் தவணையிலோ வங்கிக்கு செலுத்துவார்.

இதில் அந்த குடியிருப்பு, வாடிக்கையாளர் கோரியதுப் போன்று அமையாவிட்டால் அதை நிராகரிக்க அவருக்கு உரிமை உண்டு. அவர் பணத்தை முழுவதுமாக செலுத்த வேண்டிய அவசியமும் அவருக்கில்லை.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல மாதமாதமோ, அல்லது பகுதிகளாகவோ செலுத்தலாம்.

வங்கியும் பகுதிகளாக பணத்தை செலுத்தும் போது கட்டுமானப் பணிகளை கண்காணிக்கும். காலம் தாமதமாகின் அது ஒப்பந்தத் தொகையை மாற்றிக் கொள்ளவும் வழி உண்டு.

கட்டுமான நிறுவனம் சரியாக இயங்கும் பட்சத்தில் வங்கியின் மூலம் அதன் தொழிலும் பெருகும்.

இதன் மூலம் அனைவரும் பாதுகாக்கப்படுவர். தொழிலும் பெருகும்.

வங்கியும் இதில் இடை நிலையில் உள்ளதால் விற்கும் போது லாபமடையவும் வாய்ப்புள்ளது.

இதுப் போன்ற பயனுள்ள திட்டங்கள், சமகாலத்தில் வட்டி அதிகமாக புழங்கிக் கொண்டிருக்கும் கட்டுமானத் துறையில் காலத்தின் தேவையாகியுள்ளது.

அதன் மூலம் அனைவரும் பயனடைவர். இன்ஷா அல்லாஹ் தொடரும்.




# பர்தா எனும் இஸ்லாமிய ஆடை

செப்டம்பர் 11, 2001 அன்று நியூயார்க்கின் உலக வர்த்தக மையத்தின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது உலக மக்களின் பார்வை திரும்பியது.

முஸ்லிம்கள் "தீவிரவாதிகள்" என்ற மீடியாவின் சித்தரிப்பை மீறி முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை அறியும் ஆர்வம் ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக உலக ரவுடி அமெரிக்கா, ஆஃப்கான் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஆஃப்கானுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது.

அந்த நேரத்திலும் ஆஃப்கானிஸ்தான் பெண்கள் தங்களது பாரம்பரிய உடையைத் தரித்து பர்தாவைக் கடைபிடித்தது உலகுக்கு அதிர்ச்சியூட்டியது. பர்தா குறித்து உண்மையிலேயே முஸ்லிம் பெண்மணிகள் என்ன நினைக்கிறார்கள் என்ற ஓர் ஆய்வை Savvy என்ற ஆங்கில இதழ் பிப்ரவரி, 2002இல் நடத்தியது. அதன் தமிழாக்கமே இது.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் அதிலும் குறிப்பாக படித்த இளம் பெண்கள், வேலை பார்க்கும் பெண்கள், குடும்பத் தலைவிகள் இவர்கள் எல்லாம் பர்தா அணிவதை ஒரு கண்ணியமான - மரியாதைக்குறிய செயலாகத்தான் கருதுகிறார்கள்.

### இர்யம் அன்சாரி(40)

மும்பை பந்தாரா புறநகர் பகுதியிலிருக்கும் புகழ் பெற்ற உருது பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவர் கடந்த 18 ஆண்டுகளாக பர்தா அணிகிறார்.

என் வீட்டில் யாருக்கும் பர்தா அணியும் பழக்கம் இல்லை. நானும் பர்தா அணிவேன் என்று நினைத்துக் கூட பார்த்ததில்லை. ஒரு நாள் தோழி ஒருத்தி என் வீட்டுக்கு வந்தாள். அவள் பர்தா அணிந்திருந்தாள். அவள் தான் எனக்கு பர்தா பற்றி சொன்னாள்.

இது சம்பந்தமான திருக்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் (நபிகளாரின் போதனைகள்) விரிவாக எடுத்துரைத்தாள். அந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. அன்றிலிருந்து நானும் பர்தா அணிய ஆரம்பித்தேன்.

-தனக்கு புர்கா அறிவூட்டிய தோழியை நன்றியோடு நினைவு கூர்கிறார் இர்யம்.

### ஸமீரா ஹஸன்(25)

கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையைச் சேர்ந்தவர் இவர். புர்கா அணிவதில்லை. ஆனால் அணிபவர்கள் மீது ஒரு தனி மரியாதை வைத்திருக்கிறார். அவருடைய கருத்து இது:

பர்தா அணிவது அவரவர் விருப்பத்தைப் பொருத்த விஷயம். (ஆனால் இஸ்லாம் பெண்கள் பர்தா அணிவதை கடமையாக்கி இருக்கின்றது.) அவர்களாகவே விரும்பி அணிந்தால் அதன் பெருமையும், புனிதத்

தன்மையும், அதை அணிவதால் பெண்ணுக்குக் கிடைக்கும் மரியாதையையும் புரிந்து கொள்ள முடியும். திணிப்பு சுமையாகிவிடும். அதே நேரத்தில் எனக்கு ஒரு விஷயம் மட்டும் விளங்கவில்லை.

முஸ்லிம் பெண்கள் பர்தாவை விரும்பி ஏற்பதை மக்கள் ஏன் ஒப்புக்கொள்வதில்லை? என்பது தான் அது. ஆனால் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதை மிகவும் வசதியானதாகவும், மகிழ்ச்சியானதாகவுமே கருதுகிறார்கள் என்கிறார் அவர் தொடர்ந்து,

இன்று எல்லோருக்கும் பர்தா (இஸ்லாமிய ஆடை) மேல் ஏற்பட்டு இருக்கும் வெறுப்புக்குக் காரணம் மீடியாதான் என்பதை நான் உணர்கிறேன். அண்மையில் நமது மீடியா ஆஃப்கானிஸ்தானில் பெண்கள் பர்தாவை (இஸ்லாமிய ஆடைகளைத்) தூக்கி வீசி விட்டார்கள் என்றொரு செய்தியைப் பரப்பின.

ஏனெனில் இப்போது (வெளிப்படையாகச் சொன்னால் தாலிபானின் ஆட்சிக்குப் பின்னால்) பர்தா அணிவது கட்டாயக் கடமை இல்லையே என்று காரணமும் சொல்லி இருக்கிறது. இது ஆஃப்கானிஸ் தானில் கட்டாயப் படுத்தப்பட்டதால் தான் பெண்கள் இஸ்லாமிய ஆடையை அணிகின்றார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. இது உண்மையல்ல.

(முஸ்லிம் பெண்கள் தாங்களாக விரும்பித்தான் இஸ்லாமிய ஆடைகளை அணிகின்றார்கள் என்கிறார் ஸமீரா விரிவாக.)

**சீமா அனீஸ் அக்தர்(25)**

இந்தப் பெண்மணி டாக்டர் பாபா சாஹிப் அம்பேத்கர் மாநகர மத்திய இரயில்வே மருத்துவமனையில் பயின்று வருகின்றார். காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் ,முதுநிலைப் பட்டப் படிப்பைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் சீமா தன்னுடைய சக மாணவிகளுக்கு ஓர் அதிர்ச்சியைத் தந்தாள். அது அவள் இஸ்லாமிய ஆடையை அணிந்து மருத்துவமனைப் பயிற்சியைத் தொடங்கியது தான்.

மருத்துவத்திற்கு படிக்கும் ஒரு மாணவிக்கு அவள் மருத்துவமனைக்குள் புகுந்து மருத்துவத்தில் நேரடிப் பயிற்சி எடுப்பது வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குவது தான்.

நான் என் வாழ்க்கையின் இந்தப் புதிய அத்தியாத்தை இஸ்லாமிய ஆடையை அணிந்து தொடங்கினேன். இன்று சமுதாயச் சூழலில் இது மிகவும் கடினமான ஒரு முடிவாகத்தான் தெரிந்தது. எனினும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவது என்று முடிவு எடுத்திருந்தேன்.

நான் என் பள்ளி நாட்களிலிருந்தே இப்படியொரு எண்ணத்தை வளர்த்து வந்தேன். என் குடும்பத்தைச் சார்ந்த எல்லாப் பெண்களும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிகின்றார்கள். அவர்களை யாரும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணியச் சொல்லி கட்டாயப்படுத்தியதில்லை. நாங்கள் எங்கள் விருப்பப்படி முடிவு செய்து கொள்ளலாம் என விட்டு விட்டார்கள் என்கிறார் சீமா.

இஸ்லாமிய ஆடைகளை அணிவதற்கு முன்னால் சீமா தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்.

இஸ்லாமிய ஆடை அணிவது என்பது, எடுத்தேன் கவிழ்த்தேன் எனத் திடீரென எடுத்துக் கொள்வது. பின்னர் விட்டு விடுவது என்ற அடிப்படையில் உள்ள விவகாரமல்ல. அது அணியத் தொடங்கினால் வாழும் நாள் முழுவதும் அணிந்திட வேண்டிய ஒன்று. எப்போதும் கைவிட்டிட இயலாது. இன்று நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். நான் எடுத்த முடிவைப் பற்றி நான் எள்ளளவும் கவலைப் படவில்லை. உண்மையைச் சொல்வதானால் நான் அணிந்தருக்கும் ஆடையால் நான் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறேன். குறிப்பாக இரவு நேரங்களில் அது என்னுள் அலாதியான பாதுகாப்புணர்வை ஊட்டுகின்றது. இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிந்திருக்கும் பெண்களை யாரும் கண்டு கொள்வதில்லை. இது எனக்கு மிகவும் வசதியாகப் போய் விட்டது. என்கிறார் தெளிவாக.

பர்தா அணிந்திருக்கும் பெண்களைப் பற்றி ஏற்படுத்தி இருக்கும் தவறான எண்ணங்களைப் பொறுத்தவரை சீமா இப்படிக் குறிப்பிடுகின்றார்:

மிகவும் குறைவாக ஆடை அணிந்திருக்கும் பெண்களை மலிவானவர்கள், இழி வானவர்கள் என்று முத்திரை குத்தி விடுவது அநியாயமானது. அதேப்போல பர்தா அணிந்த பெண்களைப் பரிதாபத்திற்குரிய வர்கள் என எண்ணுவதும் தவறு. ஒரு புத்தகத்தை அதன் அட்டையை மட்டுமே கொண்டு மதிப்பிடுவது முட்டாள்

*தனமானது.*

*சீமாவைப் பொறுத்தவரை ஒருவர் அணிந்திடும் ஆடை என்பது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. அது பொது மக்களின் விவாதத்திற்குரிய ஒன்றல்ல.*

*பல பெண்களுக்கு இஸ்லாமிய ஆடை அணிவது என்பது மதத்திற்கு அப்பாற்பட்ட விஷயம்.(இது Savvy) பத்திரிகையில் தனிப்பட்டக் கருத்து).*

**ருத்தார் அக்பர்(29)**

*இந்த பெண்மணி இஸ்லாமிய முறைப்படி ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சி அடைகின்றாள். காரணம் அது அவருடைய கணவனை மகிழ்ச்சியடையச் செய்கின்றது.*

*நான் என் கணவனை மகிழ்விக்க புர்கா அணிந்தால் அது ஏன் அவ்வளவு பெரிய விவாதமாக மாற வேண்டும்? சாதாரணமாக பெண்கள் தங்கள் கணவர்கள் விரும்புவது போல் தங்கள் வனப்பை வடிவமைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அது யாரையும் தொந்தரவு செய்யவில்லை!என்கிறார் ருத்தார்.*

**ராபியா ஷேக்(32)**

*இவர் பர்தா அணிவது குறித்து முற்றிலும் மாறுபட்டதொரு காரணத்தைச் சொல்கின்றார்:*

*நான் நீண்ட கோட் வடிவிலான மேற்கத்திய பர்தா உடையால் மிகவும் கவரப்பட்டேன். என்னுடைய வகுப்பில் படித்த தோழிகள் அதை அணிந்து வரும்போதெல்லாம் நான் அதை அணியத் தொடங்கினேன். நான் இதில் மிகவும் புதுமையாக ஈரானிய பர்தாவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். என்னுடைய நண்பர்கள் எல்லோரும் நான் அந்த பர்தாவில் அழகாக இருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய பெற்றோர்களும் அதனை விரும்பினார்கள். என்னுடைய மார்க்கம் சொன்னதையும் செய்த திருப்தி எனக்கு. குழந்தை வளர்ப்பும் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவதில் மிகவும் அழகியதோர் பங்காற்றுகின்றது. குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் இஸ்லாமிய முறைப்படி ஆடை அணிவதைப் பார்த்து வளர்கின்றார்கள். அவர்கள் ஆளாகும் போது, அவர்கள் அதைத் தவிர வேறு வகையான ஆடைகளை விரும்புவதில்லை.*

*இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் பர்தா என்பது பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற ஒன்றல்ல. மாறாக அது பெண்களின் விருப்பம். அவர்களின் சிறப்பம்சம்.* **- MGM**

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் விற்பனை

### தேர்தல் ஆணையத்தின் உத்தரவால் குழப்பம்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (இவிஎம்) விற்பனை தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையம் (இசிஐ) வெளியிட்டுள்ள உத்தரவால் புதிய குழப்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மே 26-ம் தேதி இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. அதில் கூறப் பட்டுள்ளதாவது: தொழில்நுட்ப நிபுணர் குழுவால் அங்கீகரிக்கப் பட்ட தலைமைத் தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களை யாருக்கும் விற்பனை செய்யக் கூடாது.

அதே நேரத்தில் அனைவருக்குமான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் என்று வரையறுக்கப் பட்டிருக்கும் இவிஎம்-களை விற்பனை செய்யலாம். இந்த வகை இவிஎம்-களை மாநில தேர்தல் ஆணையங்களுக்கும், வெளி நாட்டிலுள்ள தேர்தல் அமைப்பு களுக்கும், இதர நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யலாம் என அந்த சுற்றறிக்கை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக இந்த இவிஎம்-களைத் தயாரிக்கும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (பெல்) மற்றும் இந்திய எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பொரேஷன் (இசிஐஎல்) நிறுவனங்களுக்கு தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவுகளை அனுப்பியுள்ளது. தலைமை தேர்தல் ஆணையத்தின் இந்த உத்தரவால்தான் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய பிரதேசத்தின் ஹனுவாந்தியா நகரில் கடந்த ஆண்டு நவம்பர் 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநில தேர்தல் ஆணையர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது ஏன் அந்த குறிப்பிட்ட இவிஎம்-களை விற்பனை செய்யக்கூடாது என்று சில தேர்தல் ஆணையர்கள் கேள்விகளை எழுப்பினர். இவ்வாறு அந்த இவிஎம்-களை விற்பனை செய்யக்கூடாது என்று தடை செய்வது வாக்காளர்களிடையேயும், அரசியல் கட்சிகளிடையேயும் குழப்பத்தை ஏற்படுத்தும். மேலும் இயந்திரங்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும். ஏன் இந்த உத்தரவை பெல், இசிஐஎல் நிறுவனங்களுக்கு தலைமைத் தேர்தல் ஆணையம் அனுப்பியது என்பது புரியவில்லை என்று மாநிலத் தேர்தல் ஆணையர்கள் கருத்து தெரிவித்தனர்.

மேலும் தலைமைத் தேர்தல் ஆணையம், மாநிலத் தேர்தல் ஆணையம் ஆகிய 2 தேர்தல் அமைப்புகளின் தேர்தல் நடை முறைகளும் ஒரே வகையானவை. இரண்டும் ஒரே வகையாக இருக்கும் நிலையில் இந்த உத்தரவு எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்று தேர்தல் ஆணையர்கள் அப்போது கருத்து களைப் பதிவு செய்துள்ளனர். மேலும் இந்த விவரங்களைத் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வது என்றும் அப்போது முடிவு செய்யப் பட்டது.இந்த விவரங்கள் தற்போது தான் தெரிய வந்துள்ளது. மத்தியபிரதேச மாநிலம் போபாலைச் சேர்ந்த சமூக சேவகர் அஜய் துபே என்பவர், தகவலறியும் உரிமைச் சட்டத்தின்(ஆர்டிஐ) மூலம் இந்தத் தகவல்களைப் பெற்றுள்ளார். – பிடிஐ




ஆகஸ்ட் 30,31

# கஷ்மீரில் காணாமல் போனவர்கள் தினம்

**The day of the disappeared Aug - 30-2018**

*1)* இது ஐக்கிய நாடு சபையால் அறிவிக்கப்பட்ட தினம்.

*2)* இதோ ஒரு விசாரணை எனக் கூறி நமது கஷ்மீர் பாதுகாப்புப் படையினரால் அழைத்துச் செல்லப்பப்ட கஷ்மீர் இளைஞர்கள் இவர்கள்.

*3) 1989* முதல் இன்று வரை இப்படி காணாமல் ஆக்கப்பட்ட ஆண்கள் 15,000 என்கின்றது காணாமல் ஆக்கப்பட்ட பெற்றோர்களின் குழுமம். (Association of the Parents of the disaprered).

*4)* கஷ்மீரில் இதுவரை 7000 அடையாளப்படுத்தப்படாத கூட்டுப் புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

*5)* இவற்றில் ஒவ்வொரு புதை குழியிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிணங்கள் புதைக்கப் பட்டுள்ளன. இவர்களுக்காக நீதி கேட்டு அந்த மக்கள் போராடிய போது பெல்லட் குண்டுகளைப் பாய்ச்சி அவர்களின் பார்வையை பறித்தது இப்போதைய மத்திய அரசு. அவர்களை வாழ்க்கை முழுவதும் முடமாக்கியது.

*6)* அந்த மக்கள் நீதிக்காக நமது நீதிமன்றங்களில் கடந்த *29* ஆண்டுகளாக போராடி வருகின்றார்கள். ஆனால் நீதி கிடைக்கவில்லை.

*7)* தங்களுடைய கணவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? இல்லையா என்பதை அந்த மக்கள் அறிந்திட இயலவில்லை. இதனால் அந்தப் பெண்களைப் பாதி விதவைகள் என அழைக்கின்றார்கள். அவர்களின் குழந்தைகள் பாதி அநாதைகள் என அழைக்கப்படுகின்றார்கள். (Half Widows and Half orphans) என்ற சொற்கள் புழக்கத்தில் உள்ளன.

*8)* இவை அல்லாமல், இரகசியப் புதைகுழிகள் ஏராளமானவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

*9)* இந்த இரகசிய புதைகுழிகளுள் ஏராளமான பிணங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த இரகசிய புதை குழியில் புதைக்கப்பட்டிருப்பவர்களும், அடையாளப்படுத்தப்படாத புதை குழிகளில் புதைக்கப்பட்டிருப்பவர்களும், வெளிநாட்டில் இருந்து கஷ்மீரில் ஊடுருவிய தீவிரவாதிகள் என்றது அரசு.

*10)* ஆனால் அவற்றில் ஓரிரு புதை குழிகளில் புதைக்கப்பட்டிருந்தவர்களின் சடலங்களை ஆய்வு செய்தபோது, அவர்கள் நமது கஷ்மீர் பிரஜைகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

*11)* ஆனால் அதற்கு மேல் எந்தப் புதை குழியையும் தோண்டிட மாட்டேன் என மறுத்து விட்டது அரசு.

*12)* நீதிக்காகப் போராடும் அந்த மக்களின் எல்லா முயற்சிகளிலும் துணை நிற்போம்.

*13)* கஷ்மீர் மக்களுக்கு நீதி செலுத்துவோம். அதன் மூலம் அந்த மக்களை நம்மோடு இணைப்போம். இந்தியாவின் ஒன்றுமையும்...! ஒருமைப்பாட்டையும் பாதுகாப்போம்..!!

மேலும் விளக்கம் பெற படியுங்கள் "கஷ்மீரின் பாதி விதவைகள்" வேர்கள் பதிப்பகம், விலை ரூபாய் *70 /-* (ஆகஸ்ட் *30* முதல் அக்டோபர் *30* வரை இந்நூலின் விலை ரூ. *50/-*)

இவண்
வைகறை வாசகர் வட்டம்,
நீதி - அமைதிக்கான மக்கள் இயக்கம்,

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadgur Street, chennai - 600 002